தமிழ்த் தென்றல்

8-9

6

மே-ஜூன், 1952

அ211, N4755
N52.6.8-9
209354

17
சென்னை
4 அணா

உழுது பயிரிட்டு உலகிற்கே உணவளிக்கும் உழவர்கள் விரும்புவதும்,

உடுக்க உடை நெய்து உலகிற்கே உடையளிக்கும் நெசவாளர்கள் விரும்புவதும்,

மற்றும் ஏனைய தொழிலாளர்கள் அனைவரும் விரும்புவதும்

எங்கள்

எம். கே. தியாகராஜ் போட்டோ பீடி

&

ராஜமயில் பீடிகளே!

ஆகையால் அன்பர்கள் அனைவரும் எங்கள் ரிங் லேபில்களைக் கவனித்து வாங்கி உபயோகியுங்கள்.

உங்கள் ஆதரவே எங்கள் பொக்கிஷம்.

கிளை நிலையங்கள்:

கோவில்பட்டி
விருதுநகர் &
சங்கரநயினார்கோவில்.

தயாரிப்பாளர்கள்:

எம். நே. டி. ராஜ் & சன்ஸ்,
பீடித் தொழிற்சாலை,
முக்கூடல் போஸ்டு.
(திருநெல்வேலி ஜில்லா)

விளம்பர மன்றம்:

"PERFUME PARADISE"

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் & பிரதர்ஸ்;
மதுரை, பெங்களூர் சிடி & சென்னை.

ரிஜிஸ்டர் No 3010.

மந்த்தோப்புமணிகட்டிச்சுவாமிகள்

சர்வரோக சஞ்சீவித் தைலம்

ஸ்நானம் செய்து சுகமடையுங்கள்

வியாபாரிகள். எல்லா ஊர்களிலும் எமது ஏஜண்டுகளை தெரிந்து வாங்குங்கள்.

S.P. வடிவேல்நாடார் அன் ஸன்ஸ்,
மந்த்தோப்புமணிகட்டிச்சுவாமிகள் சித்தவைத்தியசாலை விலம்பட்டி

மத்திய காரியாலயம்:- 25. சம்பந்த மூர்த்தி தெரு, மேலமாசி வீதி, மதுரை.

இந்திய நாட்டு இளைஞர் முதல் எல்லோருக்கும் திடகாத்திரம் அளிக்கவல்ல எமது

ஆர். எம். கே. பார்லி

குளுகோஸ் பிஸ்கோத்து தினுசுகளையே உபயோகியுங்கள்

ஆர்.எம்.கே. அன்சன்ஸ் பேக்கர்,
59. டவுன் ஹால் ரோடு, மதுரை.

புரோப்:— ஆர்.எம். கருப்பையா பிள்ளை

எமது கிளை: 13, 14, திண்டுக்கல் ரோடு, (பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரில்) மதுரை.

மதுரையிலே மக்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாகி அனுதினமும் அமோக ஆதரவு பெற்று வருகிறது

சிட்டி ஆக்ஷன் ஹால்

18, மேலாவணி மூல வீதி, மதுரை.

உறுதியான இரும்புப் பெட்டிகள், விதவிதமான தேக்கு, தோதகத்தி, கண்ணாடி, சாதா பீரோக்கள், இன்னும் இதர பான்ஸி சாமான்கள் சரசமான விலையில் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான இடம்.

உரிமையாளர்: **எம். எஸ். வீரப்ப பிள்ளை**

“ராஜன்”

பாலசுப்ரமணியர் மார்க்கு
நயம் சூடன்

தயாரிப்பவர்:

அ. சொ. பூ. வன்னிய நாடார்,
14, வெங்கலக் கடைத் தெரு,
மதுரை.

எங்களிடம், 1, 2, 3 தோலா சூடன் டின் & அட்டைப் பெட்டிகளும் ¼ ராத்தல் & பிரஸ் சூடன்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். எப்பொழுதும் எங்கள் ரிஜிஸ்டர் டிரேட் மார்க்கைக் கவனித்துப் பார்த்து வாங்கி உபயோகியுங்கள்.

இன்றைய நாட்டின் உடனடித் தேவை

உணவு, உடை முதலிய சகல சாமான்களையும் குறித்த நேரத்தில் பொறுப்புடன் பல ஊர்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான்.

அதனையே மக்கள் சேவையாகக் கொண்டுள்ள ஸ்தாபனம்

S. பாலு லாரி சர்வீஸ்

3, தானப்ப முதலி தெரு, மதுரை.

தினசரி மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சேத்தூர் வரை எமது சர்வீஸ் ஓடிக்கொண்டிருக்கிறது.

"ராஜன்"

தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: V.V. இராமசாமி M. L. A.

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்."

கொடி. 6	திருவள்ளுவராண்டு—1982 வைகாசித் திங்கள் 1ௌ (14—5—'52)	பூ 8

உள்ளுறை.

நவீன ஆரம்பம்	........தலையங்கம்	6
காலத்தின் கோலம்	....	15
மொழியாராய்ச்சி	........வித்துவான் ந. சேதுரகுநாதன்	17
மருத்துவ மண்டலம்	........டாக்டர் த. நவசிவாயம் I.M.P.	21
கூண்டுக்கிளி	........ஆர். ஸ்ரீதேவி அம்மாள்	25
கிழக்கும் மேற்கும்	........ப. சி. அ. வணங்காமுடி.	32
சிந்தனை சிறகினிலே	........டி. என். கிருபேந்திரபாபு பி. எஸ்ஸி. (ஹானர்ஸ்)	43
பொன்னம்மா என் காதலி	........நாமக்கல் ரா. பாலசுப்பிரமணியம்	46
இலக்கியமும் கலையும்	........டர்பன் திரு. ச. மு. பிள்ளை	49
தங்கமோ தங்கம்	........க. இராமையா	51
சிஸ்டர் சிங்காரம்	........விருதை ந. இராமசாமி	53
ஜூபிடர் ராணி	........என். ஆர்.	66
மைத்துனி	........(தொடர் காவல்) 'ஜீவா',	69

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே! கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த்தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத் திரும்பவெளியிடும் உரிமையுடையவராகார். [ஆசிரியர்.

நவீன ஆரம்பம்!

அமுலுக்கு வந்த அரசியல் திட்டமோ புதியது. அதன்படி தேர்தல் நடந்ததோ புதியது. வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்கு உரிமை கொடுக்கப்பட்டதும் புதியது. வாக்காளர்கள் தத்தம் விருப்பத்தைத் தெரிவிக்கக் கொடுக்கப்பட்ட சின்னங்களும் புதியனவே. ஏற்பட்ட சட்டசபையும் புதியது, சபைக்கு அமைக்கப்பட்ட கட்டடமும் புதியது. உறுப்பினர்களும் ஒரு சிலர் தவிர ஏனையோர் அனைவரும் புதியவர்களேயாவர். அரசாங்கக் கட்சித் தலைவரும் இச்சபைக்கு புதியவர் தாம். எதிர்க் கட்சித் தலைவரின் கூட்டமைப்பும் புதியது. முதலமைச்சர் வந்த வழியும் புதியதே.

மே திங்கள் ஆறாம் நாள் புதிதாக புது சட்டசபை புதுக் கட்டடத்தில் குடிபுகும் நாள். இக்கட்டடத்துக்குச் செல்லும் வழிகளில் எல்லாம் போலிசுப்படைகள். குதிரை மேல் ஏறியிருந்தவர்கள், மோட்டாரில் வீற்றிருந்தவர்கள், குறிப்பிட்ட இடங்களில் நின்றவர்கள் கையில் துப்பாக்கிகள். உள்ளே செல்கின்றவர்கள் யாராயிருந்தாலும் அனுமதிச்சீட்டு காண்பிக்கவேண்டும். இல்லாவிட்டால் வெளியே நிறுத்தப்படுவார்கள். இந்த முறையும் புதியதே.

இந்தக் கோலாகலத்துடன் காலை 11 மணிக்கு ஆரம்பித்து தலைவர், துணைத்தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மாலை 5 மணிக்கு புதிய கவர்னரும் தன் பரிவாரங்களுடன் வந்தார், புதிய சபையிலே முதன் முதலாகப்

பேச. அவர் பேச எழுந்ததும், அவரை மடக்கி பேசவிடாமல் எதிர்க்கட்சித் தலைவர் கண்டித்துப்பேசியதும் புதியதோர் காட்சியே! அப்படி அனுமதித்ததும் எங்குமில்லாததாகுமே! பேசி முடித்துக்கொண்டு தானும் தன் கட்சி உறுப்பினர்களும் வெளியேறியதும் புதுமையே!

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியேறியதற்கு கூறும் காரணங்கள் இரண்டு. முதலாவது: காங்கிரசு உறுப்பினர்கள் 152, எதிர்க்கட்சியாளர்கள் 166 பேர். பின்னவர்கள் ஒன்றுசேர்ந்து அமைச்சர் அவையை ஏற்று நடத்துவதற்கு முன்வந்தும், தலைவரைக் கூப்பிட்டு விளக்கங்கேட்காமலும், சிறுபான்மை கட்சியினருக்கு உயிரளிப்பதற்காக, ஒருவரை மேற்சபையில் நியமித்து அவரை காங்கிரசுக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி வழி செய்து, அதன் பிறகு அவரிடம் முதலமைச்சர் பொறுப்பைக் கொடுத்ததும், சட்டத்தின் நோக்கத்துக்கும் மரபுக்கும் முரணானது என்பதாகும்.

அதாவது அமைச்சராக வருபவர் மேல் சபை அல்லது கீழ்சபை இரண்டிலொன்றில் உறுப்பினராக இருக்கவேண்டும், இல்லாவிட்டால் ஆறு மாதங்களுக்குள் உறுப்பினராய் விடவேண்டும், இல்லையேல் பதவிபோய் விடும் என்று சட்டத்தில் 164-வது பிரிவில் சொல்லியிருக்கிறது.

காங்கிரசு மேலிடத்தாரின் மரபு என்னவென்றால், மந்திரிகள் அதுவும் குறிப்பாக முதலமைச்சராக வருகிறவர் தேர்தல் மூலமாக வெற்றி பெற்றிருக்கவேண்டும். அதிலும் கீழ் சபையின் உறுப்பினராக இருக்கவேண்டும். இது தான் நேர்மையானமுறை. பம்பாயில் முதலமைச்சராக வந்திருக்கும் "தேசாய்" கீழ் சபைத் தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டார். ஆனால் மேல்சபைக்கு இன்னொரு தொகுதிமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், பம்பாய் சட்ட

சபைக் காங்கிரசு கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னர் தான் முதலமைச்சராகவும் நியமிக்கப்பெற்றார். பின்னர் கீழ்ச்சபைக்கு மற்றொரு தொகுதியில் நின்றுள்ளார்.

பம்பாய் சட்டசபையிலே காங்கிரசுகாரர்கள் எண்ணிக்கை பெருமிதமாகும். அப்படியிருந்தும் (தோற்கடிக்கப்பட்ட) "தேசாய்" முதலமைச்சராக வரவேண்டுமென்று ஒருமனதாக உறுப்பினர்கள் தீர்மானித்தபடியால், காங்கிரசு மேலிடத்தாரும் இணங்கினார்கள். ஆனால் இங்கு நடந்திருப்பது என்ன !

சென்னை சட்டசபை காங்கிரசு கட்சி சிறுபான்மையாகிவிட்டது. அப்படியிருந்தும், அக்கட்சிக்குத் தகுந்த ஒரு தலைவரை, ஒருமனதாக ஒரு நபரை, தேர்ந்தெடுக்க முடியாமல் திணறினார்கள். கட்சியும் உலைந்துபோகும் தருவாயை அடைந்தது. அத்தருணத்தில் "குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதுபோல்" ஏழு ஆண்டுகள் காத்திருந்த ராஜாஜியின் நண்பர்கள் தங்கள் திறமையைக்காட்டி வெற்றி பெற்றார்கள்.

கட்சிக்குள்ளிருந்த (பிராமணரல்லாத) தலைவர்களிடம் சகிப்புத்தன்மை கொஞ்சம் இருந்திருந்தால், ராஜாஜி நுழைந்திருக்க முடியாது. மேலும் நாட்டுக்குப் பிடித்தமான மந்திரி சபையும் உறுதியாக அமைந்திருக்கும். எங்கும் திருப்தியும் அமைதியும் நிலவுமென்பதிலும் ஐயமில்லை.

பம்பாயில் 'தேசாய்' தேர்தல் மூலமாக உள்ளே நுழைந்திருக்கிறார். ஆனால் "சி. ஆர்." தள்ளாமையும் உடல்நிலையும் காரணமாக தேர்தலில் ஈடுபட முடியாதென்று சொல்லி நியமனம் மூலமாக நுழைந்திருக்கின்றார் !

மேல்சபைக்கு கவர்னர்நியமனம் செய்வது பொறுப்பிலிருக்கும் முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் நியமனம் செய்ய வேண்டுமென்பது மரபு.

— தமிழ்த்தென்றல்

ஆனால்சென்னை கவர்னரோ, தன்எதேச்சாதிகாரத்தில் செய்திருக்கிறார். சட்டம் 171-வது 5 ஆம் உட்பிரிவின்படி கவர்னர் ஆட்களை நியமிக்கும்போது, மொழிப்புலமை, விஞ்ஞானம், கலை, கூட்டுறவு இயக்கம், சமூக சேவை இவைகளில் தனிப்பட்ட அறிவுத்திறனும், நடைமுறை அனுபவமும் உள்ளவர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மந்திரி சபை வருமுன் கவர்னர், ராஜாஜி, ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், முகம்மது உஸ்மான் இவர்களை நியமித்தார். இவர்கள் மேலே சொன்ன ஐந்து இலக்கணங்களில் எதற்கு இலக்கானவர்கள் என்பதை இதைப் படிப்பவர்கள் சிந்தித்து பார்க்கவேண்டும்! உத்திரப் பிரதேச கவர்னர் நியமனம் செய்திருக்கும் முறையையும், மைசூர் ராஜப்பிரமுகர் கடைப்பிடித்த வழியையும் சென்னையாளர் செய்திருப்பதையும் பார்த்தால் உண்மை விளங்கும்.

ராஜாஜி ஒரு வழக்கறிஞர். பெரிய அரசியல் மேதாவி என்றுதான் நாடு அறியும். இப்படியிருக்க தன்னை நியமித்தது சட்டப்படி சரியென்று ராஜாஜியே வாதாடுவது கௌரவமாகுமா ?

அடுத்தபடியாக ராஜாஜி அரசாங்கப் பொறுப்பை ஏற்றதின் காரணமாகத்தான் கட்சி பலம்பெற்று, பெரும்பான்மையாகிவிட்டது. ஆகவே அவரை நியமித்தது சரியென்று சொல்லப்படுகிறது. இந்த நியாயம் பலனையடைய கடைப்பிடிக்கும் வழிகளை பலனைக்கொண்டு நன்மையானவைகள் என்று சொல்லும் வாதமேயாகும்.

தன் கைகளைக் கழுவிவிட்டு, தில்லிக்குச் செல்லும் முன்னாள் தமிழ்நாடு காங்கிரசு ராஸ்ட்ரபதி தன் நெற்றிக்கண்ணைத் திறக்காமலிருந்திருந்தால், கோவை சுப்பிரமணியம் காங்கிரசு சட்டசபைக்கட்சித் தலைவராக வந்திருக்கக்கூடும். முதல

— தமிழ்த்தென்றல்

மைச்சராகவும் வந்திருப்பார். அவருக்கும் பெரும்பான்மையும் சேர்ந்திருக்கும். ஆகையால் மெஜாரிட்டி பலம் இப்போது வந்துவிட்டது என்று சொல்வது சட்டத்தின் நோக்கத்துக்கும், தாங்கள் தம்பட்டமடிக்கும் சம்பிரதாயத்துக்கும் முற்றிலும் விரோதமானதென்பதை உணர்வார்களாக.

இரண்டாவதாக கூறப்பட்ட காரணம் என்னவெனில்: கிரிமினல் சட்டம் 144-வது பிரிவின்படி உத்தரவு போட்டு, அமுல் நடத்தியதைக் கண்டிப்பதாகும். சட்டசபையில் கம்யூனிஸ்டுகளும் ஐக்கியஜனநாயக முன்னணிக் கட்சியைச்சேர்ந்த உறுப்பினர்களும், அவர் தம் அனுதாபிகளும் சபைக் கட்டடத்துக்கு முன்பு அன்றையநாளில், ஏதோ ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக அரசாங்கத்துக்கு தெரியவந்ததால், இந்த உத்தரவு போடப்பட்டதென சொல்லப்பட்டது.

இந்தப்படி உத்தரவைத் தான் தான் போடச் சொன்னதாக முதலமைச்சரும் ஒப்புக்கொண்டார். அதுவுமல்லாமல், அந்த உத்தரவுபோட்டதின் பலனாக ஆர்ப்பாட்டம் நடைபெறாமல் அமைதி நிலவியதென்று பரவசத்துடன் வாதாடினார்.

இதுவும் பலனைக்கொண்டு வழியை உறுதிசெய்யும் முறையே தவிர வேறொன்றுமில்லை!

எந்தவிதமான ஆர்ப்பாட்டம் செய்வதாக எந்த உறுப்பினரும் மனதில் கொள்ளவில்லை. எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவுமில்லை. அப்படியிருக்க உறுப்பினர்கள்மேல் வீண்பழியைச் சுமத்தியது அவர்களின் உரிமையையும், கௌரவத்தையும் பாதிக்கிறதென்று எடுத்துக்கூறியதை விசாரணைக் குழுவுக்கு அனுப்ப ஒப்புக்கொண்டிருந்தால், எவ்வளவோ பெருந்தன்மையாக இருந்திருக்கும்.

— தமிழ்த்தென்றல்

மேலும் சொல்லுகிறோம். விசாரணையின்றி இந்த 144 உத்தரவுபோட்டது, சுயமரியாதையுள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் உறுத்தியது. எனவே இந்த உத்தரவு போடப்படாமலிருந்தால், இந்த வெளியேறும் நிகழ்ச்சியே உறுதியாக நடந்திருக்காது.

சட்டசபை நடவடிக்கைகளிலே எழுத்திலிருக்கும் சட்டங்கள், விதி இவைகளைக் காட்டிலும் தொன்றுதொட்டு வளர்ந்துவரும் சம்பிரதாயப் பழக்கவழக்கமிருக்கிறதே, அவைதான் மிகவும் காப்பாற்றி போற்றப்பட வேண்டியவைகளாகும்.

இந்த மரபு என்பது தனிப்பட்டவர் ஏற்படுத்துவது ஒன்று. மற்றொன்று பலதரப்பட்டவர்கள் ஒன்றுசேர்ந்து உண்டாக்குவது.

சட்டசபைத்தலைவர் தேர்தலிலே எதிர்க்கட்சியாளர் சம்பிரதாயத்தை உடைத்துவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. பெரிய வழக்கறிஞர் ஒருவரும் கண்டித்து எழுதியுமிருக்கிறார்.

அவைத்தலைவர் தேர்தலில், தலைவர் கலந்துகொள்ளாமலிருப்பதும், சட்டசபை நடவடிக்கைகளில் தன்னுடைய வாக்கைக் கொடுக்காமலிருப்பதும், தனிப்பட்ட ஒருவர் உண்டாக்கிக்கொள்ளும் மரபு ஆகும். ஆனால் தலைவர்தேர்தலில் போட்டியேற்படாமல், ஒரு மரபு ஏற்பட வேண்டுமானால் எல்லாக் கட்சிகளும் ஒருமனப்பட வேண்டுமல்லவா?

அரசாங்கக் கட்சித் தலைவராக இருப்பவர், ஏனைய கட்சித் தலைவர்களையணுகி முயற்சித்திருந்தால், தலைவர் தேர்தலில் போட்டி வந்திருக்காதென்று உறுதியாகச் சொல்லுகிறோம். அதை விடுத்து தாங்கள் மற்றவர்களைக் கேளாமல், தானே ஒரு நபரைப் பொறுக்கியெடுத்துக்

— தமிழ்த்தென்றல்

கொண்டு 'அந்த ஆளை ஒப்புக்கொண்டால் சரி: இல்லாவிட்டால் தேர்தல் நடக்கட்டும் பார்ப்போம்'' என்று சொன்னால் மரபு எங்கிருந்து உதிக்கும்?

இப்பொழுது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. சிவசண்முகம் பிள்ளை, முந்திய சட்டசபையில் காங்கிரசின் அபேட்சகருக்கு விரோதமாகத் தன்னை நிறுத்தி ராஜாஜி வெற்றிபெறும்படி செய்தாரென்றும், ஆகவே இத்தடவையும் தனக்கு அவரின் ஆதரவு இருக்கின்றபடியால், போட்டி ஏற்பட்டால், உறுதியாக வெற்றி கிட்டுமென்று, நம்பியிருந்ததாகப் பேசியிருக்கிறார். உண்மை இவ்வாறிருக்க, எதிர்க்கட்சியினர் மரபு என்பதை அலட்சியப்படுத்துகிறார்கள் என்று காங்கிரசார் பழி சொல்வது, வெற்றியினால்கொண்ட இறுமாப்பு தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

சட்டசபையிலே காங்கிரசு கட்சிக்கு மாறுபட்டோர் கொண்டுள்ள எதிர்ப்புக்கும், நாட்டில் நடுநிலை மனம் படைத்த மக்கள் கொண்டுள்ள வெறுப்புக்கும் காரணம் முதலமைச்சராக வந்தது ராஜாஜி என்பதற்காக அல்ல. தனிப்பட்ட முறையில் நபர் மீது பொறாமையும் இல்லை. ஆனால், நியமனம் மூலமாக வந்த ஒரு நபரை முதலமைச்சராக நியமிப்பதுதான் உலகத்தில் எக்காலத்துமில்லாத விந்தை! இந்த முறை ஜனநாயக முறைக்கே ஒரு பெரிய பழி என்று சொல்லவேண்டும். இந்நிலையில் மரபு மரபு என்று பிதற்றுவதில் பொருள் இல்லை.

கவர்னர் நிகழ்த்திய சொற்பெருக்கில் உப்புமில்லை! சப்புமில்லை! தங்கள் கொள்கை என்னவென்று அரசாங்கத்தார் விளக்கந்தரவில்லை என்று எதிர்க்கட்சியிலிருந்து எடுத்துக் காட்டப்பட்டது. அதற்குப் பதில் கூறும்பொழுது "நாங்கள் சிறுபான்மையினர். எங்கள் மந்திரிசபை

— தமிழ்த்தென்றல்

நிலைக்குமா என்பது தெரியாது. ஆகையால் இப்பொழுது நாங்கள் எந்தவிதமாக நடந்துகொள்ளவேண்டுமென்பதை நீங்கள் சொல்வீர்களானால், அதன்படி வரவுசெலவு திட்டங்களை வகுத்து அடுத்த கூட்டத்துக்குக் கொண்டுவருகிறோம்'' என்று கூறியிருந்தால் நேர்மையாக இருந்திருக்கும்.

அதை விடுத்து தேர்தல் திட்டத்தைப் பாருங்கள் என்று சொல்லப்பட்டது. அந்தத் திட்டத்தை வைத்துத்தான் 372 காங்கிரசுகாரர்கள் போட்டியிட்டார்கள். 220 பேர் தோற்கடிக்கப்பட்டனர். எனவே அத்திட்டம் மக்களால் ஒப்புக்கொள்ளவில்லையென்றுதானே கொள்ளல்வேண்டும்.

பொதுவுடமைக் கட்சியை முறியடிப்பது தான் தம் கொள்கையென்று மார்பு தட்டினார் நம் ராஜாஜி. தேர்தல் நடக்கும்போது சொல்லவில்லை. கட்சிக்குத் தலைவர் தேடும்போதும் சொல்லவில்லை. பதவியேற்ற காலையில் சொல்லவில்லை. அதன் பின்னரும் சொல்லவில்லை. ஆனால் சட்டசபையில் மெஜாரிட்டி சேர்ந்துவிட்டது என்று தெரிந்தவுடனே வீரமுழக்கம் செய்துவிட்டார். ஆனால் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

“மழையில்லை. பெய்த மழையும் வீணாக ஓடிவிடாமல் தேக்கவுமில்லை. வயலுக்கு வேண்டிய தண்ணீர் குளத்திலுமில்லை. குடிப்பதற்குத் தண்ணீர் குழாயிலுமில்லை. இவ்வளவுக்கும் வேண்டிய மழை பெய்யாததற்குக் காரணமென்ன? அரசினர் செய்த பாவங்கள் தானே! அதற்கு கடவுளை வேண்டிக்கொண்டால் மட்டும் போதுமா?'' என்று ஒரு நண்பர் வினவினார்.

— தமிழ்த்தென்றல்

உடனே 'சி. ஆர்.' தனக்கு கடவுளிடத்தில் நம்பிக்கை யுண்டென்றும், வழிபாட்டிலும் நம்பிக்கையுண்டென்றும் இந்த நம்பிக்கையை யாராலும் அசைக்கமுடியாதென்றும், பாபங்கள் எல்லோரிடத்திலுமிருக்கலாமென்றும், செயற்கை மழையில் தனக்கு நம்பிக்கையில்லையென்றும் ஆகவே கடவுளை வழிபடுவதைத் தவிர வேறு வழியில்லை யென்றும் கடிந்துரைத்தார்.

தமிழ்த் திருமறையாகிய திருக்குறளை ராஜாஜி ஆங்கிலப்படுத்தியிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆதலால் திருவள்ளுவரின் சொல்லில் அவருக்கு நம்பிக்கையிருக்குமென்று எதிர்பார்க்கலாமல்லவா?

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

[நீதிமுறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைவும் ஒரு சேர ஏற்படுவனவாகும்.]

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

[அரசன் முறைதவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவ மழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்].

என்பது திருவள்ளுவரின் திருவாக்கு.

நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைவும் ஒருசேர ஏற்பட வேண்டுமானால், திருவள்ளுவர் வகுத்த அரசியல்படி ஆட்சி நிலைக்கவேண்டும்.

அதற்கேற்ப நல்லதோர் திட்டத்தை வகுத்து அடுத்த கூட்டத்துக்கு அரசினர் கொண்டு வருவாராக.

தமிழ் வெல்க.

காலத்தின் கோலம்



'நம் அய்யாவும் - அண்ணாவும்'

ராஜாஜிக்கு பத்து ஆண்டுகளுக்கு மூத்தவர் பிரகாசம்ஜி.

முன்னவர் தன் கருத்துக்கு இசைந்தாற்போல் நாட்டின் போக்கு இருப்பின், மும்மரமாக வேலை செய்வார். பிடித்தப்படாவிட்டால் திருக்குற்றாலத்திற்குப் போய் ஓய்வெடுத்துக்கொள்வார். உடனே ஏதாவது ஒரு பதவி வந்து இழுத்துக்கொண்டு போய்விடும்! இதுதான் அவருடைய வாழ்க்கையின் அனுபவம்!

இப்பொழுதிருக்கிற சென்னை முதலமைச்சர் வேலையைக்கூடத் திடீரென்று விட்டுவிடுவாரென்று எதிர்பார்க்கலாம். ஓய்வு, உபகாரச் சம்பளம் இருக்கவே இருக்கிறது அவருக்கு!

ஆனால் பிரகாசமோ! நாட்டுக்கும், கட்சிக்கும் உழைத்துஉழைத்து எல்லாம் இழந்து தோற்றுப் போய் நிற்பவர். மனவலிமை சிறிதும் குறையாத நெஞ்சம் படைத்தவர். எக்காரியத்தையும் கபடமில்லாமல் முரட்டுத் தனமாகச் செய்யக்கூடியவர். பிடித்த பிடியைவிட மாட்டார்.

ஆனால், ராஜாஜியோ தான் கொண்ட காரியத்தை சமயம் பார்த்து நாசுக்காக முடித்துக்கொள்வார். சட்டசபை மன்றத்தில் கவர்னர் பேசும்போது இடைமறித்துப் பேசியதற்காக பிரகாசத்தைக் கண்டிப்பதற்கு மேல் சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து இறுதியில் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

மேல் சபையிலே சி. ஆர். க்கு யானைப்பலம் இருக்கின்றது. அப்படி இருந்தும் ஏன் வாபஸ் பெற்றுக் கொண்டார்?

பெருந்தன்மைகொண்டு இருக்கலாமோ! இருக்காது. ஒரு வேளை பகவத் கீதை படிப்பதை நிறுத்தி, திருக்குறள் படிக்க ஆரம்பித்துவிட்டார் போலும்.

செல்லா இடத்துச் சினந்தீது
செல்லிடத்தும்
இல் அதனின் தீய பிற.

[பலிக்காத இடத்தில் (தன்னைவிட வலியவரிடத்தில்) சினம் கொள்வது தீங்கு, பலிக்கும் இடத்திலும் (பெரியவரிடத்திலும்) சினத்தை விடத் தீயவை வேறு இல்லை.]

— தமிழ்த்தென்றல்

என்று திருவள்ளுவர் எச்சரித்ததை படித்திருக்க வேண்டுமென்று நினைக்கிறோம்.

அல்லது இன்னொருகாரணமும் இருக்கலாம். "கிழவர் பிரகாசத்தின்மேல் அநாவசியமாக கண்டனத் தீர்மானத்தை எங்கள் சி. ஆர். கொண்டுவருவது கேடுகாலந்தான். மந்திரிசபையும் சீக்கிரம் கவிழ்ந்துவிடும்" என்று பெரிய பதவியை விரும்பவர்களும் பெரிய தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களும் ஆகிய பிராமணர்கள் சென்னையில் அலறிக்கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டுத்தான் ஒருவேளை சி. ஆர். மடங்கியிருக்கலாம்.

எவ்வளவு சண்டை போட்டாலும் இறுதியில் ஒருவருக்கொருவர் கேடு வராமல் பார்த்துக்கொள்கிறார்கள், அவர்கள்! ஆனால் நம் அய்யாவையும் பாருங்கள்! அண்ணாவையும் பாருங்கள்!!

உணவுப்பஞ்ச மந்திரி.

நம் மாகாணத்து மக்கள் எதிர்பார்ப்பது 'யார் மந்திரி எத்தனை மந்திரிகள்?' என்பது அல்ல. உண்ண உணவு வேண்டும். குடிக்கத்தண்ணீர்வேண்டும். இச்சங்கடங்களைத் தீர்ப்பதற்கு ஒருமுகமான முயற்சிவேண்டும். மற்றவைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டாலும் பரவாயில்லை.

ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள **கலெக்டர்**களுக்கு அந்தந்த வட்டத்தில் உள்ள குறைகளைத் தீர்ப்பதற்கு முழுப் பொறுப்பையும் கொடுக்கவேண்டும். ஒரு ஆண்டிக்குள் நல்ல நிறைவு காட்டவேண்டுமென்று உற்சாகப்படுத்தவேண்டும்.

அவர் செய்யும் வேலைகளில் யாருடைய குறுக்கீடும் இருக்கக்கூடாது. **கலெக்டர்**களும் நம்மவர்கள் ஆனபடியால் அவர்களுக்கும் ஆசையும், அக்கறையும் பொறுப்புணர்ச்சியும் இருக்கும் என்று நன்றாக நம்பலாம். அரசாங்கத்தில் எந்த வேலைக்கும் இடைஞ்சலாக இருப்பது "**சிவப்பு நாடா**" என்று கூறுவார்கள்.

இந்தத் தொல்லையை ஒழிப்பதற்கு, ஒரு தனி இலாக்கா அதாவது 'Works - Production - Supply' என்று அமைத்து அதை நிர்வகிக்கும் அமைச்சர் மற்ற இலாக்காக்களின் தயவை எதிர்பாராமலே, சகலவித காரியங்களையும் செய்யக் கூடிய அதிகாரம் உடையவராக இருக்கவேண்டும்.

மேலும் Public இலாக்காவையும் இந்த அமைச்சரிடம் கொடுத்துவிட்டால் ஒரு ஆண்டிக்குள் சமுதாயத்தின் நிலையை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து விடலாமென்று நம்புகிறோம்.

இந்தப்படி செய்வார்களா?

நேருவைப் பகைக்கும் ராஜாஜி!

சென்னை சட்டசபையில் சி. ஆர். கம்யூனிஸ்ட்கள் தம்முடைய எதிரிகள் என்றும் தாம் அவர்களுடைய எதிரி என்றும் அறைந்துசொன்னார்.

[தொடர்ச்சி 73-வது பக்கம் பார்க்கவும்]

— தமிழ்த்தென்றல்

மொழியாராய்ச்சி

[வித்துவான் ந. சேதுரகுநாதன்]

[பங்குனி இதழ் 66-ம் பக்கத் தொடர்ச்சி]

97. காரணம் என்பது தொல்காப்பியர் காலம்முதல் இன்றுவரை நன்றாக இருவகை வழக்கிலும் வழங்கி வருகின்ற இனிய தெளி தமிழ்ச்சொல். கரு என்பது பகுதி. கரு என்பதும் அண் என்பதும் அம் என்பதுஞ் சேர்ந்து முதனிலை நீண்டு கருவாக அணைந்த (அண்மி) நிற்பது என்ற பொருளைப் பயக்கின்றது. கருவி என்பது நல்ல தமிழ் என்பதனை மறுப்பாரிலர். "கருவி தொகுதி" என்பது தொல்காப்பிய நூற்பா. ஒரு பொருள் தோன்றித் தொழிற்படுதற்கு முதனிலையாய் அமைந்து நிற்பது எதுவோ அதுவே கரு. அது தொழிற்பட்டியங்குஞ் செயலே, (98) **காரியம்**. அஃதாவது கருவினது இயக்கம் என்று பொருள்படும். தோன்றி இயங்கும் பொருளுக்கு முதனிலையாக அணவி நிற்பதற்குக் "காரணம்" என்றும், அது தொழிற் பட்டியங்கும் நிலைக்குக் "காரியம்" என்றும் பெயரமைத்த முறைகள் சாலவும் பொருந்திய அழகு உடையன என்பது தமிழறிஞர் மனங்கொளற்கு உரிய உறுதியான உண்மையாகும்.

— தமிழ்த்தென்றல்

99. இலக்ஷணம். 100. இலட்சியம்

இலக்கினை அண்மி நிற்பது இலக்கணம் என்றும் அத்தகைய இலக்கினொடு தொழிற் பட்டியங்கி இன்னிசை மிகுத்து இயங்குவது இலக்கியம் என்றும் சொன்முறை அமைந்திலங்குவது போலவே காரணம் காரியம் என்பனவும் அமைந்து முதனிலை நீண்டுள்ளன. இவற்றைப் பற்றியவிரிவு "கொடியுங் குறிக்கோளும்" என்ற தலைப்பில் முன்பு எழுதப் பெற்றது. ஆதலின் ஈண்டு விரிவு வேண்டியதில்லை.

இத்தகைய சிறந்த **இலக்கணம்** என்ற தமிழ்ச்சொல்லை, இலட்சணம் என்ற வடசொல்லிலிருந்து வந்தது என்றும், இலக்கியம் என்ற தமிழ்ச் சொல்லை இலட்சியம் என்ற வடசொல்லிலிருந்து வந்தது என்றும் வாய்க்கு வந்தபடி உண்மை உணராமல் உரைப்பன நம்மால் ஒதுக்குதற்கு உரியன. வடமொழியில் இலக்கணத்தை வியாகரணம் என்ற பெயராலும் இலக்கியத்தைச் சாகித்தியம் என்ற பெயராலும் வழங்குகின்றனரேயன்றி, இலட்

சணம், இலட்சியம் என்று வழங்குவதில்லை. ஆகவே இச்சொற்கள் அங்கிருந்து வந்தன என்று வாய்க்கு வந்தபடி கூறுவது வாய்மையன்று.

இந்நான்கு சொற்களில் முன்னைய இரண்டும் முழுஉருவத்துடனும், பின்னைய இரண்டும் இடைதிரிந்தும் வடமொழியிற் சேர்க்கப்பட்டன. ஆகவே இவை நான்குந் தூய தமிழ்ச் சொற்களே, என்க. காரணம், காரியம், இலக்கணம், இலக்கியம் என்ற நான்கில் பின்லிரண்டன் திரியாகிய இலட்சணம், இலட்சியம் என்பன தமிழில் நம்மால் வழங்குதற்கு உரியன அல்ல. அந்நான்கு பொருளுணர்த்தும் சொற்களைத் தனக்கென இல்லாத ஒரு மொழியிருக்குமெனின் அது சிறப்பு உடையதன்று. இந்நான்கு சொற்களுக்கும் இலக்கியச் சான்று காட்டி விரிப்பதாயின் அது ஒரு பெருநூலாகவிரியும். அத்தகைய நல்ல தமிழ்ச்சொற்கள் இவை என்க.

101. உவமம் உவமை, உவமம், உவமானம் என்று பற்பல வேறுபாட்டுடன் வழங்கும் இச்சொல் நல்ல தமிழ்ச்சொல்.

'உ' என்பது உயர்வு குறிக்கும்.

உ, அமை என்றஇரண்டுங்கூடி 'உவமை'என்றாயிற்று. அப்பகுதியே 'அம்' பெற்று உவமம் என்றும் வரும். "உவமமும் பொருளும் ஒத்தல்வேண்டும்" என்பது தொல்காப்பியம். உவமை உயர்வாக அமைந்து நிற்கும் பொருள் என்று பொருள்படும். இனி 'உ' என்பது இரண்டு என்றும் பொருள் தருமாதலின் அவ்வாறு இணைந்த ஒற்றுமையுடைய இணைப் பொருள்களில் உயர்ந்ததைக் குறித்து நின்றது. ஆதலின் அது "உவமை" என்று கூறப்பட்டது. இதனையே தொல்காப்பியனார் "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்றனர். இத்தகைய அருமையான தமிழ்ச்சொல்லை "உவமா" என்ற வடசொல்லிலிருந்து வந்தது என நவிலுவது நகைப்புக்கு இடமாகுமென விடுக்க.

102 நாரம். நீர் என்பது இனிய தமிழ்ச்சொல் என்பது யாவரும் அறிவர். அடைமொழி பெற்றுத் தண்ணீர் வெந்நீர் முதலியனவாகவும் அச் சொல்வரும். "இதனை ஆரியச்சிதைவு என்பாரும் உளர்" என்று ஆசிரியர் சேனாவரையர் கூறி மறுத்துள்ளார். கூறி மறுத்த அளவில் நின்றனரேயன்றி நீர் என்பதுவே நீரம் என்றாகி நாரம் என்றும் ஆயிற்று என்பதைக் கூறவில்லை. ஆனால் மாதவச் சிவஞானமுனிவர் அதைக் கூறி மறுத்துள்ளனர். நீர் என்பதும் தமிழன்று என்று கூறுவது என்ன நீர்மையோ தெரியவில்லை.

103 திவ்வியம். இது "தீம்" என்ற தமிழடியாகப் பிறந்த சொல். "தீம்பால் கறந்த கலம்மாற்றிக் கன்றெல்லாம் தாம்பிற் பிணித்து" என்புழி "தீம்" என்பது இனிமை குறித்து நின்றது. அதுவே "தீவிய" என்றாகும். "வடிப்புறு நரம்பிற்றீ

வியமிழற்றி" என்ற பரணர் பாட்டில் தீவிய என்றாயிற்று. அதனை முதலிலே சுருக்கித் திவ்விய என்றும் 'திவியம்' என்றும் ஆக்கினர். "தெய்வம் உரைக்கும் திப்பியக் கிளவி" என்று மணிமேகலையில் வருகின்ற அடியிலுள்ள "திப்பியம்" என்பதும் வியக்கத்தக்க இனிமை என்ற பொருள்தருவதாய் "தீம்" "தீவிய" என்ற பகுதியிலிருந்து பிறந்த சொல்லே என்க. ஆகவே "திவ்வியம்" என்பது "தீவிய" என்ற சொல்லிலிருந்து வடசொல்லாளரால் திரித்து எடுக்கப்பட்டது என்க.

104 சுரபி. சுரத்தல் என்பது இனிய தமிழ். பால் சுரந்து, அருள் சுரந்து என்ற வழக்கு யாவரும் அறிவர். கறத்தல் என்பது பால் கறத்தலைக்குறிக்கும். கறக்கப்படுவது என்னுங் காரணத்தால் பசுவுக்குக் "கறவை" என்று தமிழன் காரணப் பெயரிட்டான். இது போன்று சுரப்பது 'சுரபி' என்ற பொருளில் 'சுரத்தல்' என்ற சொல்லினடியாக ஒரு சொல்லைப்படைத்து பசுவுக்குப் பெயராக வடமொழியாளர் வழங்கியுள்ளனர்.

105 சூக்குமம். சுருக்கம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து சுருக்கம் என்றொரு சொல்லாக்கி நூலின் சிறு பிரிவுக்கு வழங்கியுள்ளனர் என்பதை முன்பு கூறினோம். அதுவேயன்றிச் 'சுருக்கம்' என்பதில் இரண்டாவது எழுத்தில் உள்ள உகரத்தை முதலெழுத்தில் ஏற்றி ரகரம் கெடுத்துச் சூக்கம் என்றாக்கி இறுதியில் அம் சேர்த்துச் "சூக்கமும்" என்றாக்கினர். சூக்குமம் என்பதற்குச் சுருக்கமானது, நுட்பமானது என்பதுவே பொருள். நுண்ணுடம்பாகிய சுருக்கமான உடம்பை "சூக்கும சரீரம்" என்று உரைத்தல் காண்க. இவ்வாறு நெடிதும் நுனித்து நோக்குவோமெனின் வடமொழியெனப் படுவது செழுந்தமிழ்ச் சொல்லிலிருந்து பிறந்தது என்றும் தெளிந்த உண்மையை நன்கு உணர்ந்து தெளிவடைதல் கூடும்.

(தொடரும்)



பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.

மதுரை-தூத்துக்குடி-அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள் — **நெம்பர் 80 வரை நூல்கள்**

நாங்கள் சப்ளை செய்வது

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள்,

இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள்,

கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள்

மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

போன்: 250 (4 லைன்)   தந்தி: "ஹார்வி"

[டாக்டர் த. நமசிவாயம் I. M. P.]

5. பல்வலிக்கு (பால் உப்பு பற்பொடி) ஒரு சிரட்டையில் நாம் சாப்பிடும் உப்பை இட்டு, அதன்மேல், எருக்கம்பால், முங்கப்பிடித்துக் காய வைத்தெடுத்துச் சட்டியிலிட்டு வறுத்து நன்றாய் நுறுக்கி, வடிகட்டிய திருநீறு பலம் 5-க்கு 1 பலம் கூட்டி நுறுக்கிய உப்பைக் கலந்து வைத்துக்கொள்க. பல் விளக்கி வரத்தந்தவாய்வு, அரண்கட்டிச் சீழ் வைத்துத் துன்புறுத்தும் வலி, பல் சொத்தை, புழு, முதலியவைகள் நீங்கிப்பற்களுக்கு வலுவூட்டிப் பலப்படுத்தும். நெடுநாட் பழக்கமானது.

6. புழுவெட்டி மயிர் உதிரும் வழுக்கை நீங்கக் குளிதாமரைத் தைலம்:- நல்லெண்ணெய் படி ¼, குளிதாமரைச் சாறுபடி ¼, ஆவின் பால் படி ¼ இவைகளை ஒன்று சேர்த்து மிளகு பலம் ¼, சீரகம் பலம் ¼ இவ்விரண்டையும் நன்றாய் மைப்போலரைத்து, டி எண்ணெயோடு கலக்கித் தீயெரிக்கவும். மெழுகுபதம் பார்த்து இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்க. டி தைலத்தைத் தேய்த்துக் குளித்துவர, உட்சூடு, நமைச்சல், சிரங்கு, தலைமுடி புழுவால் வெட்டப்பட்டு உதிர்ந்து வழுக்கையாகுதல் முதலியவைகளைக் குணப்படுத்தும். வழுக்கையைமாற்றி மயிர் வளர்ச்சியை உண்டுபண்ணுவதில் இதற்கிணையில்லை. இது பழக்கம்.

7. நெடுநாள்பட்டகணைச்சுரம் நீங்க **மோரெண்ணெய்**:—குருந்தட்டி வேர் பலம் 10, நன்றாய்த் தறித்திடித்துப் பாண்டத்திட்டு 8 படி தண்ணீர் வார்த்து அடுப்பேற்றிக் கசாயம் செய்து 1 படியாக வற்றியதும் இறக்கி வடிகட்டி எடுத்து, நல்லெண்ணெய் படி ½ பசுவின் மோர்த் தெளிவு நீர்படி ¼ ஒன்று சேர்த்து மிளகுபலம் ½, சீரகம் பலம் ¼ பூமிச்சர்க்கரைக் கிழங்கு பலம் ½ இம்மூன்றையும் நன்றாயரைத்துக் கலக்கி அடுப்பேற்றித் தீயெரிக்கவும். மெழுகு பதம் கண்டு வடித்து எடுத்து வைத்துக்கொள்க. தலைமுழுகி வர முறைக்காய்ச்சல், குளிர்சுரம், அத்

கிசரம், நெடுநாட்பட்ட சுரம் இவைகள் நீங்கி நலந்தரும்.

8. காலராவுக்குக் கஷாயம். சிறுதும்பை, குப்பைமேனி, தைவேளை இம்மூன்றும் வகைக்கு ஒரு பிடி விதம் எடுத்து ஒன்றிரண்டாகத் தறித்துச் சட்டியை அடுப்பேற்றி ஷை இலைகளைத் தீப்பிடித்துச் சாம்பலாகும்வரை வறுத்துப். பின் ஷை சாம்பலை அப்புறப்படுத்திவிட்டு ஷை வெறுஞ்சட்டியில் 2 விராகனெடை வெந்தயத்தை இட்டுப் பொன்னிறமாய் வறுத்து ½ படித் தண்ணீர் வார்த்து மாகாணிப்படியாக வற்ற வைத்தெடுத்து வடிகட்டி அருந்துக. இவ்விதம் இரண்டு மூன்று வேளைக்குக்கூட கொடுக்கலாம். காலரா, அசீரணத்தால் ஏற்பட்ட வயிற்றுப் போக்கு முதலியவைகள் நீங்கி நலம் தரும்.

9. உடலிற் படரும் பற்றுக்கு சிவனார்வேம்புத் தைலம்:-10 பலம் சிவனார்வேம்புச் செடியை தறித்திடித்துப் பாண்டத்திட்டு 8 படி தண்ணீர் வார்த்து அடுப்பேற்றித் தீ யெரித்து ¼ படியாக வற்றவைத்து வடிகட்டி, கருஞ்சீரகம் பலம் ¼ கஸ்தூரிமஞ்சள் பலம் ¼ கார்போகரிசி பலம் ¼ மிளகு பலம் ¼ நான்கு மருந்துகளையும் நன்றாயரைத்து ஷை கஷாயத்தில் கலக்கி நல்லெண்ணெய்ப்படி ¼ சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சுக. கிண்டிக் கொண்டிருக்கவேண்டும். அடிக்கடி. பின்மெழுகுபதம் பார்த்து வடித்து வடிகட்டி எடுத்துவைத்துக்கொள்க. உடல் முழுதும் நன்றாய் தேய்த்து வெந்நீரை ஆறவைத்து சீயக்காயிட்டு முழுகப் பற்றுகள் உதிர்ந்துவிடும். இளவயதுள்ளவர்களுக்குச் செம்பட்டை மயிர், நரை இவைகளும் நீங்கி நலந்தரும்.

10. சக்குவான் இருமலுக்கு (மணிமாந்தியை) ஆமை ஓடு, முள்ளெலித்தோல், மயிலிறகு இம்மூன்றும் சுட்டுக்கருக்கிச் சித்தரத்தை, அக்கிராக்காரம் இவ்விரண்டையும் தட்டி வெதுப்பி இடித்துச்சூரணித்து வடிகட்டி எடுத்து ஷை மருந்துகள் வகைக்கு 2 விராகனெடை விதம் எடுத்துக்கொள்க.

பின் 3 குன்றி எடை கஸ்தூரி, 3 குன்றி எடை கோரோசனை சேர்த்து ஷை மருந்துகளை கல்வத்திட்டு அமுர்தப்பாலாலாட்டி குன்றி அளவாக உருண்டை செய்து நிழலிலர்த்தி எடுத்துவைத்துக் கொள்க. காலை மாலை தேனில் கொடுத்து வர மேற்படி நோய் நீங்கி நலந்தரும்.

11. ஒருதலை வலிக்கு (தேவதாரத் தைலம்) 10 பலம் மிளகு வத்தலை 6 படி தண்ணீரிலிட்டு அடுப்பேற்றித் தீ யெரித்து ¼ படியாக வற்றவைத்து வடிகட்டி பசுவின் பால் ¼ சேர்த்துக் கோட்டம், மிளகு, அகில் கட்டை, தேவதாரக் கட்டை வகைக்கு 2 விராகனெடை எடுத்து இடித்து அரைத்து முன் கியாழத்தோடு சேர்த்து அடுப்பேற்றி தீ யெரிக்கவும்.

மெழுகு பதத்திலிறக்கி வடித்த வடிகட்டி எடுத்துவைத்துக் கொள்க

தலைக்கு மட்டும் தேய்த்து வெந்நீர் வைத்து ஆறியதும் சீயக்காயிட்டுத் தலைமுழுகிவர ஒருதலைவலி, நெடுநாள்பட்ட மண்டையிடி, கண் சிகப்பு, இவைகள் நீங்கி நலந்தரும்.

12. முழங்கால் வாதத்திற்கு **வேறு:-** ஒரு பெரிய பாண்டத்தில் திருகுகள்ளி பலம் 10, கொடிக்கள்ளி பலம் 10, தறித்துப் போட்டு இஞ்சி பலம் 5, பூடு பலம் 5 இடித்துச் சேர்த்து 10 படி தண்ணீர் வார்த்துத் தீ யெரிக்கவும். பாதிவற்றியதும், தீயைப்பிரித்துவிடுக. ஷை தண்ணீரை, கொஞ்சம், மறு சட்டியில் எடுத்து ஒரு துணியை அதில்போட்டு நனைத்து ஷை தண்ணீரை நனைந்த துணியாலெடுத்து வலியுள்ள கால் கை இவைகளில் வேது கொடுக்க வேண்டும். தாங்கக்கூடிய சூட்டில் வேது கொடுக்கவும். முடக்குவாதம் உளைச்சல் முதலியவைகள் நீங்கி நலந்தரும்.

13. பித்தக் கிறுகிறுப்புக்குக் கஷாயம்:—நெல்லி யீர்க்கு, வேப்பின் ஈர்க்கு, கருவேப்பிலை யீர்க்கு, மூந்திரிப்பழம், இஞ்சி, வெல்லம், சீரகம் வகைக்கு 1 விராகன் எடை விதம் எடுத்து 1 படி தண்ணீரில் போட்டு அரைக்கால்படியாக வற்றவைத்து வேளை 1-க்கு வீசம்படியாக அருந்திவர, கிறுகிறுப்பு, மயக்கம், உட்டிணம் இவைகள் நீங்கி நலந்தரும்.

14. பெண்களுக்கு உண்டாகும் **நூவாலைக்கு:**— பேய்க்கரும்புக் குருத்துச் சுட்ட சாம்பல். மயிலிறகு சுட்ட சாம்பல். உருத்திராட்சம் சுட்ட சாம்பல். வகைக்குச் சமமெடுத்து ஒன்று சேர்த்து ஒரு பைசா எடை தேனில் காலை மாலை கொடுத்து வரக் குணமாகும்.

15. நீர்க்கடுப்பிற்கு:—கீரைத் தோட்டத்திலுள்ள பசலைக் கீரையைச் சிறுக எடுத்துச் சுத்தஞ்செய்து சீரகம் இரண்டு விராகனெடை கூகைநீர் 2 விராகனெடை முன்கீரை இவைகளை அம்மியில் வைத்தரைத்துப் பின்பு எலுமிச்சங்காய் அளவு பசுவின் வெண்ணெய்யை முன் மருந்துடன் சேர்த்து அருந்திவர நீர்க்கடுப்பு, சதையடைப்பு நீங்கி நலந்தரும். ஒரு நேரத்திற்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு உட்கொள்க.

16. நீர்க்கடுப்பிற்கு-வேறு நெய் விளக்கெண்ணெய்ப்படி வீசம், சோத்துக்கற்றாழைச்சோறு வீசம்படி, பசுவின் நெய் வீசம்படி இம்மூன்றும் ஒன்று சேர்த்து ஒரு சட்டியில் இட்டுக்காய்ச்சுக. கற்றாழைச் சோறு வெந்த பதம்பார்த்து இறக்கி வடித்து வடிகட்டி வைத்துக்கொள்க.

ஷை நெய் தேக்கரண்டி விதம், நீராகாரம் அல்லது மோர் இவைகளில் ஏதாவதொன்றில் சேர்த்துக் கொடுக்க. உடனே கடுப்பு, சதையடைப்புகள் நீங்கி நலந்தரும். பழக்கம்.

(தொடரும்)

போட்டோ மார்க்

சந்தனாதித் தைலம்

எங்களிடம் அநேக வித மூலிகையினால் தயார் செய்யப்பட்ட சந்தனாதி, அரைக்கீரைத் தைலமும், ஹேர் ஆயில்களும், வாரம் இரு முறை ஸ்நானம் செய்தால் கண் எரிச்சல், கண் மங்கல், கண்ணீர் வடிதல், சரீரத்தில் உஷ்ணம் முதலிய வியாதிகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.

பொன்னு விலாஸ் சீயக்காய் பவுடரை உபயோகியுங்கள்.

Pro: V. M. சேர்மச்சாமி நாடார்,
எண்ணெய்க் கடை,
M. S. பட்டணம் பொடி ஏஜண்டு,
ஷாப் வியாபாரம், தெப்பத்திற்கு மேல்புறம், விருதுநகர்.

ரெஜினா
மூட்டைப் பூச்சி
பவுடர்

நித்திரைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. ரெஜினா மூட்டைப்பூச்சிப் பவுடர் எங்கும் ஏராளமாக விற்பனையாகிறது.

தயாரிப்பவர்:
G. பழனியப்ப முதலியார், மதுரை.

அட்டைப்படக் கதை:

கூண்டுக்கிளி!

[ஆர். ஸ்ரீதேவி அம்மாள்]

புதூர் ஜமீன்தார் புண்யமூர்த்தி தேவர், மாடியின் மீது உலாவிக் கொண்டிருந்தார். அவர் மனம் ஓர் நிலையிலில்லை. துடிதுடித்துக் கொண்டிருந்தது வெட்டுண்ட அரணையின் வாலைப்போல.

சற்றுமுன் நடந்த சம்பவம், அவரது அமைதியை அவ்வளவு தூரத்திற்கு அலைக்கலைத்தது எருமை கோடை வெயிலில் சேற்று நீரில் புரண்டு குழப்புவது போல.

தனது வாழ்வு உன்னதத்தில் திளைக்க, உற்றார் பார்த்து தேடிய செழுமதியை— பார்த்ததிலிருந்து அவரது சிந்தனை சஞ்சலப் பாதைக்கு சரிந்து வீழ்ந்தது.

பதினைந்து வயதை இன்னும் எட்டிக்கூட பார்க்காத பச்சைக் கிளியைப்பிடித்து............ஆ! வளரும் வண்ணக் கொடியை பிடுங்கி...

"வாழவேண்டிய பெண்ணின் இனிமையை சூன்யமாக்க நான் ஒரு கருவியா?" இப்படியாரும் பேசவில்லை அவரிடம். அவரது சிந்தனையே அவரை சோகத்திடலில் தூக்கி போட்டு வாட்டி வதைத்தது.

ஜமீன்தார் சிறந்த சிந்தனையாளர். சீர்திருத்த வாதி. அவரது வாழ்க்கைத்துணைவி இறந்து பட்டு இன்றோடு ஆண்டு ஒன்றரை அகன்று விட்டது. அவரது செல்வ சிறுவனுக்கு வயது பன்னிரண்டு. சந்திரன் 'தன் வயதை 'ஐம்பது' தாண்டி விட்டபடியால், தனக்கு இனி திருமணம் மறுமுறையாக வேண்டியதில்லை இன்னும் இரண்டு மூன்று வருடங்களுக்கு பின் தனது திருமகனுக்கு மணம் செய்து விடலாம், இப்படி முடிவு செய்திருந்தார். ஆனால் அவரது உறவினர் எண்ணமும், ஆசையும் இவரை எதிர் நீச்சில் இறக்கி விடுவதில் இருந்தது.

அவர்கள் இவரை அப்படியே விட்டுவிட வில்லை, இப்படி முடிவு செய்துவிட்டார் . என்பதற்காக. அவர் மனதை மசியவைக்க பெரிய திட்டம் போட்டு மார்க்கம் அமைக்க வில்லை அவர்கள்.

"இல்லாள் இல்லாத போது குடும்பத்தில் என்னென்ன கோளாறுகள் ஏற்படும். வீட்டு எசமானரின் நலம் புலன்கள் எப்படி நாளாவட்

டத்தில் நலிந்து நசியும், என்பதை விரிவுரை செய்தனர் பற்பல விளக்கங்களுடன்.

கரைப்பார் கரைத்தால் கல்லுமென்ன, தங்கம்தான் வெள்ளியும்தான் கரைந்து விடுகிறது திராவகத்தால். இந்நிலையில் ஜமீன்தார் மட்டும் என்னவாம்?

அயராது அலுக்காது அவர்கள் பாடுபட்டு, கண்ட வெற்றியின் எல்லைக் கோட்டில் கொண்டுவந்து நிறுத்தப் பட்டவள்தான் உமா!

யாரும் இழுத்த இழுப்பிற்கெல்லாம் இணங்குகிறவரல்லஜமீன்தார். அவர் மனசபலத்தினால்தான் "வயது பொருத்தம் உள்ள பெண்ணாக கிடைத்தால்?" என்ற நிலைமைக்கு இறங்கினார். ஜமீன்தாரின் நன்மைக்காக பதறியவர்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டார்கள் இதை.

உமாவிற்கு வயது 25 ஆகி ஆறு மாதம் சென்று விட்டது என்று கூற பெரிய கற்பனையா உதிக்க வேண்டும் அவர்களுக்கு? நல்லதை செய்ய நாலுகோடி என்ன நாலாயிரம் கோடி பொய் கூறலாம் என்று எந்த பாட்டனோ இயற்றி வைத்த பழக்க மொழிதான் இவர்கள் பாது காப்பிற்கு இருக்கிறதே! பிறகு ஏன் பெரிய கவலை. கூறினார்கள். நம்ப வைத்தார்கள். காரியமும் நடந்து முடிந்தது நாட்டில் நாள்தோறும் நடக்கும் பற்பல நல்ல காரியங்களைப் போல.

உமாவும் சங்கரும் ஒரே தோட்டியில் வளர்ந்த வண்ணம் பாடிய செடியும் கொடியும். ஒரே ஊரில் பிறந்து, ஒன்றாகவே உண்டு உறங்கி, ஒரே பள்ளியில் கல்வி பயின்றவர்கள். பால் இனிமையில் பழகியவர்கள்.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். சங்கர் செல்வந்தர் மாளிகையில் பூத்துக் குலுங்கிய சிரித்த ரோசா. கருப்பு மார்க்கெட் வியாபாரத்தில் கனமாக பொருள் நிறைத்தமுன்னோடிக் கூட்டத் தலைவரின் வாரிசு! உமா ஏழை சிப்பந்தியின் ஏர்தொழுவத்தில்படர்ந்தபாவற்கொடி! ஆனால் பசுமையின் பொலிவு அவள் உடலெங்கும் பரவி லீலை புரிந்தது.

இந்த ஏற்ற தாழ்வை எல்லாம் எண்ணிப்பார்க்க உண்மையில் இளம் உள்ளங்களுக்கு நேரமுமிருப்பதில்லை. அறிவும் இருப்பதில்லை தெளிவும் கிடைப்பதில்லை. மலரும் மணமும் போல வீணையும் நாதமும் போல ஒன்றை ஒன்று இணைந்து கனிரசம் பருகத்தான் இவைகளுக்கு காலம் போதாதே! இந்த நிலைமையில் இனிக்காத காரியத்தில் எதிர்மாறான நினைப்பில் தங்களைப் போட்டுப் புரட்டிக்கொள்ள எப்படித் தெரியும்? முடியும்?

சங்கர் உயர்தரக் கல்வியில் உயர நகரத்திற்குச் சென்று விட்டான். பிரிவினால் ஏற்படும் பித்தம் எட்டிக்காய் கசப்புதான். என்றாலும் வாழ்வில் இப்படிக்கான கட்டங்கள் வாராமல் யாராலாவது தடுக்க முடியுமா?

— தமிழ்த்தென்றல்

ஓடியாடிய நேரத்திலும் உறக்கத்தில்கூட தனது அன்பின் அருங்கனி 'அத்தானின்' அழகு முகத்தை—அன்பான பேச்சை நினைவுத்திரையில் போட்டு நித்தமும் சுகம் கண்டாள். இந்த நினைவு இன்பத்தில் நாட்களை ஓட்டி மாதங்களை நகட்டுவாள். இதற்குள் பள்ளி லீவும் வரும். ஆவல் மனம் எதிர்பார்த்த 'அத்தானும்' வருவான்' 'எங்கே உமாவைக் காணோம்!' என்று அத்தையினிடம் கேட்டபடியே.

இந்த தடவை இப்படி சத்தம் கேட்டும் அவள் வெளியே வரவில்லை. இது ஏனோ? பருவமடைந்த பக்குவத்தின் உணர்ச்சிக் கோளாறுகளில் இதும் ஒன்றாக இருக்கலாமோ?

சங்கருக்கு பொறுமை எல்லை மீறி மேலும் எங்கோ புறப்பட்டு விட்டதா என்ன? திடு திடுவென்று நேராக அங்குமிங்கும் தேடி கடைசியில் அவள் முன்பாக வந்துவிட்டான். வைத்தவிழி மாறாமல் அப்படியே பார்த்தான். அவன் என்ன பாம்பா 'லபக்' கென்று தவளையை போல விழுங்கிவிட அவளை. பார்க்க யார் தடைபோட முடியும்? பார்த்துக்கொண்டே இருந்தான்!

அவனுக்கு அவள் உடல் முழுக்க ஏதோ விவரிக்க முடியாத ஓர் புதுமை விந்தைப்பாடி நிறம்பதாகப்பட்டது. பருவத்தின் இமயம் அவன் மனதை இந்தப்பாடு படுத்தியது!

— தமிழ்த்தென்றல்

“உமா……………….!”

இந்த மூன்று எழுத்துக்கள் போதாதா என்ன? அவனது குரல் நெளிந்த தோரணையிலேயே உயிர் நெளிந்து படபடக்கிறதே.

நீலம் பூத்த நீண்ட பெரும்விழிகள் புருவத்தை நோக்கிச் சென்றவை. ஏனோபயந்து கீழே வீழ்ந்தன. இதைத் தொடர்ந்து புன்னகை பூக்க வேண்டிய இடத்தில் பூக்காமல் மலர்ந்தது. வளர்ச்சி பூரித்து பொங்கிய அந்த கண்களில் தான் எத்தனை கவர்ச்சி, வண்ணம் மிகும் சித்திரம் என சிறப்பு தந்த அந்த அதரங்களில்தான் எவ்வளவு மலர்ச்சி! எக்காள உணர்ச்சி!

சங்கருக்கு என்ன வந்து விட்டதாம் இப்படி! கோட்டையைப் பிடித்து கொடியை நாட்டிவிட்டானா? ஒரேதாவில்... விரல்கள் பின்னிக் கொண்டன யார் வேண்டினாலும் பிரியமறுக்கும் பெரும் பிணைப்பாக.

“உமா! உனக்கு இவ்வளவு அழகு எப்படி, எங்கிருந்து வந்ததாம்? கொஞ்சமாவது சொல்லக் கூடாதா? உன்னைப்பார்க்கப் பார்க்க 'பாலாடை' யைச் சப்பிச் சப்பித் தின்னும் பாலகனைப்போல நானும்……………”

“ஏன் சங்கர்! நீங்கள் மட்டும் என்னவாம்! நான் படுத்துறங்கும் பஞ்சணை அளவிற்கு உங்க மார்பு விரிந்துவிட்டதே!” தக்கபதில் அளித்தோம் என்ற சமர்த்து வார்த்தையில் இணைந்தோடியது.

பட்டணத்திலே படிப்பு முடிந்து விட்டது. பால்ய அன்பை பக்குவப் படுத்துவதில் இப்பொழுது சங்கருக்கு வெகு பிரியம் இருந்தது. காதலர்களின் களியாட்டத்தில் காலத்தின் முன்னேற்றம் சொக்கட்டான் ஆடியது!

இந்த பத்து பதினைந்து தினங்களில் அவர்களுடைய பெயர்கூட மாறிவிட்டது அடியோடு. சங்கருக்கு பெயர் 'அத்தான்' உமாவிற்கு பதில் "கண்மணி" இது காதலர்களின் அகராதிப்படி. கருத்தின் நயமோ அழகோ அதிகப்படியாகத்தான்.

உமாவும் பருவமடைந்து விட்டதால் சங்கருக்கு உமாவை திருமணம் செய்து கொள்ளும்படி தனது தங்கையையும் மைத்துனரையும் கேட்டார் உமாவின் தந்தை.

"நன்றாகச் சொன்னாய்! உமாவிற்கும் உங்களுக்கும் எவ்வளவு வேற்றுமை? சங்கருக்கு பெரிய பெரிய இடத்திலிருந்தெல்லாம் மாறி மாறி கிராக்கிகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. நீ உனக்கு தகுந்த இடத்தில் "பார்த்துக்கொள்" வெறுப்பும், கசப்பும் பேச்சு முழுக்கவும் வேதனை புரிந்தன.

இதன் பின் உமாவின் தந்தை வேறு இடங்களில் வரன் பார்க்கலானார், சங்கரிடம் உமா இதை சொல்லியழுதாள். நாளாவட்டத்தில் பெரியவர்கள் மனது மசகியிருப்பது மாறிவிடும் என்று நம்பினான், தேறுதல் கூறினான்.

— தமிழ்த்தென்றல்

ஆனால் ஜமீந்தார் விஷயம் வந்தவுடன் சடக்கென்று காரியத்தை முடித்து விடுவதில் முனைந்துவிட்டனர், உமாவின் உறவினர்களும் அவன் பெற்றோர்களும் கூட.

சங்கர் நிலைகொள்ளாது தத்தளித்தான். இதயமும் கனத்தது. உடலும் கனத்தது. அதுபோல உலக வாழ்வும் கனத்தது. வாழ்வு சிறக்க, வடிவழகு தங்கம் 'உமாவுடன்' எங்கோ உறவினரின் கண்காணா பகுதிக்கு... அப்போ பேணிவளர்த்த பெற்றோர்களுக்கு எத்தனை மன வருத்தம். குடும்பத்தின் கௌரவத்தை செல்வச்செருக்கால் அவமதித்தவன் [illegible] ஓடிவிட்டானே என்றுதான் தூற்றுவார்கள்.

எதிர்காலத்தில் மட்டும் இவன் செயலுக்கு ஏற்றம் அளிப்பார்களா என்ன! காலாடிப்பயல், அயோக்கியன் என்ற அந்நாட்சியைத்தானே அடுக்கிக்காட்டுவார்கள். இளமையிலிருந்து ஏதிலும் நல்லவன் என்று பெயர் எடுத்தவனுக்கு இப்பொழுது இப்படி வந்துவிட்டதே? குடும்ப கௌரவத்தையும் தனக்கு காலத்தே ஏற்பட்டுள்ள நற்பெயரையும் காக்க கருத்தோட்டத்தில் தெளிவு இருந்தது.

அதே பொழுது உமா மாற்றான் தோட்டத்து மாதுளங்கனியாக ருசிக்கப்படுவதை பக்கத்திலிருந்து பார்க்க அவன் மனம் அவ்வளவு கடுமையில் இல்லை. எப்படிப்பார்த்தாலும்—எத்தகைய புனிதமான

கடமையை குடும்பத்தின் நற்பெயரை உறவின் அந்தஸ்தை காக்க துடிப்பாக இருந்தாலும் ஆசையை பொறுத்தவரை அவனும் மனிதன் தானே.

சிந்திக்கச் சிந்திக்க சங்கருக்கு உலகமே கிறுகிறுத்தது. தனக்கு இச்சைப்பட்டதைக்கூட பெற சமுதாயத்தை பார்த்துச் சம்மதம் கேட்க வேண்டுமா? அயோக்கியன் என்ற பெயர் எடுக்காமல் தனது ஆசைக் கிளியை அடைவது முடியாதா? யாரிடம் எங்குபோய் தனது நியாயத்தைக்கூறுவது! நினைத்து நினைத்து அழுத்துப்போனான். எங்குபோகிறோம்? எதற்குப்போகிறோம்? என்ற தொலை நோக்கற்று கிளம்பிவிட்டான். அவனுடைய ஆசை எல்லாம் இதுதான், 'உமாவாவது வாழ்வில் நலன் பெறட்டும். என்றாவது ஒரு நாள் வந்து கண்குளிர பார்ப்போம். அதுவே என் வாழ்க்கை.'

இப்பொழுது 'உமா' ஜமீன்தார் பங்களாவில் 'கூண்டுக்கிளி'. எந்த ஏவலுக்கும் எடுபிடிக்கும் ஆட்கள் எப்பக்கத்திலும் காத்துக்கிடந்தனர். தித்திக்கும் தீங்கனியும் தீம்பாலும் கூப்பிடு தூரத்தில், சோலை போன, சுழன்று ஓடும் வெள்ளமென அவள் பக்கத்தில் பவுசுக் கொட்டின. சிரிக்க, சிங்காரிக்க எத்தனை எத்தனையோ... உன்னதப் பொருள்கள்......

இதனையெல்லாம் உள்ளத்தின் பசி அடங்கி விடுகிறதா? ஏன்

— தமிழ்த்தென்றல்

அதை இந்த வசதிகள் இன்னும் கொஞ்சம் அதிகமாக்கி தானே அழகுபார்க்கிறது?

உமாவை உயிராகப் பாவித்த சங்கர் வேதனை தாங்காது ஊரை விட்டே ஓடிப்போனதையும் செவி கொண்டார். எல்லா வசதிகள் இருந்தும் சீர்திருத்தம் பேசிய தன்னால், செய்கையில் காட்ட முடியாத சூழ்நிலை வந்ததே என்று ஏங்கினார்.

"உமா! சமூகம் பெயரளவில் என்னை உன் கணவன் என்று வரித்துள்ளது. ஆனால் உன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட சங்கருக்குத் தான், இனி நீ உரியவள். நான் ஒரு முன் மாதிரியாக இருக்க முடியாதா?"

ஜமீன்தார் இவ்வாறாகப் பேசியதெல்லாம் உமாவிற்கு ஒரு மாதிரியாக இருந்தது. தான் ஏன் பெண்ணாகப் பிறந்தோம் என்ற சலிப்பு உணர்ச்சியே அவளிடம் மேலோங்கி நின்றது.

சங்கருடைய போட்டோவுடன், அவனது இருப்பிடத்தை தெரிவிப்பவர்களுக்கு அன்பளிப்பு அளிக்கப்படும் என்ற அறிவிப்புடன் பத்திரிக்கைகளில் பற்பல செய்திகள் வெளியிடப்பட்டன. ஆனால் இவைகளினால் எவ்வித பலனும் ஏற்படவில்லை.

கரடுமுரடான காட்டுவழி பாதையில் செல்லும் கட்டை வண்டியைப்போல, காலம் தன்பாட்டிற்குச் சென்று கொண்டிருந்தது.

சங்கரும் எங்கெங்கோ அலைந்தான், வாடி வதங்கும் கூட்டத்தி லொருவனை. ஆனல் அமைதியற்ற வாழ்வு அவனை அடித்து நொறுக்கிப் போட்டு விட்டது.

தட்டுத்தடுமாறி எப்படியோ தள்ளாடி புதூர் குளக்கரையை தாண்டிவிட்டான். இன்னும் ஒரு பர்லாங்கு தூரம் இருக்கும். காச நோயுடன் கடைசிக் கட்டமாக அவன்போராடிக்கொண்டிருந்தான்.

“கண் மணி! உமா! உன்னை கடைசி முறையாக பார்க்க மனதை எப்படி எப்படியோ தைரியப்படுத்தி வந்தும், கொடுத்துவைக்காத பாவியானேன்” என்று அலறினன். “தண்ணீர்! ஆ! தண்ணீர்!” முணங்கலின் சுதி அடங்கி வந்தது.

குளத்து மடையைக் காக்கும் வேலையாள் ஓடோடி வந்தான்.

ஜமீன்தார் வீட்டிற்கு வந்த விருந்தாடி என்றவுடன். அப்படியே சங்கரைத் தூக்கிச்சென்ருன்.

பங்களாவின் பளிங்குக்கல் முற்றத்தில் சங்கர் தனது உயிர் மணியை கடைசியாகப் பார்த்தான். பரவசம் பெற்ருன். அமைதி அவன் உள்ளத்தை அரவணைத்து நின்றது.

உமாவை கட்டித்தழுவி அவளது மாந்தளிர் கரங்களை முகத்தோடு அணைத்து சுகம் கண்டான். அவன் உடலில் ஒரு குலுக்கல்!

நிம்மதிபெற்ற உயிர் நிலைக்காது, வானவெளியில் கலந்தது. இனி பங்களாவின் 'கூண்டுக்கிளி'க்கு இங்கு என்ன வேலை இருக்கின்றது?

ஜமீன்தாரோ கல் சிலையாய் கண்ணீர் மல்கி நின்ருர்.

விவசாயிகளுக்கு அரிய சந்தர்ப்பம்!

எங்களிடம்

GEC, க்ராம்ப்டன், B. T. H., A. E. I., 3, 5, $7\frac{1}{2}$ ஹார்ஸ் பவர் மோட்டார்களும், DPE பம்ப் செட்டுகளும், சகல விதமான வயரிங் சாமான்களும்

சரசமான விலையில் கிடைக்கும்.

மேலும் சினிமா சம்பந்தமான சகல சாமான்களும் கிடைக்கும்.

க்ரீன்விச் கமர்ஷியல் சிண்டிகேட்

227-A, தெற்கு மாசி வீதி, (ராமமூன்சிப் கோர்ட் சமீபம்)

'ராஜன்' மதுரை.



முகப்பரு, சொரி சிரங்கு, வேனல்கட்டி, தீப்பட்ட புண் முதலியவைகளுக்குச் சிறந்தது.

சைபால்

குழந்தைகளின் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது.

ராமனிஸ்

பேபி கிரைப்



தயாரிப்பாளர்கள்:-

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை.

[ப. சி. அ. வணங்காமுடி]

அந்த ஆற்றங்கரையின் இருமருங்கும் வானுற ஓங்கி வளர்ந்த தேங்காய்களின் கனத்தைத் தாங்க மாட்டாது தத்தளித்துநின்ற தென்னை மரங்களின் ஒய்யாரக் காட்சி—இந்திய துணைக்கண்டத்து தென்பகுதியாம் திருவாங்கூரின் காயல் காட்சியை என் கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது. கரையெல்லாம் பசுஞ்செடிகொடிகள் வளர்ந்து படர்ந்து அடர்ந்து கிடந்தன.

எத்தனையோ ஆயிரம் மைல்களைக் கடந்து வயிறு கழுவ வந்த இந்தத் தமிழனுக்கு காவிரியின் கரையும், அதன் கரையில் வாழும் காகமும் கவிபாடும் பெருமையும், இந்த ஆற்றின் அழகும் நினைக்க நினைக்க, பெற்றோரையும் உற்றோரையும் பிரிந்த நினைவும் நெஞ்சை விட்டு நீங்கியது.

அவ்வளவு அழகிய ஆற்றின் நடுவே நான் சென்ற படகு போய்க்கொண்டிருந்தது.

மலேயா மண் என்னை ஏற்க மறுத்து விடுமா?

சிங்கப்பூரில் வெள்ளைக்காரக் கம்பெனியில் வேலை பார்த்துவந்த நான் 'போர்னியோ'வின் ரப்பர் காடொன்றிற்கு 'சூபர்வைசராக' அனுப்பப்பட்டேன். நான் செல்ல வேண்டிய இடத்திற்குத்தான் ஆற்றை—அழகுமிக்க—நீர் ப்ரவாகத்தைக் கிழித்துக்கொண்டு என் படகு போய்க்கொண்டிருந்தது.

இப்போது படகு கரையோரத்திற்கு வந்துவிட்டது. கொஞ்சதூரத்தில் அந்த நாட்டு மக்களும், ஓர் வெள்ளைக்காரரும் நின்றுகொண்டிருந்தார்கள். படகு அங்கேயே நின்றது, நான் படகை விட்டு இறங்கினேன். வெள்ளைக்காரர் என்னை நோக்கிவந்தார். அவர்தான் எனக்கு முன் வேலையில் இருந்தவர். என்னிடம் 'சார்ஜ்' தரவேண்டியவர், மிஸ்டர் ராம்சே.

— தமிழ்த்தென்றல்

என்னை நெருங்கி வந்து, "நீங்கள்தான் மிஸ்டர் பாலசுப்பிரமணியமோ?" என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

தலையைப் பணிவாக ஆட்டினேன்.

"மிஸ்டர் ராம்சே. என்னை மன்னிக்க வேண்டும்."

"இல்லை, இல்லவே இல்லை! தவறு உங்களுடையதா? இல்லையே? எனக்கு இந்தவேலை போனாலென்ன? நான் பிறந்து வளர்ந்த இந்த மலேயா மண் என்னை ஏற்க மறுத்துவிடுமா?" அவர் பேச்சில் அலட்சியமிருந்தது. அவ்வளவிற்கு அடக்கமும் அரும்பி மலர்ந்து நின்றது.

வேதனையை வெளியிடுகிறார்.

சாமான்களை வேலைக்காரர்கள் தூக்கிக்கொண்டு போனார்கள். நானும் ராம்சேயும் பின்தொடர்ந்தோம். ஆற்றிற்கு 50 கெஜ தூரத்தில் ஓர் வீடு இருந்தது. அந்த வீடு மலேயா நாட்டின் முறைப்படி கட்டப்பட்டிருந்தது. அதன் வாசலை நெருங்கி விட்டோம்.

பெருமூச்சோடு "மிஸ்டர் பாலசுப்பிரமணியம் இந்த வீடு நான் கட்டியது.........!" பேச்சின் கோவை அறுந்து நின்றது.

உள்ளே அழைத்துப்போய் என்னிடம் ஒப்படைக்க வேண்டியவைகளைப்பற்றிச் சிறிதுநேரம் பேசினார், அதற்குள் என்னநினைத்தாரோ

— தமிழ்த்தென்றல்

'பாய்!' என்றவுடன் ஓர் மலேயா வேலைக்காரன் வந்து நின்றான். "ஐயாவுக்கு குளிக்க வென்னீர் போடு" என்று தனி மலாயாவில் பேசினார்.

"உங்களுக்கு மலேயா தெரியுமா?"

"நான்மலேயாக்காரன்தான்."

"உங்களைத் பார்த்தால்......!"

"ஆங்கிலேயன் போலத் தோன்றும்."

நான் தலையை அசைத்தேன்.

"அலக்சாண்டர் டுமாசின் உடலில் நீக்ரோ ரத்தம் ஓடியது. ஆனால் அவன் எழுதிக் குவித்த இலக்கியச் செல்வங்கள் அவனை பிரஞ்சுக்காரன் என்று ஏற்று இன்னும் அஞ்சலி செய்கிறது. ஆனால் மலேயா ரத்தம் ஓடும், ஆங்கிலேயத் தோற்றமுள்ள நான் 'ஷெல்லியை'யும், 'ஷேக்ஸ்பியரை'யும் படிக்கும் ஓர் ரப்பர் தோட்டக்காரன். என்னை எலிசபெத் பரம்பரையினர் ஏற்பார்களா? அவர்கள் ஏற்றாலும் கள்ளங்கபடற்ற இந்த மலேயாமக்களை விட்டு—செழிப்பின்சிகரமான—இந்த மலேய மண்ணை விட்டு நான்தான் போவேனா?

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. முன்பின் தெரியாத அந்த மனிதர் தன் வேதனையை ஏதோ ஒரு மாதிரியாய் வெளியிடுகிறார். அதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

இந்த நிலையில் நான் அவருக்கு ஆறுதல் சொல்வதுதான் எப்படி?

'கடலிலாழ்ந்தது!' இது கதை.

என்னைக் கவனித்த அவர் "மிஸ்டர் பாலசுப்பிரமணியம் மன்னிக்கவும். நீங்கள் குளித்துவிட்டுத் தயாராக இருங்கள். சற்றுமுன் வந்துபோன பையன் உணவு தருவான். நான் பிறகு மாலையில் வருகிறேன். பொழுதுபோகாவிட்டால் அதோ புத்தகங்கள், அவைகளைப் படித்துக்கொண்டிருங்கள்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். நான் அவர் போன திக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

திரும்பினேன். என் கண் முன் அவர் காட்டிய புத்தகங்கள் மேஜை மேல் கிடந்தன. ஒன்றைப் பிரித்தேன். அது ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோ'.

"குளிக்கலாம் சார்"—மலேயா வேலைக்காரன் சொன்னான். குளித்து உணவருந்திவிட்டு மேஜையருகே உட்கார்ந்தேன்.

புத்தகங்களைப் புரட்டினேன். ஓர் புத்தகத்தின் நடுவில் ஓர் காகிதக் கத்தை இருந்தது. எடுத்துப் பிரித்தேன். ஓர் சிறுகதை போலும். ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அதன் தலைப்பு 'கடலிலாழ்ந்தது!' என்று எழுதப்பட்டு 'ராம்சே!' என்றும் எழுதப்பட்டிருந்தது. அதன் தலைப்பு என்னைக் கவர்ந்தது. கவனம் கடிதத்தில் ஆழ்ந்தது.

கதையும் ஆரம்பித்தது:

"நான் லண்டனிலிருந்து திரும்பிய சமயம்—அரும்பு மீசையை முறுக்கியவண்ணம், மாலை வேளைகளில் சிங்கப்பூரின் வீதிகளை வலம் வந்த நேரம்—என் மலேயத்தாயும் வெள்ளைக்காரத் தகப்பனும், என் வேலையற்ற தன்மையைச் சுட்டிக் காட்டிய காலம்—நான் ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ-ஜூலியட்' காதலை எண்ணி வியந்து கொண்டிருந்தேன்.

அது மட்டுமா? ஷேக்ஸ்பியரைப் போல நானும் நாடகங்கள் எழுதினேன். பிரசவித்த தாய் குழந்தையையெடுத்துக் கொஞ்சுவதுபோல—முத்தமிடுவது போல—என் கதைகளை — நாடகங்களை — பெருமையோடு, பூரிப்போடு படித்தேன். படித்துக் காட்டினேன்.

என்னை ஓர் எதிர்கால இலக்கிய மேதையாக எண்ணினேன். என் கதைகளை 'டிக்கன்சோடு' ஒப்பிட்டுப் பார்த்தேன். 'டுமாசோடு' சேர்த்து நோக்கினேன். ஆனால் என் இலக்கியக் குழந்தை கணவனில்லாமல் கன்னிபெற்ற குழந்தையைப்போல சிந்துவாரற்று இருண்ட அறையில் கிடந்தது. அதை வெளிக்கொணர விரும்பினேன்.

அடிக்கடி போனேன்:

பழகினேன்:

நடமாடும் கலைக்களஞ்சியமாயிருந்த 'ஜான்சனின்' கட்டுரை திரும்பி வந்ததைப் போல — என் கதைகளும்—நன்றியுள்ள நாய்கள்

போலத் திரும்பி வந்தன. எழுதுவதையே நிறுத்தினேன். வருவாய்க்கு வழி தேட விரும்பினேன். இந்த நேரத்தில் மலேரியா என் மாதா, பிதாவை விழுங்கிற்று. அவர்கள் எனக்கு விட்டுப்போனவை இரண்டு. ஒன்று என் ஆங்கிலேயத் தோற்றம். மற்றொன்று போர்னியோ ரப்பர் தோட்டம்.

போர்னியோ புறப்பட முடிவு செய்து கொண்டிருந்தேன். அப்போது சிங்கப்பூரில் ஓர் ஆங்கிலக் கம்பெனி நாடகமாட வந்தது.

ஒருநாள் நாடகத்திற்குப் போனேன் நானும்.

ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோ' நாடகம் நடிக்கப்பட்டது. அருமையாக நடித்தார்கள். ஒத்தெல்லோ தன் அருமைக் காதலியைக் கொல்லும் கட்டத்தில், என்னை மறந்து கத்தி விட்டேன்.

தினமும், நாடகம் தவறாமல் பார்த்து வந்தேன். அந்தக் கம்பெனி உரிமையாளர் 'ஆர்தருக்கும்' எனக்கும் பழக்கமேற்பட்டது.

அங்கே அடிக்கடி போனேன், நடிகர்களோடு பழகினேன்.

கதையும் சோகம்

வாழ்வும் வாதையும் சோகம்

முலையில் செல்லரித்த என் கதைகளை அரங்கேற்ற இந்தச் சமயத்தைப் பயன்படுத்த விரும்பினேன். போர்னியோ போவதை ஒத்தி போட்டேன். என் கதைகளையும், நாடகங்களையும் 'ஆர்தரிடம்' காட்டினேன்.

பிறகு? பிறகென்ன? என் குழந்தை அரங்கத்தில் ஆட ஏற்பாடாகியது. ஆகா! நான் உலகையே மறந்தேன். ஷேக்ஸ்பியரின் முதல் நாடகம் அரங்கேற்றப்படுமுன்னர் அவனுக்கு எவ்வளவு மகிழ்ச்சி பொங்கியதோ எனக்குத் தெரியாது. ஆனால் என் நாடகம் அரங்கேறுமுன் நான் விம்மிய மார்போடு நடந்தேன்!

அந்தக் கம்பெனி லண்டனை விட்டுப் புறப்பட்டு இரண்டாண்டுகள் ஆகியும், கலைக்குத்தான் அவர்கள் தொண்டு செய்ய முடிந்தது. ஆனால் கலைஞனுக்கும் வயிறு உண்டு என்பதை ரசிக மகாஜனங்கள் மறந்து போனார்கள்.

கொடிய சூழ்நிலையிலும், கம்பெனி கலைச்சேவை செய்துகொண்டு தானிருந்தது.

ஒருநாள் கம்பெனி கலகலத்துப் போய்விட்டது. வசூல் சுத்தமாக இல்லை. நாலைந்து வெள்ளைக்காரர்கள், படித்த ஐந்தாறு சிங்கப்பூர் வாசிகள், வழக்கம்போல் நான் இத்தனை பேர்களுக்கும் முன்னால் நாடகம் நடந்தது. கதை 'ஹேம்லெட்' (Hamlet) அதில் நடித்த அத்தனை பாத்திரங்களும் சோகச்சித்திரங்களாகவே காட்சியளித்தனர். கதையும் சோகக்கதை. நடிகர்கள் வாழ்வும் வாதையும் சோகக்கதை.

சிந்தனையில் திசை கெட்டு நின்றேன்

ஆர்தர் சிகரட்டைச் சுண்டிய வண்ணம் தியேட்டர் தூணில்

சாய்ந்துகொண்டிருந்தார். கம்பெனி புறப்படலாமென்றாலோ, கையில் பணமில்லை. இருக்கலாமென்றாலோ வசூல் இல்லை.

அவர் ஊதிவிட்ட புகை காற்றோடு கரைந்தது.

மறுநாள் காலை கம்பெனிக்குப் போனேன். ஆர்தரைக் காணோம். 'ஜீன்' என்ற நடிகை, "ஆர்தரை நேற்றிரவு முழுவதும் காணோம். எங்கோ போய்விட்டார். கம்பெனி கலைந்துவிட்டது" என்று தலையைக் குனிந்தவண்ணம் சொன்னாள்.

"நீ என்னசெய்யப்போகிறாய்?" அவள் நிலை எனக்கு பரிதாபகரமாக இருந்தது.

"என்னிடம் ஐந்து பவுன்கள் இருக்கின்றன. லண்டன் திரும்ப இவை போதாது. அரசினரைக் கேட்டால், அனுப்புவார்கள் என்று சொல்கிறார்கள். பிழைக்க வழி தேடி வந்த இந்த நடிகை அங்கே போயுந்தான் எப்படிப் பிழைக்கமுடியும்?" அழுதாள். கண்ணீரின் கசிவு பேச்சில் பின்னி வழிந்தது.

சாதாரண வேடங்களில் 'ஜீன்' நடித்துக் கொண்டிருந்தவள். சுமாரான அழகி. ஆனால் எனக்கு அவள் மீது தனிக் கவர்ச்சி.

அவளுக்கு ஆறுதல் சொன்னேன். என்னாலியன்ற உதவிகளைச் செய்து, சிங்கப்பூரில் ஒரு வாரம் தங்க வைத்தேன்.

அந்த ஒரு வாரம்! அப்பா! நான் என் எண்ணத்திற்கு ஒலி வடிவம் கொடுக்கத் திணறித் திண்டாடினேன். சிந்தனையில் திசை கெட்டு நின்றேன்.

அவள் கண்கள் மயங்கவும் மேற்கே திரும்பின:

தினமும் மாலை வேளைகளில் நானும் அவளும் உலாவப்போவோம். அவள் பேச்செல்லாம் 'தேம்ஸ்' கரையைப் பற்றியிருக்கும். என் பேச்செல்லாம் காடு அடர்ந்த பொர்னியோவைக் கிழிக்கும் ஆற்றுப்பெருக்கைப் பற்றியிருக்கும்.

அவள் என்னுடன் ஆறு நாட்கள் தங்கியிருந்தாள்.

ஏழாம் நாள் வழக்கம்போல் உலாவப் போனோம். ஓர் செய்குளத்தின் கரையருகே அமர்ந்து, மாலைக் காற்றின் குளிர்ச்சியை நானும் அவளும் பெருமூச்சால் சூடாக்கிக் கொண்டிருந்தோம்.

அவள் கண்கள் மேற்கு நோக்கியிருந்தன. 'ஜீன்' என்ற என் குரல் கேட்டு, அவள் கண்கள் என்னை நோக்கி கிழக்கே திரும்பின.

"ஏன்?" என்ற அவளது சொல், பெருமூச்சோடு கலந்து உருண்டது.

"ஜீன்"—எனக்கு வார்த்தைகள் வரவில்லை. ஒரே சொல்லை திக்கித் திணறி நழுவ விட்டேன்.

"என்ன மிஸ்டர் கிரேஞ்!" குழைவாகக் கேட்டாள்.

— தமிழ்த்தென்றல்

Telegrams: COOPFIRE. Telephone: 4361.

The Co-operative Fire General Insurance Society Ltd.,

MADRAS-1.

President: Sri. T. M. CHINNAYYA PILLAI M. A., B. L.

Transacts

Fire Insurance of all description and
Motor Vehicles Insurance.
For Particulars—Apply to:—

P. SHUNMUGAM, B. A.,

POST BOX NO. 1249 **MADRAS-1**

READY FOR SALE! READY FOR SALE!

CENT PERCENT SWADESHI

FIRST

&

BEST INDIAN MAKE

"AGAR-AGAR"

FLAKES

SUITABLE FOR BACTERIOLOGICAL PURPOSES.

Please apply to:-

RAJAN INDUSTRIAL WORKS,

Manufacturers of Agar - Agar,

VIRUDHUNAGAR. (S. INDIA)

— தமிழ்த்தென்றல்

"நான் உன்னைக் காதலிக்கிறேன்" மாதுளைமுத்து உதிர்வது போல உதிர்ந்த சொற்கள் படபடத்தன.

"அப்பாடா? கிரேஞ்! இதற்குத்தானா இத்தனை தயக்கம்?"

"நம் மேல்நாட்டுக் கலாச்சாரம் ஆணுக்கும் பெண்ணுக்கும் நடுவே திரையிடவில்லைதான். தாராளமாகப் பேச உரிமையுண்டுதான் ஆனால் என் உடலில் ஓடும் கீழ் நாட்டு ரத்தம் கொஞ்சம் பின்தங்க வைக்கிறது. ஜீன்! நான் உன்னை மனமாரக் காதலிக்கிறேன்."

"கிரேஞ்!" அவள் நிறுத்திக் கொண்டாள். அவள் கண்கள் மறுக்கவும் மேற்கே திரும்பின. அவள் வாய் எதையோ முணுமுணுத்தது. நான் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்தேன்.

தேம்ஸ் நதியின் படகென எண்ணினேன்!

"என்ன ஜீன்? என்னை விரும்பவில்லையா? என் ஆயுள் பரியந்தம் உன்னைவைத்துக் காப்பாற்றுவேன். இது உறுதி" என் பேச்சில் நேர்மை மிதந்து கொண்டிருந்தது. அவள் பேசவில்லை. என்னைப் பார்த்தபடியே இருந்தாள்.

"சாதாரண நடிகையின் மீது ஏற்படும் காதல் நிரந்தரமா இராது என்று எண்ணுகிறாயா? சார்லஸ் கலைப்படைப்பு, டிக்கன்சின், மிஸ் ஹேவிசம்மேக்விச்சால் புறக்கணிக்கப்பட்டது போல் நானும் செய்து விடுவேன் என்று அவநம்பிக்கையா? இல்லை ஜீன்!" மடமடவென்று பேசினேன், அவள் ஓர் நீண்ட பெருமூச்சு விட்டாள். அவள் கண்கள் பாதி கிழக்கும், பாதி மேற்கும் திரும்பின, அவள் உதடுகள் அசைந்தன. துடிதுடித்தன!

"கிரேஞ்! தாங்கள் ஆங்கிலேயரில்லையா?"

"ஆமாம்!........இல்லை"

"பிறகு?"

"ஆங்கிலத் தகப்பனுக்கும் மலேயத் தாய்க்கும் பிறந்து இங்கிலாந்தில் 16 ஆண்டுகளை மட்டும் கழித்தவன்."

"நான் உங்களைத் தேம்ஸ் நதியின் படகென்று எண்ணினேன்."

உடலும் கிழக்கே திரும்பியது

"ஆனால் நான் மலேயா நாட்டு பழைய படகல்ல ஜீன்! தெரிந்து கொண்டேன். காதல் தூரத்தையும், உயரத்தையும், ஏன் அழகைக் கூடப் பாராது என்று வலியுறுத்திய 'சேக்ஸ்பியர்', 'டிக்கன்ஸ்' போன்ற இலக்கிய மேதைகள் பிறந்த ஆங்கில நாடு இன்று காதலுக்கு வேற்றுமை பாராட்டுகிறது என்றால், அவர்களுக்கு ஒன்று சொல்லுகிறேன்.

"ஷேக்ஸ்பியரின் 'ஒத்தெல்லோவை' தீயிலிடுங்கள். 'ரோமியோ ஜூலியத்தை'க் கடலில் எறியுங்கள் கடைசியாக காதலுக்குக் கட்டுப்பாடு விதியாத அந்தக் கொடிய ஷேக்ஸ்பியரின் நூல்களை அழித்துவிடுங்கள்.

— தமிழ்த்தென்றல்

"ஜீன்! உன்னைப் போன்ற மக்களின் எண்ணங்கள் இங்கிலாந்தில் இப்படியே நீடித்துக்கொண்டிருந்தால், ஒரு காலத்தில் ஆப்ரிக்க நீக்ரோக்கள் உங்கள் பெண்களை மணந்தால் என்ன செய்வீர்களோ எனக்குத் தெரியாது."

"மன்னியுங்கள் கிரேஞ்! அவர்கள்மட்டுமென்ன?' உடலும்கிழக்கே திரும்பியது. என்னை அணைத்து அலர்ந்த முகத்தோடு இணைந்து நெற்றியில் முத்தமிட்டாள்."

அம்மாவோட ஆவிதான்!

இவ்வளவுதான் படித்திருந்தேன். இன்னும் ஐந்தாறு பக்கங்கள் இருந்தன.

அதற்குள் யாரோ வீறிடும் சப்தம் கேட்டது. அந்தக் கொடூரமான சத்தம் வந்த திக்கை நோக்கினேன். மலேய வேலைக்காரன் என்னை நோக்கி ஓடிவந்து என் காலருகே விழுந்தான்.

அவனைத்தூக்கிச் சாந்தப்படுத்தி 'என்னவென்று' விசாரித்தேன்.

அவன், "ஜீனம்மா! ஜீனம்மா!" என்று மறுபடியும் வீரிட்டான்.

அவனைப் படுக்கவைத்துவிட்டு நாற்காலியில் வந்து உட்கார்ந்தேன்.

பழையபடி கதையைப் பிரித்தேன். விட்ட கதை, 'ஜீன்!' என்று ஆரம்பமானதும், வேலைக்காரன் 'ஜீனம்மா!' என்று கதறியதும் என் கையிலிருந்த காகிதக்கத்தையை 'உயிரோவியம்' என்று எண்ணிப் படிக்கத் தொடங்கினேன்.

யாரோ வரும் காலடியோசை கேட்டது.

மலேய்க்காரன் ஒருவன் அறையினுள் நுழைந்து, 'ராம்சே!' வரலாமா என்று கேட்டுவரச் சொன்னார்.' என்றான். தலையை ஆட்டினவுடன் நகர்ந்தான். போனவனைக் கூப்பிட்டு, வேலைக்காரன் அலறியதைக் கூறி விபரம் கேட்டேன்.

"ஓ! அதுங்களா! அது நம்ம ராம்சேசாரின் பெஞ்சாதி. அந்த அம்மாவோட ஆவிதான் அப்படி அலறவச்சிருக்கும்!"

மனப்பாரம் குறையுமே!

எனக்குக் கிடைத்த தகவல்கள் இவ்வளவுதான். ராம்சே சற்று நேரத்தில் வந்தார்.

"மிஸ்டர் ராம்சே! மன்னிக்க வேண்டும், தாங்கள் அனுமதியின்

— தமிழ்த்தென்றல்

றியே தாங்கள் கதை 'கடலிலாழ்ந் ததை'ப் படித்து விட்டேன்.''

"அதனாலென்ன?"

"இந்தக் கதை?"

"ஒருவரின் வாழ்க்கைவரலாறு."

"ஓகோ! அவர்.?"

"அதை இப்படித் தாருங்கள்!" என்று வாங்கி அதைச் சுக்கள் நூறு கக் கிழித்தெறிந்து விட்டார்.

"அடேடே! அதை நான் இன்னும் முடிக்கவில்லையே? உங்களுக்குத் தெரிந்தால்? ..."

"சொல்கிறேன். சொல்வதால் மனப்பாரம் குறையுமாமே! ஊம் எதுவரைப் படித்தீர்கள்" பெருமூச்சோடு கேட்டார். சொன்னேன்.

அவர் பேசினார்:—

"காயைப் பழுக்க வைக்கிறான்!"

"ஜீனும், கிரேஞ்சும் இதைப் போன்ற வீடொன்றில் மணமுடிந்து குடியேறினார்கள். அவளும் அவனும் ஆரம்பத்தில் ஆனந்தமாக வாழ்ந்தார்கள்.

"கிரேஞ் ரப்பர்த்தோட்டத்தைச் சுற்றிப் பார்க்க காலையில் போனால், மாலையில் தான் வருவான். வந்தால் 'ஆக்ஸ்போர்டில்' அவனுக்கு ஏற்பட்ட இலக்கியப்பசியை அடக்கப் பாதி இரவு வரையில் பல இலக்கியங்களை சுவைத்து ருசித்துவிட்டுத் தான் படுப்பான்.

"மனைவியோ, 'கிரைம்' நாவல்களையும், 'ரோமென்ஸ்' நாவல்களையும் பாதி இரவுக்கு மேல்படிப்பாள்.

"கதையில் வந்த அவளது நாட்டுக் காதலர்களின் இன்ப போதையில் வந்து கணவனை எழுப்ப முயற்சிப்பாள். ஆனால்......தோல்வியால் சுருண்டு படுத்துவிடுவாள். அப்போது "என்ன இருந்தாலும் இதில் மேல் நாட்டான்..."என்ணச் சுழல் குமிழிட்டு வெடித்தது.

"பிறகு வெடிப்பு வேதனையானது- சூறு வளி சுழன்றது. அமெரிக்க நிறவெறிச் சங்கமான "கூக்ளாக்குளான்" குழுவினரின் வெறுப்புக்கான நீக்ரோக்கள் போல், ஜீனுக்குக் கணவன் வெறுப்பின்—அருவருப்பின்—சின்னமாகப் பட்டான். வேறுபாடு வேற்றுமையாகி முரண்பாடு வளர்ந்து. பூத்துக் காய்த்து பழுக்க ஆரம்பித்துவிட்டது.

"அப்போது ஒரு நாள் பக்கத்து எஸ்டேடிற்கு ஆங்கிலேயன் ஒருவன் வந்தான். அவன் பெயர் 'ஜேக்' காயைப்பழுக்க வைக்கிறான் என்பது கிரேஞ்சிற்க்குத் தெரியாது."

"கணவனென்றும் கேடயம்......."

"கிரேஞ் எஸ்டேட்டிற்குள் காலையில் நுழைந்த பின் ஜீன் வீட்டின் பக்கத்திலிருந்த ஆறு அவள் கனவு கண்டு கொண்டிருந்த "லண்டன் ஸ்விம்மிங் பூலாக" மாறி ஜேக்

— தமிழ்த்தென்றல்

கும் அவளும் நீந்தி விளையாட உதவியது.

"ஜேக்கும், ஜீனும் நீந்தி மட்டும் விளையாடவில்லை. பைபிளில் வந்த தேவதூதர்கள் போல மனதாலேயே பறந்தனர். ஆராய்ச்சியில் முடிவு கட்டாமலிருக்கும் சந்திரமண்டலம் போனார்கள். தன்னையே மறந்து கிடந்தார்கள்.

"இப்படி அவர்கள் வெகு காலம் வாழ்ந்துவிடவில்லை மூன்று மாதங்களில் ஜீனை ஏதோ ஒன்று தட்டி எழுப்பியது. அவள் வாந்தியெடுத்துக் கொண்டிருந்தாள். ஏன்— யாரால்வாந்தியெடுக்கிறோமென்பது ஜீனுக்குத் தெரியும்! ஆனால் கணவனென்னும் கேடயம் இருப்பதால் ஜீனுக்குப் பயமில்லை. இருந்தாலும் ....

கள்ளக்காதல் நாடகமா?

"அன்று வானம்கருத்தது. மழை வரப் பார்த்தது. கிரேஞ் தோட்டத்தை விட்டு விரைவாகக் கிளம்பி மாலையில் வரவேண்டியவன் மத்தியானமே வந்துகொண்டிருந்தான்.

"திருமணம் செய்தபின், 'நடிகையான தன் மனைவி நல்ல நாடகங்கள் நடிப்பாள். அதை அனுபவிக்கலாம்' என்று எண்ணினான்.

"எத்தனையோ பேர் மணவாழ்வில் நெஞ்சத்து எண்ணங்கள்போல் நிகழாமல் ஏன் துன்புறுகிறார்கள் என்று இப்போது தெரிந்து கொண்டான். கணவன் இலக்கிய அன்பனாக இருந்தால் மனைவி அப்படி இருக்கவேண்டுமென்பது என்ன நியதியா? மனைவிக்கும் மனம் உண்டல்லவா?

"இப்போது கிரேஞ் மனைவியிடம் மன்னிப்புக் கேட்க ஓடிக்கொண்டிருந்தான். ஆற்றங்கரையோரமாகவே, வந்துகொண்டிருந்தான். தூரத்தில்......தூரத்தில்......ஜீனை... —...ஜீனை......'ஜேக்' முத்தமிடுவது தெரிந்தது. நெருங்கி வந்தான். ஜீன் ....கிரேஞ்சின் மனைவி.......... ஜேக்கின் உதடுகளில் இன்பத்தை உறிஞ்சிக்கொண்டிருந்தாள்.

கிரேஞ் மிருகமாகிக் கொண்டிருந்தான். கள்ளக்காதலர்களின் பின்வந்து நின்றான் புதரில் மறைந்தபடி.

"ஜேக்! உண்மையான ஆங்கிலேயனுக்கும், கலப்பு ஆங்கிலேயனுக்கும் நிறத்தில ஒற்றுமையிருக்கலாம். ஆனால் ஆங்கிலேயரின் உள்ளம் அவன் சாம்ராஜ்யத்தைவிடப் பரந்தது இல்லையா?"

"ஜீன்! கிரேஞ்சை ஏன் இழிவாகப் பேசுகிறாய்? நான் இன்றோ நாளையோ! லண்டன் போய்விடுவேன். பிறகு வாழ்நாளெல்லாம் காப்பாற்றவேண்டியவன் கிரேஞ் தானே!"

— தமிழ்த்தென்றல்

புத்தகங்கள், பத்திரிகைகள்
விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை

"ஜேக். என்னை விட்டு விட்டு நீ மட்டும் லண்டன் போகிருயா! அந்த அழகிய 'தேம்சை' நான் பார்க்கமுடியாதா ஜேக்! நம் குழந்தையாவது லண்டனில் பிறக்கட்டும் ஜேக்!"

"நம் குழந்தையா?"

"ஆம்! உன் குழந்தைதான்!"

பழி தீர்த்தான் 'கிரேஞ்'

அவள் அவனை ஆரத் தழுவிக் கொண்டாள், மெய்மறந்திருந்தாள். அவள் ஜேக்கின் மார்பின்மேல் சாய்ந்தபடி தரையில் கிடந்தாள்.

'ஆ! ஜீன்' அலறினன். உடலெங்கும் ஒரே அரிப்பு. சொரிந்து சொரிந்து தத்தளித்தான். கதறினன். காட்டுவெளி முழுக்க எதிரொலித்தது அவனது கூக்குரல்.

ஜின்னே, நிலை மாறினின்ருள். சிந்தனை நொந்து தவித்தாள். பயன்?

"ஜீன்! ஜீன்!" என்று கதறினன். சிறிது நேரத்தில் கிரேஞ் நாலைந்து சுதேசிகளுடன் அங்கே வந்தான்.

ஓடிப்போய் அவன் காலைக் கட்டிக்கொண்டு "ஜேக் ஜேக்" என்று அழுதாள். அவன் இரக்கமேயில்லாமல், அவள் தலைமயிரைப் பிடித்து தூக்கி எறிந்தான்.

ஜேக்கின் பிணம் ஆற்றில் எறியப்பட்டது. ஓசை படாமல் விஷ ஊசி ஊதிக் கொல்லும் 'போர்னியோப்' போர்முறைப்படி ஜேக்கை பழி தீர்த்தான் கிரேஞ்.

விழிவாங்காமல் பார்த்தான்:

ஜீன் இதை அறிந்துகொண்டாள்.

அன்றிரவு 1 மணியிருக்கும். குரல்வளை நெறியும் சப்தம் கேட்டு கிரேஞ் படுக்கையை விட்டு எழுந்தான். அடுத்த அறையை எட்டிப் பார்த்தான். ஜீன் கயிற்றில் தன் உயிரை வதைத்துக்கொண்டிருந்தாள்.

"கிரேஞ் கயிறை வெட்டவில்லை. ஆனால் துடிக்கும் அந்த ஜீவனை விழிவாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு ஜீவனு? அவள் 4 மாதக் கர்ப்பிணியல்லவா?"

கதையை ராம்சே முடித்தார்.

அபாக்யசாலி போய்விட்டாள்:

சிறிதுநேர மெளனத்தின்பின் வேலைக்காரன் டீ கொண்டு வந்தான். டீயின் ஆவி காற்றில் கரைந்து கொண்டிருந்தது.

வேலைகளையெல்லாம் என்னிடம் ஒப்படைத்தார்.

"மிஸ்டர் பாலசுப்ரமணியம். நான் வருகிறேன், ஒரு வேண்டுகோள், இந்த வீட்டைப் பத்திரமாக வைத்து அனுபவியுங்கள். இது நான் கட்டிய வீடு."

ராம்சே போய்விட்டார்.

ஜன்னல் வழியாக அவர் ஆற்றங்கரை போய்ப் படகேறும் வரை கவனித்துக் கொண்டிருந்தேன்.

— தமிழ்த்தென்றல்



[மூலம்: கவிஅரசர் தாகூர்]

[தமிழாக்கம்: டி. என். கிருபேந்திர பாபு. பி. எஸ்ஸி. (ஆனர்ஸ்)]

கோடையிலே அலைந்து திரியும் சின்னஞ்சிறு பறவைகளே! என் பல கனியின் முன் வந்து தங்கிச் சிறிது நேரம் பாடிவிட்டுப் பறந்து செல்லுங்கள்.

இலையுதிர் காலத்திலே, மரங்களிலே பழுத்த இலைகள், பாடாமல் அலைந்து பெருமூச்சிட்டுக் கருகி, உதிர்ந்து கீழே விழுகின்றன.

உலகமெங்கும் சுற்றித்திரியும் சின்னஞ்சிறு மனிதர்களே! எனது சொற்களுக்குச் சற்றே செவிசாயுங்கள்.

தன்னை விரும்புகிறவனுக்கு உலகம் தன் பரந்து கிடக்கும் முகத்திரையை விலக்கிக்காட்டுகிறது!

அது அவனுடன், ஒரு அழியா உண்மைப்பாடலின் பிம்பமாக ஒன்றிவிடுகிறது.

நிலமடந்தையின் கண்ணீர், அவளுடைய புன்முறுவல்களை மலரச்செய்கின்றது.

— தமிழ்த்தென்றல்

பரந்து விரிந்து கிடக்கும் பாலைவனம், பச்சைப் புல்லின் காதலால் கருகுகிறது. ஆனால் புல்லோ தன் தலையை அசைத்து, வாய்விட்டுச் சிரித்துப் பறந்துவிடுகின்றது.

கதிரவன் மறையும் இந்நேரத்தில், நீ அழுது கண்ணீர் சிந்தினால் விண்மீன்களின் காட்சியையும் இழந்து விடுவாய்.

குமிழியிட்டு ஓடும் தண்ணீரே, நீ செல்லும் இடங்களில் கிடக்கும் மணல், உன் பாடல்களுக்கும் ஆடல்களுக்கும் ஏங்கிக் கிடக்கிறது.

நீ அவற்றின் சுமையைக் குறைப்பாயா?

இரவில் பெய்யும் மழையைப்போல், அவளின் ஆவல் நிறைந்த முகம், என் கனவுகளைக் கண் காணிக்கிறது.

அன்பே! நாம் அன்னியர்கள் என்று ஒரு சமயம் கனவு கண்டோம். ஆனால்,

விழித்தெழுந்து பார்த்ததும் நாம் இருவரும் காதலால் பிணைக்கப்பட்டிருப்பதை உணர்கிறோம்!

மாலை நேரம் மௌனமாக இருக்கும் மரங்களின் மீது திணிக்கப்படுவதுபோல், என் அமைதியான மனத்தில் துக்கம் திணிக்கப்படுகிறது. (தொடரும்)

சிடி பிளாக் மேக்கர்ஸ்
போட்டோ ரூமென்,
3 கலர் பிளாக்குகள் செய்யுமிடம்.
No. 11, அங்கிக்கடைப் பொட்டல், மதுரை.

இந்திய மழலைகள் சிங்க பலம்பெற
எமது
என். எம். பி. பார்லி
குளுகோ பிஸ்கோத்துக்களை
உபயோகியுங்கள்.
59, அமெரிக்கன் காலேஜ் எதிர்புறம்,
மதுரை.
—'ராஜன்'

எலெக்டிரிக்
மிஷினில்
தயார் செய்த
பியூர் காபியும்,
சிக்கரி கலந்த
காபியும்
1, 3, 5, 7, 20
பவுண்டு டின்களில்
சகாயமான
விலைக்குக்
கிடைக்கும்.

எட்வர்ட் காபி ஒர்க்ஸ், காளியம்மன் கோவில் தெரு, விருதுநகர்.

பொன்னம்மா என் காதலி

[நாமக்கல் ரா. பாலசுப்பிரமணியம்]

மாமலர்ச் சோலையிலே— ஒருநாள்
மாலை நல்நேரத்திலே
தேமலர்ப் பூவினையே—வண்டினம்
தேடிடும் வேளையிலே.

தென்றல் உலவிவரும்—குயில்கள்
தீங்குரலில் இசைக்கும்
குன்றுகளை நோக்கி—மானினம்
குதித்துச் செல்லல் கண்டேன்.

மாலைக் கதிரோன்தன்—உடலில்
மஞ்சள் நிறம்பூசி
கோலம் அளித்திடும்நல்—காட்சியே
கொலுவெனலாம் இயற்கை.

அந்நல் நேரத்திலே—மனத்தை
அள்ளிப் பறித்திடவே
செந்திரு மாதெனவே—ஒருபெண்
செல்லுவதைப் பார்த்தேன்.

அந்தி மயங்கும் நேரம்—அவளின்
அங்க அமைப்புகளால்
எந்தன் உடலதிலோர்—உணர்ச்சி
எங்கும் நிறைந்ததுவே.

அவளைத் தொடர்ந்துசென்று—பெண்மணி
"யார்நீ" எனக்கேட்டேன்
குவளை மலர்க்கண்கள்—விரித்தே
குறுநகை செய்துநின்றாள்.

மெல்ல உரைத்திடுவாள்—'பொன்னம்மா'
மேதினியோர் அழைக்கும்
நல்ல பெயராகும்—உமையே
நானறிய உரைப்பீர்.

வண்டுகள் சேர்ந்திசைக்கும்—இனிய
வண்ண இசையதுவோ கற்
கண்டெனவே இனிக்கும்—உன்னையே
காதல் கொண்டிட்டவன் நான்.

எந்தன் பெயர் 'பொன்னப்பன்'— கண்மணி
எப்படி நம் பொருத்தம்?
உந்தனைக் கண்டவுடன்—என்மனம்
உன்மத்த மானதடி.

கட்டிப் பிடித்திடவே—எண்ணியே
காரிகைபக்கம் சென்றேன்
எட்டி நகர்ந்து விட்டாள்—பொன்னம்மா
எங்கோ மறைந்து விட்டாள்.

கனவினில் கண்டவள்தான்—பாரினில்
கண்டவர் யாரும்உண்டோ
நனவினில் பார்த்திடவே—நானுமே
நாடி அலைந்திடுறேன்.

* தலைவலி
* ஜலதோஷம்
* ஜுரம்
* பல்வலி
* தசைவலி

முதலியவைகளுக்கு நிச்சய நிவாரணி

அனுபைரின்

தயாரிப்பாளர்கள் :

மெர்குரி பார்மஸூடிகல்ஸ்,

தெற்காவணி மூல வீதி : : மதுரை.

"ராஜும்"



இலக்கியமும் கலையும்

[மூலம்: ஆபர் கிராம்பி]

[தமிழாக்கம்: தென்னாப்பிரிக்கா-டர்பன் திரு. ச. மு. பிள்ளை]

மொழியினுடைய கலைப்பெருக்கின் வெளியீடுதான் இலக்கியம். தற்காலிகமாக இதை இலக்கியத்தின் விளக்கமாகக் கொள்ளலாம். ஆனால் இலக்கியம் என்றால் என்னவென்பதற்கு இதை ஓர் சூத்திரமாக வைத்துக்கொள்ள முடியாது. இந்த விளக்கத்திற்கு உள்ளடங்கிய வெல்லாம் இலக்கியம் என்றும் கூறிவிட முடியாது. இலக்கியம் என்ற பதம் சரியான அர்த்தத்துடன் இருக்க வேண்டுமானால் இதை முடிவான சூத்திரமாகக் கொள்ளக்கூடாது. சம்பாஷணை இலக்கியமல்ல. ஆனால் சம்பாஷணையையும் கலை என்று கூறுகிறோம். அதே மாதிரியாக பாக சாஸ்திரத்தின் கலை, யுத்த சாஸ்திரத்தின் கலை என்றெல்லாம் கூறுகிறோம். இக்கலை என்ற பதம் இவ்வளவு பதப்பிரயோகத்திலும் ஒரு அடிப்படையான அர்த்தத்தைப் பெற்றுத்தான் இருக்கிறது.

கலை என்றால் திறமை. எதிர்பார்க்கும் முடிவைப் பூரணமாகச் செய்ய — உபயோகப்படுத்தும் திறமை. இதனால் இலக்கியத்தைப் பற்றிக் கூறும்பொழுது கலை என்பதைச் சரியான பதப்பிரயோகம் என்று கொள்ளமுடியாது. அப்படி உபயோகித்தால் சொன்னதையே தான் திரும்பக் கூறுவோம். இலக்கியத்தை உற்பத்தி செய்யும் திறமை என்றால் ஏதாவது விளங்குகிறதா? நாம் இலக்கியம் என்பது என்னவென்பதைத் தெரிந்துகொண்டால் கலை என்பது என்னவென்று அறிந்து கொள்ளுவோம். திறமையில் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. இலக்கியத்தில் வெறும் சம்பாஷணையில் இருப்பதை விட அதிகமாக பாஷைப் பயிற்சியும் திறமையும் இருக்கிறது என்பது சாதாரண உண்மை. இலக்கியத்தில் இத்திறமை வார்த்தைகளைப் பொறுத்தமட்டில்தான். ஆனால் சம்பாஷணையில் ஒருவனுடைய மனித தத்துவத்தின் திறமும் கலந்திருக்கிறது. சில சமயங்களில் இதுதான் பேச்சில் வார்த்தைகளைவிட முக்கியமாக இருக்கிறது. கவிதைகள் பாடப்படலாம். நாடகங்கள் நடிக்கப்படலாம்—வாய் விட்டுப் பாடப்பட்டாலும், மௌனமாக வாசிக்கப்பட்டாலும் இலக்கியத்தின் கலைத்தத்துவம் வித்தியாசப்படுவதில்லை.

ஆகையினால் நாம் இலக்கியத்தைப் பற்றி விளக்கும்பொழுது அச்சடிக்கப்பட்ட வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. கண்ணில் பார்த்தாலும் வார்த்தைகள் எப்பொழுதும் (மானஸீகமாகவாவது) கேட்கப்படுவது

ன்று அறிய வேண்டும். இதனால் இலக்கியத்தில் வார்த்தைகள் பளிச் சென்று கேட்கப்படுபவையாக இருக்கவேண்டும். இதனால் இலக்கியத்தில் கலை என்னவென்பது, இலக்கியம் என்றால் என்னவென்ற விவாதமாகக் குறுகி விடுகிறது. இலக்கியம் உள்ளத்தின் ஒரு விதமான வெளியீடு. ஆனால் இலக்கியம் உள்ளத்தின் வெளியீட்டைமட்டும் குறிக்கவில்லை. அந்த வெளியீட்டிலிருந்து ஒருவர் பெறும் அநுபவத்தையும் குறிக்கிறது. நான் எனது அநுபவத்தைக் கூறும்பொழுது அது எனது உள்ளத்தின் வெளியீட்டைக் குறிக்கிறது. இதனால் இலக்கியம் உள்ளத்தின் வெளியீடு என்பதைப் போல் அநுபவத்தைக் குறிப்பது என்றும் கூறலாம். இலக்கியத்தை இவ்விருவிதத்திலும் ஆராய்வதினால், இலக்கியத்தின் விமர்சனத்தைமட்டுமல்லாமல் இலக்கியத்தையே பாதிக்கும் ஒரு தத்துவம் பிறக்கிறது என்று கூறவேண்டியிருக்கிறது.

இலக்கியம், ஆசிரியரின் உள்ளத்தின் போக்கைத்தான் வெளியிடுகிறது என்று கூறுவது இலக்கியத்தின் அகப்பகுதியைக் குறிக்கிறது. இதுதான் 'ரோமான்டிஸம்' என்ற மேனாட்டு இலக்கியத் தத்துவத்தில் கொண்டுபோய்விடுகிறது. ஆசிரியன் உள்ள நிகழ்ச்சியும் அநுபவமும் தான் இலக்கியத்தில் பிரதானம் என்பது அக்கொள்கையின் சாரம். இதற்கு எதிராக இலக்கியத்தைக் கவனிப்பது. இது புறப்பகுதி என்று கூறலாம். இது வாசகர்களின் நிலையில் இருந்து இலக்கியத்தை விளக்குவது. இத்தத்துவம் உள்ளதை உள்ளபடியே சொல்லவேண்டும் என்று எதார்த்தவாதம், (Realism) ரியலிஸம் என்ற கொள்கையில் கொண்டுவிடுகிறது. இதில் சொல்லப்படும் விஷயந்தான் பிரதானம். இரண்டு விதமான பகுதிகளும் ஓரளவு உண்மைதான். ஆனால், முழு உண்மையல்ல. இவ்விரண்டுவித நிலைகளையும் ஒருங்கே கவனித்தால்தான் இலக்கியம் என்றால் என்னவென்பது பூரணமாக விளங்கும். இதை ஆங்கிலத்தில் (Communication) கம்யூனிகேஷன் என்று கூறுகிறார்கள். இதனை உணர்த்தும் திறன் அல்லது ஆற்றல் என்று சொல்லலாம். இந்த உணர்த்தும் திறன் இப்பொழுதெதுவும் இல்லாவிடின் இலக்கியம் கிடையாது. இலக்கியத்தில் இந்த உணர்த்தும் திறனைத்தான் கலை என்று சொல்லுகிறோம்.

இலக்கியக்கலை என்று குறிப்பிடும்பொழுது மூன்று விஷயங்கள் இருப்பதைக் குறிக்கிறோம். ஒன்று ஆக்கியோன், இரண்டு வாசகன், மூன்று மொழி. இலக்கியமே உணர்த்தும் சம்பந்தம் என்று கூறும் பொழுது இதைத்தான் குறிப்பிடுகிறோம். ஆசிரியன் வாசகனுக்கு எப்படி உணர்த்துகின்றான், இவர்களிடையிலும் எப்படி சந்தர்ப்பம் ஏற்படுகிறது என்று கவனிக்கும் பொழுது அநுபவத்தின் வெளியீட்டில் அதுபெறும் உருவத்தைப் பொறுத்திருக்கிறது என்ற முடிவுக்கு வருகிறோம். வாசகனுக்கும் ஆசிரியனுக்கும் நீண்டகாலமாகப் பழக்கப்பட்ட ரூபத்தின் மூலம்தான் இலக்கியத்தை உணர்த்தமுடியும். இவ்விதமான உணர்த்தும் சக்தி அதன் உருவத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

— தமிழ்த்தென்றல்

விஞ்ஞானம்.

தங்கமோ தங்கம்!

[சு. இராமையா]

“செம்பும் தங்கமாகும்.” இது இன்று நேற்றுக்குத் தோன்றிய நம்பிக்கை அல்ல. அறிஞர் ‘அரிஸ்டாடில்’ அசையாப்பொருள்களின் தன்மையைப் பற்றி கண்ட நான்கு மூலக்கொள்கைகளே இதற்கு அடிப்படையாக அமைந்தது. இதன்வழியாக ஒரு பொருளை மற்றொரு பொருளாக மாற்றமுடியும் என்று கிரேக்க விஞ்ஞானிகளை நம்பவைத்தது.

ஏழாம் நூற்றாண்டில் கிரேக்கர்களை அரேபியர்கள் வென்றபின் விஞ்ஞான ரீதியில் ‘தங்கம்’ தயாரிக்க முனைந்தார்கள். எல்லா உலோகங்களிலும் ‘பாதரசம்’, ‘கந்தகம்’, ‘உப்பு’ இவைகள் கலந்திருக்கும் என்ற எண்ணத்தில் இவைகளின் விகிதத்தை மாற்றி மாற்றி அமைத்துக் கூட்டுவதால் ‘தங்கம்’ கிடைக்குமென்று முயன்றார்கள். பலன் கிட்டவில்லை.

இன்றோ ‘அணுவின்’ ஆராய்ச்சி இத்துறைக்கு ஆக்கம் தருவதாக விஞ்ஞான அறிஞர்கள் கருதுகிறார்கள்.

ஆதவனை பல கிரகணங்கள் தனித்தனிப் பாதைகளை அமைத்துக் கொண்டு சுற்றி வருகின்றன. அது போல அணுவின் நடுவிலும் ‘நியூக்ளியஸ்’ (Nucleus) என்ற பாகம் இருக்கிறது. அணுவே ஒரு முனைப்படுத்தப்பட்டிருக்கும். ‘நியூக்ளியஸ்’ குறிப்பிட்ட ‘நேர்மின் துளிகளை’ (Positive change of Electricity) உடையது. இதற்கு ‘புரட்டான்’ என்று பெயர். ‘நியூக்ளியஸ்’ குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ‘புரட்டான்களை’ உடையது. இந்தப் புரட்டான்களின் எண்ணிக்கை அந்தந்த மூலப்பொருள்களைப் பொறுத்ததாகும். ஒரு அணுவிலுள்ள புரட்டான்களின் எண்ணிக்கையே அதிலுள்ள ‘நியூக்ளியஸை’ வெகுவிரைவாகச் சுற்றி வரும் எதிர்மின் துளிகளின் (எலக்ட்ரோன்) எண்ணிக்கையாகும்.

தங்கத்தின் அணுவுக்கும் செம்பின் அணுவுக்கும் புரட்டான்களின் எண்ணிக்கையிலன்றி வேறெவ்விதத்திலும் வேறுபாடு கிடையாது. தங்கத்தின் அணுவில் புரட்டான்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட அளவில்தான் இருக்கும். செம்புக்கு வேறு அளவில் நிற்கும்.

செம்பின் ஒவ்வொரு அணுவிலும் புரட்டான்களின் எண்ணிக்கையைக் கூட்டியோ, குறைத்தோ தங்க அணுவின் புரட்டான்களின் எண்ணிக்கைக்குக் கொண்டுவந்தால் ‘செம்பு’ தங்கமாகும் அல்லவா! விரைந்து வளரும் விஞ்ஞான புதுமைக்கு எல்லை கட்ட எவரால் முடியும்?

— தமிழ்த்தென்றல்

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

மதுரையிலேயே மிகப் பெரிய ஹோட்டல்.

ஒரே சமயத்தில்
400 பேர்கள் சாப்பிட இடவசதி அமைந்தது. பெண்களுக்கும், குடும்பத்துடன் வருபவர்களுக்கும் மாடியில் சௌகரியமான இடம் உள்ளது. சுத்தம், நாவிற்கு ருசியுள்ள சிற்றுண்டிகள், சாப்பாடு, காபி இவைகளுக்கு இன்று பிரசித்திபெற்று
விளங்குவது

"நாகலக்ஷ்மி பவான்"
பிராமணாள் காபி & சாப்பாடு ஹோட்டல்
9—10, மீனாட்சி கோவில் தெரு,
(சென்ட்ரல் பேங்க் எதிர்)
மதுரை,

—'ராஜம்'

Prop:- நாகலிங்கம் ஸ்டோர்ஸ்
A. N. M.

[விருதை ந. இராமசாமி]

மோகன்.

" அழகும் அம்சமும் அன்றலர்ந்த அல்லி மலருக்கு உவமை...

" அகன்று அமைப்பிலே அணிபுரியும் நீள்விழிகள் நீலோற்பத்திற்கு நிகர்.........

" வளரும் நாட்களில் வளர்ந்து நிற்கும் வளப்பம் மாறாமல் கதிர் வீசும்கனகரெற்றியோ—பிறைமதிக்குப் பெருமை.........

" அலைபாயும் அங்கங்களின் அசைவு—படர்ந்து பரவும் திவ்விய பார்வையின் மவுசு—'ஷோருமில்' சுந்தரம் தவழும் சிங்காரப் பதுமையை அமைக்க ஆசு.........

" அவளைக் காணுந்தோறும்... ......எவராயினும் பருவத்துடிப்பில் பந்தாடப்படுவர். பாய்ந்தோடும் புயலில் பஞ்சு பட்டபாடு! பந்தி போசனத்தில் முதலில் தட்டு ஏற்படுவது பாயசத்திற்குத்தானே!

" நான் மட்டுமென்ன இதற்கு விதி விலக்குப்பெற—பருவத்தை அடக்க—விஞ்ஞானப்புதுமையைக் கண்டுபிடித்து 'நோபல்' பரிசு வாங்கியிருக்கிறேனா?

பகிரங்க விளம்பரம்!

" தேன்குடித்த வண்டும்—தித்திப்பைச்சுவைத்த சிறுவரும்—திரைகடல் ஓடி திரவியம் தேடிய வணிகரும்—மாறிமாறி.........? அதுபோல எனது எண்ணமும் கண்ணும் இடைவிடாது அந்தக் கனகரத்தைச் சுற்றிச்சுற்றி.........?

"ஆனால் அவளோ ஓட்டமும் நடையுமாய் ஒயிலும் ஒய்யாரமாய் அடடா! பறந்தாடும் பரவசக் கிள்ளையாய்—பாலகர் சாட்டையில் சுழன்றாடும் பம்பரமாய்—எத்தனை அக்கரை—எப்பேர்ப்பட்ட துடிதுடிப்பு.. ....

" மணப்பெண்ணின் தோழி என்றால் அதற்கொரு தனி மவுசு—

மரியாதை-மாண்பு இருக்கத்தானே செய்கிறது. கிள்ளி வைப்பது—கிண்டல் செய்வது — மாப்பிள்ளையை நையாண்டி பண்ணுவது – முடிச்சுப் போடுவது—முகத்தை வலிப்பது—இன்னோரன்ன குறும்புத்தனம் பூராவும் அவளிடம் குடியாட்சி நடத்தின கோலாகலத்துடன்.

"திருமணவிழா! நண்பன் நாகலிங்கம் புதுமணப்பூங்காவில் இன்பம் நுகரப்போகிறான்! இரு இளம் உள்ளங்கள் இன்ப இரவில் இணையப்போகின்றன என்ற பகிரங்க விளம்பரம்தானே திருமணமென்பது!

வட்டியில்லாக்கடன்!

"உலகம் என்னும் பத்திரிக்கையில் 'ஊர்' என்னும் முன்பக்கத்தில் பிரபல மானேஜிங் டைரக்டர்கள் முன்னிலையிலே — மூன்று கலரில் கொட்டை எழுத்துக்களில் செய்யப்படும் விளம்பரம் இத்திருமணம். இந்த விளம்பரமின்றி எவரும் விவாகம் செய்துகொள்ள முடியாது. மீறி 'அண்டர் கிரவுண்ட்' செய்தால்—அது கோர்ட்டில் வியாச்சியம் தொடுக்கமுடியாத வேதனை வழக்கு. இதனால்தான் திருமணத்தின்மூலம் ஊர் அறிய 'பெர்மிட்' கொடுக்கிறார்கள் போலும் பெரியோர்கள்.

"இவ்வாறு பிரபல திருமணம் நடைபெற்றால்தானே என்போன்ற வாலிப வண்டுகளுக்கு வண்ண ரோசாக்களின் பாதை காட்டும் பார்வை—போதையூட்டும் கோர்வை கிடைக்கும். இல்லையெனில்.........

தேர் திருவிழா காலங்களில்தானே இந்தக் களியாட்டத்திற்கு 'சான்ஸ்' கிடைக்கிறது. ஆண்டுக்கொருமுறை வரும் தேருக்கும் திருவிழாவிற்கும் என்று காத்துக்கிடப்பதென்றால் ....அடேயப்பா! எவ்வளவு கஷ்டம்...........எத்தனை ஏக்கம். அது எப்படி இயலும்? ஆகவேதான் தவிக்கின்ற இளமை உலகத்தின் தாகம் தீர 'திருமண விழா' எனும் திவ்வியமான திருவாய்ப்பு அளிக்கின்றனர், திரை மறைவில் அல்ல, திறந்த உலக அரங்கில், சிலத்தில் கொப்பளிக்கும் சீமான்கள்.

"நாகலிங்கத்திற்கும்—நளினிக்கும் திருமணமில்லையென்றால் நான் இந்த ஏந்திழையை—எழில்மதியை—சந்தித்திருக்க முடியுமா என்ன? ஆக திருமணங்கள் தினப்படியும் நடக்கட்டும் நாடெங்கும் நல்லபடியாக.

"வட்டியில்லாக்கடன் கிடைக்கிறதென்றால் 'அன்றாட காய்ச்சிகள்' நான் முந்தி நீ முந்தி என்று படையெடுத்துவிட மாட்டார்களா? வாரத் தவணையில் திமிர் வட்டிக்குக் கடன் வாங்கும் 'பாட்டாளி வர்க்கம்' இப்படி வட்டியில்லாக் கடன் கிடைக்கிறதென்றால் வரிந்து கட்டி திரண்டு விடுவார்களே! ஆனால் இந்தக் கடன் இவர்களுக்கு கிடைக்கக்கூடியதல்லவே?

வாரிவிட்டேன் பன்னீரை!

"திருமணத்தின்போது தம்பதிகளுக்கு உற்றாரும் உறவினரும் அன்பர்களும் நல்கும் மணப்பரிசு

கள். இதுவுமொரு கடன்தான். யார் யார் என்னென்ன வழங்கினார்கள் என்ற விபரம் மறக்கப்படாமலிருக்க வேண்டும். கௌரவத்தைக் காக்க இது மிகமிக அவசியம். வழங்கியவர் வீட்டில் ஒரு திருமணம், நல்லது பொல்லாதது வருகிறபொழுது இதே பொருள் அல்லது இதன் மதிப்புள்ள பொருள் அங்கே திரும்பிவிடும் சிறுவர் சுவரில் எறியும் சின்னஞ்சிறு ரப்பர்பந்தைப் போல.

"பரிசுகள் படைப்பெடுப்பின் அணிவகுப்பு. ஆணும் பெண்ணும் கூட்டமாக..........'சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்நாட்டிலே' என்ற பாரதியாரின் கனவு நனவாகிவிட்டதா? முன்பெல்லாம் சீர்வரிசைகள் வெள்ளிச் சாமான்கள்—வெண்கலப் பாத்திரங்களாக வரும். இப்பொழுதோ செக்குகளாக — கரன்சிகளாக.........ஏழைகள் வீட்டு, இல்லாத திருமணத்தைப் பற்றி இங்கு பேசவில்லை! நான் பேசுவது காய்ச்சி முறுகிய பசும்பாலைப்பற்றி—கம்மங் கஞ்சியை அல்ல!

"நானும் கூட்டத்தோடு கூட்டமாக நின்றேன், காந்தஊசி நோக்கும் திசை வடதுருவம்! நான் பார்க்கும் திசை லண்டன் டவுனிங் ஸ்ட்ரீட் பத்திலா இருக்கும்? அவளுக்கு மிக அருகிலே நெருங்கி வந்தேன். அவளது லலித மேனி என் உடலில் உராயும் அளவுக்கு.........?

"புத்துணர்ச்சி கொப்பளித்தது. மனம் பேதலித்தது. நண்பனொருவன் இடுப்பில் இடித்த இடியினால் தன்னுணர்வு அடைந்தான்... ......? கையிலிருந்த பன்னீர் பாட்டில் நினைவுக்கு வந்தது. மகளிர் கூட்டத்தின் மத்தியில் வாரிவிட்டேன் பன்னீரை!

சின்னஞ்சிறு பரிசு!

"குறி என்னவோ அந்த அழகு தெய்வத்தின் மீதுதான். தண்ணீர் துளிகள் மிளிர மிதக்கும் தாமரை போல.........அவளது அமுத முகத்திலே பன்னீர் துளிகள் பளபளத்தன. கோபப் படுவதைப்போன்றதொரு பாவனை. மறு விநாடி.........சிரிப்பொலி! அடுத்து குறும்பு அரும்பும் குறுநகை!

"அவள்யார்? அறிந்துகொள்ள அடங்கா ஆசைதான். ஆனால் தனிக்காட்டு ராணியாகத் திரியும் அவளது முகவரியை விசாரித்து அறிவதென்றால், விதர்ப்பமாக ஏதாவது.........?

"ஆனால் ஏதாவது சமயசந்தர்ப்பம் வராதா என்றே வருந்தினேன். வாடினேன். வழிபார்த்துநின்றேன்.

"அவள் மணப்பெண்ணுக்கு அளித்த—வெள்ளியில் செய்த–அந்த சின்னஞ்சிறு பரிசு — அதுதான் பிள்ளைத்தொட்டி–அதில் பொறித்திருந்த பெயரைப் பார்த்தேன். ஆம்! **பெயர் சிங்காரம்.........**

சிங்காரம்:

"ஆம்! **பெயர் சிங்காரம்.** என் அருமைத் தாய்தந்தையருக்கு நான் ஒருவனே வாரிசு. உடன்பிறப்பே

இல்லை, ஒரே ஒரு ஆணைப் பெற்று வளர்க்கும் பெற்றோர்களுக்கு பெண் மகவு இல்லாத மனக்குறையைப் போக்க 'ஏம்மா! போம்மா!' என்று செல்லமாகக் கூப்பிடுவார்கள் அல்லவா? ஏன் பட்டணத்திலே ஆடவர்கள் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாகப் பழகினால் பிரியத்தோடு இப்படித்தானே செல்லமாக கொஞ்சிக் குலாவுகிறார்கள்.

"இதுபோல பட்டணத்து நாகரிகத்தில் திளைத்த எனது பெற்றோர்கள் நான் ஒரே ஒரு பெண்ணாகப் போய்விட்டதால் அன்பு கசிய 'சிங்காரி' என்ற பெயரை 'சிங்காரம்' என்று சிங்காரித்தனர். பெண்பால் ஆண்பாலாக மாற்றி அழைக்கப் படுவது முதிர்ந்த அன்பின் அறிகுறியல்லவா? ஏன் காதலின் எல்லைக் கோட்டிற்கு வந்தவர்களுக்கு இது சர்வ சாதாரணம்-சாமான்ய நடை—தண்ணீர் பட்டபாடு ஆற்றங்கரையில்.

அள்ளிக்கொட்டிய ஆசைப் பார்வை:

"வீட்டில் சிங்காரமாகத் திரிந்தது, பள்ளியில் ஒய்யாரமாக நிலைத்தது. அத்தனை அளவு செல்வம் கொழிக்க வளர்ந்தேன்—படித்தேன்—வாழ்ந்தேன். என்ன வாழ்ந்தேனா? உம்! கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டுவந்தால்......! வீண் முயற்சி! வேதனைப் பயிற்சி' விலை கொடுத்தா வாங்குவது, வேறு வேலையில்லையென்று?

"என்னைச்சுற்றி வட்டமிட்டு வாடிவதங்கச் செய்த வேதனையை விலக்குவதற்கு—மறப்பதற்குத் தானே—இந்த நர்ஸ் வேலையில் ஈடுபட்டிருக்கின்றேன்,

"எவ்வித பயமோ—கசப்போ—பந்தமோ—கவலையோ இன்றி இத்தொழிலில் டணிபுரிந்து வாழ்ந்து வந்தேன். ஆனால் இன்றோ........

"எனது பழைய பள்ளித்தோழி நளினியின் திருமணத்திற்குப்போகாமல் தட்டிக்கழிக்க என்னால் இயலவில்லை. நானும் அவளும்... அடடா! அந்த நாள் இனி எப்படித் திரும்பும்? ஆற்று வெள்ளத்தைப் போல அணையைத் தாண்டிப் போனது போனதுதானே! திருச்சி சென்றேன். ஆ ரல் இங்கு எனக்கு இவ்வாறு 'அதிர்ச்சி வைத்தியம்' ஏற்படுமென்று கண்டேனா? 'பென்சிலின் இன்செக்சன்' ஏற்றப்பட்ட உடலைப் போல என்......முறுக்கேறிற்று. அவர் பெயர் மோகனாம். அவர் அள்ளிக்கொட்டிய அந்த ஆசைப்பார்வை......... ஐயய்யோ! ......நான் என்னவோ போலாகி விட்டேனே!

— தமிழ்த்தென்றல்.

A.R.M. ஆறுமுகபாண்டியன
அருப்புக்கோட்டை

இம்மாதம் வெளி வருகிறது!

அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை (தமிழ்)
டைரக்ஷன்
Ch. நாராயணமூர்த்தி & M.K.R. நம்பியார்
நியூடோன் BHARAT STUDIO
விபரங்கட்கு அசோகா பிக்சர்ஸ், மைலாப்பூர், சென்னை.

அதையுங்கூட..........

அனுபவித்து..........

"வேலையில் சோர்வு தட்டியது. ஏதோ ஒரு புரியாத எண்ணம் தலை தூக்கி ஆடிற்று. இதயத்துள் ஒரு மாதிரியான 'நமச்சல்' ஏற்பட்டது.

"நான் இங்கும் அங்கும் நடமாடும்போதும்—மணப்பெண்ணுடன் சுற்றி வரும்போதும் — கூட்டத்தில் நின்று கொண்டிருக்கும்போதும் — அவர் முறைத்து முறைத்துப் பார்த்தார் என்னை. கோவில் யானையைக் கண்ட குழந்தை குதியாட்டம்போடுவது போல, எங்கு சென்றாலும் வளைந்து வளைந்து வந்தார். நல்ல வேளை தனிமையில் சிக்கவில்லை. சிக்கியிருந்தால் என்னசெய்வாரோ? அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் கிட்டியிருந்தால்.........? அதனாலென்ன? அதையுங்கூட அனுபவித்து.........!

ஆசையைக் கொல்வதா?

"இன்று எழும்பூரில் இறங்கியதிலிருந்தே என்னை அலைகள் எழுந்தாடுகின்றன—தழுவிக் கொந்தளிக்கின்றன. என்னுடைய எண்ணமெல்லாம் என்னை ஏங்கித் தவிக்கிறேன். ஒரு வேளை.........பட்ட செடி என்றாலும் பசுமை உள்ளடங்கி இருந்தால், பெருமழையென்ன சிறு தூறலில் கூட செழுமை சீக்கிரமே பரவி விடுகிறதல்லவா? இறுதிமூச்சு வெளியேறும் வரை இந்த உயிர் உணர்வு......... இரத்தப்பசை.........இருக்குமோ? இந்தக் கொள்கையில் 'பருவத்தின் தாகம்—மேனியின் மோகம்—ஆர்ப்பரித்து வேகமாக! இனி நான்.....?

"அவருக்கொரு கடிதம் எழுதலாமா? மேலும் விக்கிரமாசமாக ஏதாவது நினைத்துக்கொள்வாரா? இல்லையேல் ஒரு 'முற்போக்கு சக்தி' என்று ஆண்வர்க்கம் முழுமுழுக்காதா? முற்றிக்கொண்டு நாமே கடிதமெழுதுகிறோமென்றால், அதை ஆச்சரியமாகக் கருதமுடியாது பாசமில்லையே! கேவலமாகவல்லவா நினைப்பார்கள். இளமை.............. நிலைப்பது என்று ....அதனால் இதற்காக ஆசையைக் கொன்றுவிடுவதா?

தாழ்ந்த சாதிக்காரர்!

"வாலிபர்கள் சமூக வளர்ச்சியைப் பற்றி வாய்கிழியத்தான் பேசுகிறார்கள். சிந்தனையில் உணர்வு இருக்கலாம். சிரிக்காமல் சிரமமெனப் பேசலாம். ஆனால் செயலில் ....இதைப் பற்றித்தான் இந் நாட்டில் யாரும் கேட்கக் கூடாதே!

"பாங்கியில் சேமித்து வைப்பது சாலச்சிறந்த செயல் என்பதை அறிவார்கள். ஆனால் நடைமுறையில் வீட்டுக்குவீடு மனைவி – மக்கள் மீது வண்டிப்பாரத்திற்கு நகை நட்டுக்களை ஏற்றி, அந்தக் கன்றுவிக் காட்சியைக் காணவேண்டிய மாட்சி என்று பெருமிதம் பேசுவார்கள். ஏன் ரசிக்கவும் செய்வார்கள்.

"வருங்கால சந்ததியின் வாழ்வுக்கு இன்ஸூரன்சு திட்டம் ஏற்றம் கொண்டது என்று போற்றுவார்கள். ஆனால் இன்ஸூரன்ஸ் ஏஜண்டென்றால், மனித சமூகத்தில் பார்க்கவே கூடாத தாழ்ந்த சாதிக்காரர்

— தமிழ்த்தென்றல்

என்று கண்ணை மூடிக் கொள்ளுவார்கள்!

ஊசி மருந்து வேலை:

"இப்படித்தானே 'பெண்ணடிமையைப்' பற்றி இவர்கள் பேசுவதும் புலம்புவதுமிருக்கிறது. 'மாதர் முன்னேற்றம்' குறித்து மகத்தான திட்டங்கள் வகுக்காத எந்த அரசியல் கட்சியாவது நாட்டில் இருக்கிறதா? ஆனால் மனிதகுலத்தின் முதுகெலும்பான மாதர் வர்க்கம் மண்ணில் புழுவென காலம் காலமாக.........? வரலாற்றுப் பழைய சுவடிகளைப் புரட்டினால்.........? பாசியும் தூசியும் படிந்த மாசுகப்பிய ஏடுகள். காலக் கரையான்களால் கூட அரிக்கமுடியாத அநியாய சம்பவங்கள். அடுக்காத நிகழ்ச்சிகள் எத்தனை ஆயிரம்!

"நிம்மதிகொண்ட வாழ்வில் திளைக்க விரும்பினேன். கனிவியின் நல்ல தாளுக்குச் சென்றவள் நழுவி விட்டேனே! என் இதயத்தை ஏதோ ஒன்று அழுத்தி இன்னல் படுத்தி வாட்டுகிறதே! அந்த வாட்டத்தில் கூட ஒரு நாட்டமா? நாட்டத்திலொரு மயக்கம். பிறகு தெளிவு. பெரிய ஆச்சரியமாகத்தான் இருக்கிறது இந்த உணர்வு செய்யும் ஊசி மருந்து வேலை!

எழுதினேன்: அனுப்பினேன்:

"சோடாக்குடித்த கொடி நேரத்தில் 'கும்'பென்று 'கேஸ்' ஏப்பம் விடுவதுபோல......அவரை நினைக்கும்போதும் ஏதோ ஒரு உணர்ச்சி

— தமிழ்த்தென்றல்

திடீர் திடீரென பாய்கிறது. அதிலே ஒரு அமைதி நிலவிய இன்பம். அந்த இன்பத்திலே எழும் கனவு......அக் கனவிலே.........அவர்!

"குழம்பிக்கிடக்கும் மனதைக் கெட்டிப்படுத்திக்கொண்டு ஒரு கடிதம் எழுதினேன். அதை எழுதி முடிப்பதற்குள் அப்பப்பா!......... எத்தனை சங்கடங்கள். வியர்வைத் துளிகள்......கண்ணீர் திவலைகள்.... ...பெருமூச்சு.........விம்மல்......... இன்னும்.........எப்படியோ எழுதியும் விட்டேன். அனுப்பவும் செய்தேன்.

மனித உருவில்—ஒரு சடலம்!

"ஒரு நாளா.........இரண்டு நாளா.........வாரம் இரண்டு அல்லவா வந்து போய்விட்டது. 'கடிதம் கிடைத்தது' என்று இரண்டு வரிகளில் 'அக்னாலட்ச்மெண்ட்' கொடுக்கக்கூடாதா? ஒருக்கால் தவறான விலாசம் எழுதி.........அது எப்படி இருக்கும்? நான்தான் ஸ்டோர் ரூமிற்குப் போனபொழுது அவரது பெட்டியில்பொறித்திருந்த 'எம். ஆர். மோகன், மெர்ச்சண்ட், திருநெல்வேலி' என்ற முகவரியை அழுத்தம் திருத்தமாகப் பார்த்தேனே! பிறகு அந்தப் பெட்டியை எடுத்துத்தானே தலைக்கு......முகத்திற்கு...... தடவி 'மேக்கப்' செய்தார்.

"அப்படியென்றால் மறுமொழி கிடைக்காத காரணம்.........?

"ஆம்! நான்தான் புத்தியைக் கடன் கொடுத்துவிட்டேனே!

"பெண்புத்தி பின்புத்தி எனப் பேசிவரும் சமூகத்தில் என்னை ஓர் எடுத்துக்காட்டாக......பெண் இனத்திற்கு இழிவைத் தேடிய செயல்தானா! ஆண்கள்தான் பக்கம்பக்கமாக 'நாவல்'ப் போல கடிதங்கள் தீட்டி—'தேனே! மானே! காலம் கழியுதே வீணே!' என்று வர்ணித்து—கால் வலிக்க சுற்றிச் சுற்றி—மோனத்தவம் புரிந்து—மேசன்ஜர்கள், டபுள்டீம்.ஏ.க்கள் கிடைக்குமானால் காரியங்கள் போட்டு—பின்னர் தானே ஒரு பெண்ணின் சம்மதமோ—மறுப்போ பதிலாகப் பெறுவது வழக்கம்.

"வழக்கத்திற்கு மாறாக நான் நடந்துகொண்டது தவறுதானே! இதற்காக நான் வந்து அவரை குறைகூற என்ன இருக்கின்றது? அவரும் இப்பொழுதும் உலகில் ஒரு மெம்பர்தானே!

"உள்ளமும் உணர்ச்சியுமின்றி வாழும் மனிதஉருவில்—ஒரு சடலம்....

மோகன்:

"உள்ளமும் உணர்ச்சியுமின்றி வாழும் மனிதஉருவில்-ஒரு சடலம்...... என்றே எண்ணியிருப்பாள் என்னை.

"கடிதம் எழுதுவாள் இப்படி என்று கனவில் கூட நான் கருதவில்லை. அபாய அறிவிப்பு இல்லாமல்—எதிர்பாராமல்—தாக்கப்படும் போது 'மாக்னட்-அரண்' என்றால் கூட........கலகலத்துத்தானே நிற்கும்! கேட்டுக்கேட்டுக் கெஞ்சினாலும் கிடைக்காத இன்பக்கொடி—இனி மைப்பொருள்—கிடைக்கும்பொழுது தட்டிக்கழிக்க........

"எனது புகைப்படம் தேவையாம்! நாகரிகப் பண்பு! காதல் வளர கனிவான பாதை! பதிலும் படமும் அனுப்பவேண்டியதுதான். என்றாலும் அவளைப்பற்றி பூரா விபரமும் தெரிந்துகொள்வது அவசியமல்லவா?

தேன் குடத்தில் சிறு துளி விஷமா?

"நீந்தத்தெரியும் என்பதற்காக உடனேயே குதித்துவிடவேண்டியதுதானா? ஆழம் இவ்வளவு, அலை தட்டாது என்பதை அறிந்தல்லவா குதிக்கவேண்டும்? இதைவிட்டு நீர் நிலை என்றவுடன் 'லைாறு'க்கடிப் பேன் என்றால்........

"எல்லாம் நானே மறுதினம் பட்டணம் போகிற போக்கில் பார்த்துப் பேசி........ஆனால் அப்பாயும் இப்படியும் அசையமுடியாத வியாபார அலுவல்கள் மாறி மாறி வந்து ....மாதமொன்றல்லவா எப்படியோ ஓடிவிட்டது!



"உள்ளமும் உணர்ச்சியுமின்றி"—என்பதை ஒரு ஏழையில்.......

— தமிழ்த்தென்றல்

"எப்பொழுது பார்த்தாலும்... ...அந்த நீள்விழிகளின் குறுகுறுப்பு என் நினைவில்......இப்படியே எப்படித்தான் நாட்களை நகட்டுவது. கிளம்பி விட்டேன். முதல் சந்திப்பிலேயே முற்றிலும் அவளை என்னவளாக.........பழைய போட்டோ காபி எனக்கே சரியாகப் படவில்லை. புதுமாதிரி—புதுமையில் 'போஸ்' கொடுத்து புகைப்படம் எடுக்க வேண்டும், ஆளைப் பார்க்க எப்படியும் வெட்கம் வரும் பெண்களுக்கு. படத்தைப் பார்த்துப் பார்த்து ரசிக்க ரசிக்க 'காதல்' அப்படியே பழுத்து 'கடகட'வென்றுஉதிரவேண்டாமா? 'விநோதா ஸ்டுடியோ' விற்குள் நுழைந்தேன்.

"போஸ் கொடுப்பதில் புதுமாதிரியான முறை—லயம்—வேண்டும். போட்டோ ஆல்பத்தை வாங்கிப் புரட்டினேன்.

"தேன் குடத்தில் சிறு துளி விஷமா? களங்கமற்ற கூட்டத்தைக் கலைக்க 'கண்ணீர் புகை' பிரயோகமா? மாட்டுவண்டியும் லாரியும் அஜாக்கிரதையாய்ஒன்றோடொன்று மோதினால்........? இதயம் வெடித்தது-உடல் துடித்தது—ஆல்பத்திலிருந்த போட்டோ ஒன்றில் சிங்காரம் ஒரு ஆடவருடன் கைகோர்த்துக் காட்சி தருகின்றாள்.

வேதனை உள்ளம்

வெந்து வதங்க.......

"இவர்கள் யார் யார்? நான் அறியலாமா?"

— தமிழ்த்தென்றல்

ஸ்டுடியோக்காரரிடம் நான் கேட்டது இப்படி.

"ஓ! அதுங்களா.....இப்போ சென்ட்ரல் ஆஸ்பத்திரியிலிருக்கிறவங்க........பேர் 'சிங்காரம்'. கல்யாணப்புதுசிலே எடுத்தாங்க இது... ....உலகத்திலே பாருங்க சார்! நல்லவங்களுக்கு நஷ்டமும் கஷ்டமும் வர்றது எதேஷ்டமாய் போச்சுதுங்க. மறுவாரமே அந்த மனுசன் திடுதிப்பென மாரடைச்சு........"

"மின்சார சக்தியால் மின்வெட்டு வேகத்தில் சுழற்றி விடப்பட்ட இயந்திரம் போல........என் சிந்தனை சுழன்றது. அப்போ........ சிங்காரம் விதவையா?

"வேதனை உள்ளம் வெந்து வதங்க வெளியேறினேன். இனி அவளைச் சந்தித்து ஆகப்போகிறதென்ன? ஒரே போஸ்ட் கார்டு. இரண்டே வரிகள். சந்திக்க இயலாது. ஏன்? சமூகத்தை எதிர்க்க துணிவுமில்லை. வசதியுமில்லை. கார்டு தபால் பெட்டிக்குள் நழுவி ஓடியது.

உலகம் கருத்தது:

மறைந்தது:

"கோடை வெயில்—அதுவும் அக்கினி நட்சத்திரமாமே—தகிக்கிற தகிப்பிற்கு அப்படியே ஐஸ்கிரீம் பார்லருக்குச் சென்றுவிட்டு நம்பா ஒண்ணைப் பிடிக்கலாமென்று மவுண்ட் ரோடு ரவுண்ட் டானாவை குறுக்காக........

"ஆமாம்! மறுமணம் புரிவதென்றால் எளிதான காரியமா?

USE

MURALI PENS.

MADE BY ENGLISH EBONITE.

GUARANTEE LEAK-PROOF.

Stockists:-

CO-OPERATIVE STORES,

VIRUDHUNAGAR.

RAMDAS PHARMACY,

Cross cut Road, :: Gandhipuram,

COIMBATORE.

Leading Chemists and Druggists.

Supplying to Tea and Coffee Estates,

Mill Dispensaries, Government Hospitals,

Doctors and Dealers.

A trial order will convince you of our prompt execution and favourable prices.

ஆனால் வருங்காலவாழ்க்கை.........

உற்றார் உறவினர் உறவு அறுபடும். அப்படியே அறுபடாவிடினும் மனம் கலந்து பழக மாட்டார்கள், இருதரப்பிலும் சீர்திருத்தவாதிகளாகத் தான் இருப்பார்கள். ஆனால் ஏனோ ஒரு கூச்சம்! களங்கப்பட்ட வாழ்வு என்பார்களே! சமுதாய மேடுபள்ளங்கள் அடியோடு நொறுக்கப்படாதவரை நம்மால் சீர்திருத்த முறையைக் கையாள இயலாது! செய்துபார்த்தவர்களைக் கேட்டால் அல்லவா அவர்கள் கதை தெரியும்?

"சிந்தனையில் புயலா? கிர்ர்... ஓரே இரைச்சல். மோதிய அதிர்ச்சி. அய்யனாவுதான்.

"உலகம் பார்வையிலிருந்து கருத்து மறைந்தது.........

நான்:

"உலகம் பார்வையிலிருந்து கருத்து மறைந்தது.........

"நடுவீதியில் சிந்தனைக் குதிரையில் ஏறினால் இப்படித்தான். ஆசாமி ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

"இடது பக்கம்தான் பலமான வலிப்பு. மற்றப்படி ஆபத்தில்லை. சமர்த்தான டிரைவர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள்! இல்லையென்றால் நித்தியப்படி எத்தனை எத்தனையோ விபத்துக்கள்........

உலகத்தின் தாய்!

"எமர்ஜன்ஸி வார்டிற்கு 'நைட்' டூட்டிக்கு சிஸ்டர் சிங்காரம் இன்சார்ஜ். ஆக இரும்பும்—காந்தமும் ஒரே இடத்திலே.........அதுவும் பக்கம்பக்கமாக.......... நெருக்கம் நெருக்கமாக!

"முதலெடுப்பில் போட்டிருந்த 'பேண்டேஜினால்' கவனிக்கவில்லை தான். நோயாளிக்கு 'ஜன்னி' கண்டு 'சிங்காரம்! சிங்காரம்!' என்று புலம்புகிறபொழுது அவள் சிந்தனையில் சூடுதட்டாமல் இருக்குமா? ஓரே நோக்கு! அலறி விட்டாள்.

"நர்ஸ்! உலகத்தின் தாய்!—வியாதியஸ்தரின் மாதா!—ஆவியுடன் போராடுவோரின் அம்மா!—மோகனை இருப்பினும் சரி-மற்றொரு சாதாரண 'பிளாட்பாரமாக' இருப்பினும்சரி—சிஸ்டர் சிங்காரம் மனமார பணி புரிவாள். அந்த புனிதமிக்க சேவையின் பெருமை இது அல்லவா!

மோகன் மறுத்து விட்டான்!

"அவன் காரசாரமாக எழுதி இருந்த அந்த கார்டு அன்றைக்கு மாலைடெலிவரியில் வந்தது, அவளது டைரியில்தான் இருந்தது. இதையும் அவள் நினைக்காமல் இல்லை.

"சிகிச்சை முறைகள் சிறக்கச் சிறக்க மோகன் உடல்நிலையும் சிறந்தது. உற்றார் உறவினர் யார்யாரோ வந்தார்கள். போனார்கள். 'டிஸ்சார்ஜ்' செய்து 'பிரைவேட்' ட்ரீட்மெண்டிற்கு கொண்டுபோக முயன்றார்கள். மோகன் மறுத்துவிட்டான்.......... ஏனோ?

வெறிஉணர்ச்சியின் வேடிக்கையா?

"சிங்காரம்! இந்தப் பத்துத் தினங்கள் உன் பக்கத்திலேயே இருந்ததால், உனது பரிசுத்தமான மனதை — அன்பை — பணிவை— அறிந்தேன். சேவையின் மூலம் உள்ளம் கவர்ந்த உத்தமியானாய்... ....இனி நீயே என் இல்லறக் குயில்........"

"குயில்! மயில்! ஆகா! உங்கள் வர்ணனை ஒயில்!. காப்ரேட்! இது நான் எதிர்பார்த்ததுதான். நான் விதவைதான். வேண்டாதவள். இப்பொழுது வனிதாமணி! நல்ல வேடிக்கையான உலகம்! என் கதக தப்பிலே—எனது நெருங்கிய பணிவிடையிலே—என்னமோ சுகம் கண்டிருக்கின்றீர்கள். அவ்வளவுதானே! நிமிடநேர இன்பத்தை நுகரவேண்டுமென்ற உங்கள் வெறி உணர்ச்சி இது. மனம் இளகி இருக்கிறது சூடு பட்ட வெண்ணெய் போல! இதுவே ஆண்களின் போக்கு. உங்களுக்குப் பணிபுரிந்தது 'சிஸ்டர் சிங்காரம்' என்ற முறையில்தான். காதலி என்ற கருத்தில் அல்ல, கனவிலும் அல்ல. அந்தக் கனவை நான் மறந்து......"

தியாகத்தின் உச்சி!

பெண்மையின் திண்மை சிறக்க பேசிவிட்டதல்லவா? சிங்காரம் 'சிஸ்டர் சிங்காரமாகவே' வாழவிரும்புகிருள். வாழ்கிருள். அதிலே இன்பம் காண்கிருள். திருப்தி அடைகிருள்.

"தியாகத்தின் உச்சியில் முதலில் பெண்ணைத்தான் காணமுடியும்" என்ற எமர்சனின் பொன்மொழி எவ்வளவு உண்மை என்பதற்குச் சரியான எடுத்துக்காட்டு அல்லவா சிஸ்டர் சிங்காரம்!'

டிரேட் மார்க் ரிஜிஸ்ட்ரேஷன்.

ஒருவரது டிரேட் மார்க், டிரேட் நேம், டிசைன் முதலியவைகளை பிறர் உபயோகிக்காமல் தடுக்க புதிய ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்து கொள்வது நலம்.

புகழ் பெற்ற

சேலம் மாம்பழம்

மல்கோவா, குண்டு, நடுசாலை முதலிய புகழ்பெற்ற **சேலம் மாம்பழம்** மொத்தமாகவும், சில்லரையிலும் சப்ளை செய்யப்படும்.

விவரங்களுக்கு:

எஸ். என். முனிசாமி ராஜு,

நாராயண ராஜு தெருவு, சேலம். (தென் இந்தியா)

— தமிழ்த்தென்றல்

திரை உலகு

ஜூபிடர் ராணி

விமர்சனம்

[என். ஆர்.]

கதை

காதலைச்சுற்றி பின்னப்பட்டது தான். ஆசைப்புயல்—சந்தேகச் சூறாவளி—சதிச்சுழல் இவற்றுக் கிடையே சிக்கி அவதிப்படும் இளைஞன். இவனை மீட்பதற்காக நாடோடிப்பெண்ணாக வளர்ந்தவள்—திருடி—சூதுக்காரி—தூக்கு மேடைவரை செல்லுகிறாள். இதன் அடிப்படையில் வளர்க்கப்பட்டவள் "ராணி".

முன் பகுதியில் சில—பின் பகுதியில் சில—நீங்கலாக இடைக் காட்சிகள் பல, நளினி ஜெயவந்த் "ஜாது" என்றஹிந்திப்படத்தை அப்பட்டமாக தழுவியுள்ளன. கன்னோஜிங்கின் வேலைக்காரிக்கும்—ராணிக்கும் நடைபெறும் தெருச் சண்டை—போர் வீரர்கள் ராணியை கைது செய்தல்—அவள் தப்பித்து ஓடுதல்—ராணி பழம் தின்னும்போது விஜயன் வந்து அவளை இறக்கி விடுதல் ஆகிய காட்சிகள் "ஜாது"வை முழுக்க நினைவூட்டுகின்றன.

G.P பிலிம்சாரின் 'பரணி' காதலில் 'பானுமதி'யின் சொக்குப் பார்வையின் சுந்தரம்

— தமிழ்த்தென்றல்

வசனம்

எளிய நடையில் இங்கிதம் பேசுகிறது. ராணி—விஜயன் விவாதம் புரியும் கட்டத்தில் உள்ளத்தை தொடுகிறது.

நடிப்பு

என்றவுடன் முதலிடம் ராணிக்குத்தான். பொதுவாக என்ன சிறப்பாகவே சோகக்கட்டங்கள் என்றால் "லைலா" பானுமதி வெளுத்துக் கட்டிவிடுவார். தத்ரூபம் தளிர்விடும். விஜயனிடம் மன்றாடும் இடங்களில் பானுமதியின் நடிப்பு உச்சத்தை எட்டுகிறது. "துடுக்குகாரி" யாகப் பானுவைத் தவிர வேறு எவரும் இவ்விதம் நடித்திருக்க முடியாது. விஜயனாக வரும் "பாலசுந்தர்" கச்சிதமாக நடித்துள்ளார். வில்லன் நடிப்பில் புதுமுறை தெரிகிறது. அரசனாக வருபவர் பிள்ளைப்பாசத்தின் எல்லையைத் தொட்டுக்காட்டுகிறார்.

டைரக்டர்

"பிரசாத்" உயர்தரமான டெக்னிக் முறையைக் கையாண்டிருக்கிறார். வெளிப்புறக் காட்சிகளை உகந்த இடங்களில் சேகரித்து—உட்புறக் காட்சிகளுடன் இணைத்துள்ளது சிலம் மிக்கது, திண்மை மிக்க மேற்பார்வை. திட்டமிட்டு நிதானமாகத் தயாரித்த படம்—கலை நுண்ணறிவாளர்கள் முடிவு இது.

ஜூபிடர்

படம் என்றாலே மக்கள் மன்றத்தில் ஒரு தனி மதிப்புண்டு. காரணம் கதைத்தேர்வு-வசன அமைப்பு—நாட்டின் தற்கால நிலைக்கேற்ற பாடல்கள்—தயாரிப்பில் நுட்பம்—நிர்வாகத்திறன் இவைகளே. கலைக் கண்ணோட்டத்தில் "ராணியும்" ஜூபிடரின் வெற்றி மணி மாலைக்கு மற்றுமொரு மாணிக்கமாக மருடம் பெறுகிறது. மக்களின் மனக்கவர்ச்சிக்குரிய மகத்தான தயாரிப்பு. சிறந்த பொழுதுபோக்குச் சித்திரம்.

உயர்ந்த ரகம்! குறைந்த விலை!

ராஜன் பார் சோப்

எங்களிடம் மஞ்சள், நீலம் சலவை பார் சோப்புகளும், கேக் சோப்பு தினுசுகளும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

விபரங்களுக்கு: ராஜன் சோப் ஒர்க்ஸ்,

சோப் தயாரிப்பாளர்கள், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

வளர்ந்து வரும் நாகரிக மோஸ்தர், வளப்பம் நிறை வேலைத்திறன்
நம்பிக்கை நாணயம் நிறைந்தது

மலபார் டெயிலரிங் மார்ட்

புரோப்: M. P. KARUNAKARAN, ரயில்வே பீடர் ரோடு, விருதுநகர்.

பருப்பு சல்லடை, கடலைப்பெட்டி சல்லடை, அவியல் டாங் சல்லடை
ரைஸ் அல்லர் சல்லடை முதலிய சல்லடை ரகங்களுக்கு

ஸ்ரீ ராமகிருஷ்ணா அண் கோ

தங்கிமரத் (செ. மீ. பெண் பாடசாலை) தெரு, விருதுநகர்.

பேபி காப்பி ருசிகரமானது விருதுநகர்.

காரம், மணம், ருசி தின்பண்டம் போன்ற
தேவி வாசனைப் புகையிலையைவாங்கி உபயோகியுங்கள்.
தேவி வாசனைப் புகையிலை கம்பெனி, நாயக்கமார் தெரு, விருதுநகர்.

நியூ எவரெஸ்ட் பிரியாணி ஹோட்டலுக்கு
விஜயம் செய்யுங்கள்.
Prop: K. Karuppiah Nadar. விருதுநகர்.

தீப்பெட்டிகளில் சிறந்தது
தீபலட்சுமி விலாஸ் தீப்பெட்டிகளே!
தயாரிப்பு: ஸ்ரீ தனலட்சுமி லிமிடெட், ஸ்ரீவில்லிபுத்தூர்.
ஏஜண்ட்: P. V. பெரியசாமி நாடார், பஜார், விருதுநகர்.

காளிமார்க் சோடாக்கள்

விருதுநகர்: திருநெல்வேலி: மதுரை.

(தொடர் நாவல்)

மைத்துனி

ஜீவா

சதானந்தம் பிள்ளை வீட்டுக் கூடத்தில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் காணப்பட்ட கலவரம் அவருடைய நிம்மதியற்ற நிலைமையையும், தீவிர யோசனையையும் பிரதிபலிப்பதாயிருந்தது. இடையிடையே அவருடைய கண்பார்வை கூடத்தைச் சேர்ந்தாற்போலிருந்த அறையை நோக்கலாயிற்று.

அந்த அறைக்குள் திலதவதி, கணேசன் படுத்திருந்த கட்டிலுக்குப் பக்கத்தில் சோகமே உருவாக உட்கார்ந்திருந்தாள். சோகை நோய் கொண்டவன்போல் உடம்பெல்லாம் ஊதி முகம்புடைத்து வெளுத்திருக்கும் மகனையே கவலையோடு கவனித்துக்கொண்டிருந்த அவள் அடிக்கடி கணவனையும் கடைக்கணிக்கலானாள். மூச்சுப்பேச்சில்லாமல் வெகு நேரம் அசைவற்றிருப்பதும், திடீர் திடீரெனக் கண்விழித்து ஏதேதோ அரற்றுவதுமாயிருக்கும் தம்பியைப்பார்த்து, என்னவோ ஏதோ என்று அச்சங்கொண்டு, கோகிலா ஒரு பக்கத்திலிருந்து குமுறிக் குமுறிக்கொண்டிருந்தாள். விசுவநாதன் தன் அறையிலிருந்து ஏதோ காரியமாய் வருவதுபோல, அடிக்கடி அப்பக்கம் வந்து நிலைமையைக் கவனித்துப்போய்க் கொண்டிருந்தான்.

டாக்டர் சிறிது நேரத்துக்கு முன்தான் வந்துபோனார். அவர் கணேசனைக்குறித்துக் கவலைகொள்வதற்கு ஒன்றுமில்லையென்றும், கூடிய சீக்கிரம் குணமாய் விடுமென்றும் தைரியம் சொல்லிவிட்டுப் போயும் திலதவதியும் மனதிடம் கொள்ளவில்லை. சதானந்தம் பிள்ளையும் சாந்தியடையவில்லை.

"ஏன், திலகம்? மங்கை வருவாளா?......" என்று இருந்தாற்போலிருந்து பிள்ளையவர்கள் மனைவியை நோக்கிக்கேட்டார்.

இக்கேள்வி திலதவதியை ஈட்டிகொண்டு குத்துவதுபோல் இருந்தது. தான் சண்டைபோட்டு அவளை அனுப்பிவிட்டதாகவே, கணவனிலிருந்து பிள்ளைகள் வரை அனைவரும் எண்ணியிருப்பதை அவர்களுடைய ஒவ்வொரு பேச்சிலிருந்தும் அவள் உணரலானாள். 'அவர்கள் எண்ணுவதென்ன? உண்மையும்

அது தானே? தான் மங்கையைப்பற்றித் தவறான எண்ணங்கொண்டு எடுத்ததற்கெல்லாம் அவள் மீது சிடுசிடுவென எரிந்து விழுந்தும் வாயில் வந்தவாறு பேசியும் தொந்திரவு கொடுத்து வந்ததால்தான், இந்த ஒருவினை தாங்காமல் அவள் போய்விட்டாள்' என்று திலதவதியின் மனம் ஒப்புக்கொள்ளத்தான் செய்தது. இந்நிலையில், மங்கை இங்கு மீண்டும் திரும்பி வருவாளா என்பது இவளுக்கும் சந்தேகமாய்த்தானிருந்தது. ஆனாலும், இவள் ஐயப்பட்டதையே கணவன் கேட்டபோது இவளுக்குக் குற்றமாகப்பட்டது. தான் மங்கை விஷயத்தில் அநியாயமாக நடந்துகொண்டதாகச் சுட்டிக்காட்டவே இவ்விதம் கேட்பதாக எண்ணி மனம் வருந்தினாள்.

கணேசன் நிமிஷத்துக்கொருதரம், 'சித்தி, சித்தி' என்று அரற்றுவதைக் கேட்டுவிட்டு, பக்கத்து வீட்டுப்பெரியம்மா, 'இவனுக்கு உடம்பாலுற்ற நோய் ஒன்றுமில்லை, திலகம்! மங்கை கவனமாய் இருக்கிறான் இவன். அவள் வரட்டும், பார். இவன் உடனே எழுந்து விளையாடுகிறானா இல்லையா என்று?' என்றுகூறி, 'மங்கையை உடனே வரச்சொல்லி எழுது; இல்லாவிட்டால் ஆளையனுப்பிக் கூட்டி வரச்சொல். நான் சொன்னது சரியா இல்லையா என அப்புறம் சொல்லேன்'. என்று சொல்லிய யோசனை மீதுதான் அவள் கணவனிடம் கூறி மூத்தமகனை அனுப்பி வைத்தாள். 'பிள்ளைக்கு இப்படியிருக்கிறதே' என்ற தாபத்தில், அவள் அப்படி மங்கையை அழைத்துவர சிவகுமாரனை அனுப்பினாலேயொழிய, அந்தக் கணத்திலேயே அவள், 'நாம் அனுப்பினோம்? கூப்பிட்டதற்கு மதிப்புக்கொடுத்து வராமல் போய்விட்டால், முகத்தில் கரியைப் பூசிக்கொண்டது போலத்தானே ஆகும்?' என்று பலவிதமாக எண்ணி நெஞ்சம் நைந்தாள். தன்மன நிலையை அவள் வெளிக்குக் காட்டவில்லையே தவிர, உள்ளுக்குள் மட்டும் 'மங்கை வருவதென்பது சந்தேகம் தான், வந்த பிறகே நிச்சயம்' என்று எண்ணிக்கொண்டிருந்தாள். இந்நிலையில் கணவன் கேட்ட கேள்வி அவள் மனதை வாள் கொண்டு அறுத்தது.

"என்ன அப்பா, அப்படிக் கேட்கிறீர்கள்?" என்று இடைமறித்தாள் கோகிலா.

பிள்ளையவர்கள் மகளை நோக்கி, "இல்லையம்மா, சித்தி திரும்பி வருவாள் என்று எனக்கென்னவோ நிச்சயமில்லை" என்றார்.

கோகிலா, "அப்படி நினைக்காதீங்க, அப்பா! தம்பிக்கு அசௌக்கியம் என்றதும், சித்தி அலறியடித்துக்கொண்டு வரப்போறாங்க, பாருங்களேன்!......"

"உம். பார்க்கலாம்" என்று பெருமூச்சு விட்டவாறே சொன்ன பிள்ளையவர்கள் "மங்கைக்குக் கணேசன் மீது உசிர்தான். ஆனாலும்......" என்று இழுத்தார்.

— தமிழ்த்தென்றல்

திலதவதி திடீரென எழுந்து பின் பக்கம் போகலானாள். தந்தையும் மகளும் பேசும் பேச்சைக் கேட்க அவளுக்குப் பிடிக்கவில்லை. இக்குறிப்பை ஒரு நொடியில் உணர்ந்துகொண்ட பிள்ளையவர்கள் தாம் பேசவந்த பேச்சை அத்துடன் நிறுத்தலானார். மேலும் தாம் அங்கிருந்தால் மகள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்று கருதி அவர் மெள்ளத் தம் இருப்பிடத்துக்குப் போனார்.

இச்சமயம் விசுவநாதன் தன் அறையிலிருந்து பரபரப்பாக வெளியே வந்தான்.

இது கண்டு "என்ன!" என்று வினவிய பிள்ளையவர்கள் நின்று எதையோ உற்றுக்கவனிக்கலானார். "ஏதோ வண்டி வந்து நிற்கிறாப்போலிருக்கே! யார் வருகிறது பார், விசுவம்!" என்று கூறினார்.

"இதோ போகிறேன், அப்பா! ......நம்ம வீட்டுக்கா? வண்டி வருகிறதைப்பார்த்து விட்டுத்தான் வந்தேன். ஒரு வேளை...சித்திதான்..."

விசுவநாதன் பேசி முடிப்பதற்கு முன் கோகிலா மேல் மூச்சு வாங்க ஓடோடியும் அங்கு வந்து, "அப்பா! அப்பா! சித்தி வந்துட்டாங்க, அப்பா!" என்று கூறிக் குதிக்கலானாள்.

"என்ன!......" என்று வியப்போடு கேட்டவாறே வெளிப்பக்கம் நோக்கினார்.

— தமிழ்த்தென்றல்

"ஆமாம்; அப்பா! சித்திதான் வருகிறார்கள், அண்ணனுடன்."

விசுவநாதனும் கோகிலாவும் கூறியபடி, சிவகுமாரன் பின்னே வர, மங்கையர்க்கரசி முன்னே விரைந்து வந்து கொண்டிருந்தாள்.

எதிர்பாராதபடி ஏற்பட்ட சந்தடி கேட்டு, திலதவதி பின்புறமிருந்து வந்தாள்.

சதானந்தம் பிள்ளை, "வா, அம்மா, மங்கை!" என்று மங்கையை வரவேற்றார்.

அத்தானைக் கண்டதும் மங்கை நாணத்தால் ஒருகணம் தலைகுனிந்தவாறு தயங்கி நின்றாள். ஆயினும், கணேசன் மீதுள்ள பரிவுணர்ச்சி அவளை உந்தித் தள்ளியது. ஆகவே அவள், "குழந்தைக்கு என்ன உடம்பு, அத்தான்?" என்று துயரக் குரலில் கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

அவளுடைய தாய்மையுணர்ச்சியைக் கண்டு சதானந்தம் பிள்ளை திகைத்து நின்றார்.

"வாங்க, சித்தி!........எங்கே வராமே போய்விடுவீங்களோன்னு...........," என்று கூறிக்கொண்டே அவளை எதிர்கொண்டு அழைத்த கோகிலாவுக்கு வாய்மீது விரலை வைத்துப் பேசாமலிருக்குமாறு விசுவநாதன் குறிப்புக் காட்டினான். ஆதலால், அவள் அத்துடன் பேச்சை நிறுத்தி, மங்கையைச் சேர்த்து அணைத்தவாறு அழைத்துப் போகலானாள்.

"குழந்தை எங்கேஇருக்கிறான், கோகிலா!........" என்று கேட்டுக் கொண்டே போன மங்கை வழியில் திலதவதி நின்றிருப்பதைக் கண்டு "அக்கா, கணேசனுக்கு உடம்புக்கு என்ன? எனக்கு முன்னமே சொல்லியனுப்பக்கூடாதா?......" என்று துக்கந் தொண்டையை அடைக்கக் கேட்கலானாள்.

மங்கையைக் கண்டதுமே அவள் முகத்தில் எப்படி விழிப்பது என்று வெட்கத்தால் உடல் குன்றி நின்றிருந்த திலதவதி இவளுடைய கேள்விக்கு உடனே பதில் சொல்ல முடியாமல் தத்தளித்தாள். வாயெழாமல்போகவே, அவள் கைகளால் கணேசன் படுத்திருக்கும் இடத்தைக் காட்டினாள்.

உடனே மங்கை ஒரே பாய்ச்சலாக, கணேசன் இருக்குமிடத்தை அடைந்தாள். கோகிலா பின்னோடேயே சென்றாள்.

ஒரே தாவாகத் தாவிய மங்கை கணேசனை அப்படியே எடுத்துத் தழுவிக்கொண்டு, "கண்ணூ, ஒரு வாரத்திலே இப்படி உருக்குலைந்து விட்டாயே!" என்று கூறிப் பொருமினாள்.

மருந்து மயக்கத்தில் மெய் மறந்து படுத்திருந்த கணேசன், மங்கையின் ஸ்பரிசம் பட்ட மாத்திரத்தில் உணர்வு கொண்டு விழித்து எழுந்தான். மெள்ளமெள்ளத் திறந்த அவன் கண்கள் மங்கையைக் கண்டதும் அகல விரிந்தன. "ஆ! சித்தி!" என்று அலறியவாறே அவன் மங்கையை இறுகச் சேர்த்துக் கட்டிக்கொள்ளலானான்.

"சித்தி! எங்கே போனே? சித்தி!.......... என்னை விட்டுட்டு எங்கே போனே? சித்தி!........... என்னாண்டை சொல்லாமெகொள்ளாமெகூட எங்கேயோ போயிட்டியே, சித்தி!........"

குழந்தையின் பிரலாபம் மங்கையை மேலும் உருக்கிவிட்டது.

"நான் எங்கேயும் போகவில்லையடா, ராஜா! உன்னை விட்டுவிட்டு இனி எங்கேயும்போகமாட்டேன்டா கண்ணூ!........நீ நல்லபடி ஆய்விட்டால் போதும்" என்று சொல்லியவாறே அவனை உச்சிமோந்து முத்தமிட்டாள். அவளுடைய மென் கரங்கள் கணேசனுடைய உடம்பைப் பரிவோடு வருடலாயின.

"என்னை விட்டுட்டு மறுபடியும் போயிடமாட்டியே? சித்தி!........"

மீண்டும் கணேசனின் பிஞ்சு உள்ளம் பேசியது.

"ஊஹூம். போகவேமாட்டேன். உன்னை விட்டுவிட்டு ஒரு இடத்துக்கும் போகமாட்டேன். ஒருகணமும் பிரியமாட்டேன், கண்ணூ!" என்று கன்னத்தைக் கிள்ளியவாறு கொஞ்சலாகச் சொன்னாள்.

கணேசன் மங்கையை இன்னும் இறுக்கமாக அணைத்துக் கொண்டு, "சித்தி! நீ இல்லாதே போகவே எனக்கு என்னவோ போலிருந்தது சித்தி! ஒரு இராத்திரி பூதம் போல ஒன்று வந்து என்னை மருட்டிச்சி சித்தி! நீ இருந்தா அதை அடிச்சித் துரத்திருக்கமாட்டே!..... அம்மாவைக் கூப்பிட்டா வரவே இல்லை, சித்தி!" என்று மழலை ததும்ப மொழிந்தான்.

"அப்படியா! இனிமேல் நீ எதற்கும் பயப்படாதே! நான் இருக்கிறப்போ, இனி எதுவும் உன்னண்டை வராது" என்று மங்கை குழந்தைக்குத் தைரியம் சொன்னாள்.

இச்சோகக்காட்சியை எல்லோரும் தூர இருந்து பார்த்துக்கொண்டிருந்தனர். கோகிலா மட்டும்தான் மங்கையின் பக்கத்தில் இருந்தாள்.

பிள்ளையவர்கள் தம் மனைவியைக் குறிப்போடு பார்த்தார். மழைத்துளி போல கண்ணீரைச் சோரவிட்டுக்கொண்டிருந்த திலதவதி கணவன் பார்வையை எதிரிட மாட்டாது, தலைகுனிந்து கொண்டாள். அவள் முகத்தில் வெட்கம் வழிந்தது.

சிவகுமாரன் பிரயாணப்பையுடன் உள்ளே போகலானான். விசுவநாதனும் மனஆறுதலுடன் போனான்.

(தொடரும்)

காலத்தின் கோலம்

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

அதற்குப்பின் நேருவோ "அரசியலில் மாறுபட்டுள்ள கருத்துடையவர்களை எதிரிகளாகப் பாவிக்கக் கூடாது. அவர்களை தம் கருத்துக்கு மாற்ற முயற்சிப்பதுதான் சிறந்த பண்பு" என்று ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

ஆனால் அதற்கு மறுநாள் மேல் சபையில் சி. ஆர். பேசும்போது 'இந்த எதிரி' பேச்சைத்தான் வலியுறுத்தி பேசியிருக்கிறார்.

அதே தேதியில் நமது குடியரசின் தலைமைப்பீடத்தில் அமர்ந்த மக்களாதிபன் இராஜேந்திர பிரசாத் நாட்டில் உள்ள எல்லா மக்களையும், இனம், மதம், கொள்கை, கருத்து, சாதிபேதமின்றி ஒன்றாக பாவிக்க வேண்டுமென்றும் ஏனைய நாடுகளுடன் நட்புரிமை பெறுவதற்கு பாடுபடுவதாகவும் கனிவுடன் பேசியிருக்கிறார்.

மறுநாள் பேசிய சி. ஆர். கம்யூனிச எதிரியாகவே காட்சியளித்திருக்கிறார். ராஜாஜியின் பேச்சுக்கள் மேல் நாடுகளுக்கு குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து ஆட்சியாளருக்குக்கவர்ச்சிகரமாகஇருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால் ரஷியாவும் 'செஞ்சீனா'வும் சி. ஆரின் கோலத்தை எப்படிப்பார்க்கிறார்களோ தெரியவில்லை.

எது எப்படியிருந்தாலும் சரி, இந்தியப்பேரவை முதலமைச்சர் நேருவின் மனம் புண்பட்டிருக்கும் என்று அஞ்சுகிறோம்.



V. V. RAMASWAMY,

DEALER

CALTEX (India) LTD,

VIRUDHUNAGAR & ARUPPUKOTTAI.



செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு

திடகாத்திரமளிக்கும்

சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926.

தென்குமரி எல்லைமுதல் திருவேங்கடப் பதியதாம்
செந்தமிழ் நாடெங்கினுமே சிறுவர் முதல் முதியோர் வரை
தேன் உணவு நம் ராஜா பார்லியோடு பிஸ்கட் கேக்கும்
தேவா அமுதமென உட்கொண்டு மகிழுகிறார்.

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

கிளை:-2, காலேஜ் ஹவுஸ், டவுன் ஹால் ரோடு

திரு. L. V. ஷண்முகம் பிள்ளை

ஆசிரியரும், வெளியிடுவோரும்: V. V. இராமசாமி M. L. A., விருதுநகர்.
...வார்: P. SV. P. ஜெகநாதன், தமிழ்த்தென்றல் அச்சகம், விருதுநகர்.

வெகு விரைவிலில் வெளிவருகிறது!

2c

உங்கள் அபிமான நடிக நட்சத்திரங்கள்:

பானுமதி, நாகேஸ்வரராவ்

மு...ர்மலா, ஸ்ரீ ரஞ்சனி, சிவராவ், ரேலங்கி, அங்கமுத்து
ஆகியோர் திறம்பட நடிக்கும்

பரணியின்

காதல்

(தமிழ்)

மறக்க முடியாத மனோகர காதல் சித்திரம்.

பூரண உரிமையாளர்கள்: G. P. பிலிம்ஸ், H. O: பொறையார்.
விபரங்களுக்கு: 'நாடார்ஸ் கார்டன்'
9, டாக்டர் அழகப்ப செட்டியார் ரோடு, வாடர்ஸ்கேட், மதராஸ்-7.
பிராஞ்ச்: 301, மேலமாசி வீதி, P. B. 46, மதுரை.
Tel: 'ESTATE'
(Rajan Publicity, Madurai.)

தமிழ்த்தென்றல்

ஆசிரியர் V.V. இராம...

133
3/52

ஆனி இதழ் 4 அணா

ஜூலை 14ம் முதல்

மதுரை, ஸ்ரீ மீனாட்சி டாக்கீஸிலும்

மற்றும் தமிழ்நாட்டின் பல முக்கிய நகரங்களிலும்

வெற்றிகரமாக நடைபெறுகிறது!



பானுமதி, நாகேஸ்வர ராவ் நடிக்கும்

பரணியின்

காதல்

(தமிழ்)

[illegible]:

G. P. [illegible].

[illegible]

9, டாக்டர் அழகப்ப செட்டியார் ரோடு, வேப்பேரி, சென்னை 7.

கிளை:- 301, மேலமாசி வீதி, மதுரை.

விளம்பர மன்றம்:

PERFUME PARADISE

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் & பிரதர்ஸ்,

மதுரை, பெங்களூர் சிடி & சென்னை.

ரிஜிஸ்டர் No 3010.

மந்தக்கோய்புமணிகட்டிச்சுவாமிகள்



கைமுறை அனுபோக

சர்வரோக சஞ்சீவித்தைலம்

ஸ்நானம் செய்து சுகமடையுங்கள்

தயாரிப்பவர்கள். எல்லா ஊர்களிலும் எமது ஏஜண்டுகளை தெரிந்து வாங்குங்கள்.

S.P. வடிவேல் நாடார் அன் ஸன்ஸ்,

மத்திய காரியாலயம்:- 25. சம்பந்தமூர்த்தி தெரு, மேலமாசி வீதி, மதுரை.

இந்திய நாட்டு இளைஞர் முதல் எல்லோருக்கும் திடகாத்திரம்
அளிக்கவல்ல எமது

ஆர்.எம்.கே. பாலி

உபயோகியுங்கள்

ஆர்.எம்.கே. அன் சன்ஸ் பேக்கர்.
59. டவுன் ஹால் ரோடு, மதுரை.

புரோப்

எமது கிளை: 13, 14, திண்டுக்கல் ரோடு, (பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
மதுரை.

மதுரையிலே மக்களின் நன்மதிப்புக்கும் பாத்திரமாகி
அனுதினமும் அமோக ஆதரவு பெற்று வருகிறது

சிட்டி ஆக்ஷன் ஹால்

18, மேலாவணி மூல வீதி, மதுரை.

உறுதியான இரும்புப் பெட்டிகள், விதவிதமான தேக்கு, நோதகத்தி, கண்ணாடி, சாதா பீரோக்கள், இன்னும் இதர பான்ஸி சாமான்கள் சரசமான விலையில் வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான இடம்.

உரிமையாளர்: **எம். எஸ். வீரப்ப பிள்ளை**
"ராஜன்"

பாலசுப்ரமணியர் மார்க்கு நயம் சூடன்

தயாரிப்பவர்:

அ. செ. பு. வன்னிய நாடார்,
14, வெங்கலக் கடைத் தெரு,
மதுரை.

எங்களிடம், 1, 2, 3 தோலா சூடன் டின் & அட்டைப் பெட்டிகளும் ½ ராத்தல் & கிரோஸ் சூடன்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும். எப்பொழுதும் எங்கள் ரிஜிஸ்டர் டிரேட் மார்க்கைக் கவனித்துப் பார்த்து வாங்கி உபயோகியுங்கள்.

இன்றைய நாட்டின் உடனடித் தேவை

உணவு, உடை முதலிய சகல சாமான்களையும் குறித்த நேரத்தில் பொறுப்புடன் பல ஊர்களுக்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான்.

அதனையே மக்கள் சேவையாகக் கொண்டுள்ள ஸ்தாபனம்

S. பாலு லாரி சர்வீஸ்

3, நாணப்ப முதலி தெரு, மதுரை.

தினசரி மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், சேத்தூர் வரை லாரி சர்வீஸ் ஓடிக்கொண்டிருக்கிறது.

ராஜன்"



தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: V. V. இராமசாமி M. L. A.

"பெரும் பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டில் ஆற்ற விளைவது நாடு."

கொடி 6	திருவள்ளுவராண்டு—1982 ஆனித் திங்கள் 1உ (14—6—'52)	பூ 9

உள்ளுறை.



நாம் சொன்னதும் அவர்கள் செய்ததும் .... நகைப்பங்கம் 7
நகரங்களில் பங்கீடு ரத்து உண்டா? 13
காலம் வேண்டுவதென்ன? 14
கல்லும் பேசுகிறது .... கோவை[illegible] 17
சிந்தனைச் சிறகினிலே .... T. N. கிரு[illegible] பி. எஸ்ஸி. (ஆனர்ஸ்) 25
மருத்துவ மண்டலம் .... டாக்டர் [illegible] I.M.P. 27
மூன்று கல்லறைகள் (அட்டைப்படக்கதை) .... மணி[illegible] 29
பாரஸ்ட் ரேஞ்சர் .... [illegible] இராமசாமி 35
டாக்டரின் காதல் .... [illegible] 47
உதிர்ந்த ரோஜா .... [illegible] 54
போனபின்னே திரும்பிவராதே .... [illegible] வணங்காமுடி 57
திரை உலகு .... மதுரை, இ. எஸ். தியாகராஜன் 63
காலத்தின் கோலம் 74

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே! கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த்தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத் திரும்பவெளியிடும் உரிமையுடையவராகார். [illegible]

மக்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதே
எங்கள் நோக்கம்.

தரத்தில் முதன்மை! காட்சியில் பெருமை!

தமிழகத்தின் தலைசிறந்த தொழிற் நிலையம்

"ஸ்டாண்டர்டு"

பட்டாசு வகைகளில் பலவிதம்
மத்தாப்பு ரகங்கள் அநேகம்
கம்பி மத்தாப்பு.......கதிர் மத்தாப்பு இப்படி.
எத்தனை எத்தனையோ அழகு உதிர்க்கும் அம்சங்கள்.
எல்லாம் கண் கவர் காட்சி!
மனதிற்கு மகிழ்ச்சி!

STANDARD FIRE WORKS
SIVAKASI.

209354

— தமிழ்த்தென்றல்

நாம் சொன்னதும் அவர்கள் செய்ததும்

கடந்த இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்த காரணத்தால் ஏற்பட்ட சில தட்டுப்பாடுகளைச் சமாளிக்க அநேக கட்டுப்பாடுகள் உண்டாக்கப்பட்டன.

வியாபாரத் துறையில், ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு விதிகள்; உள் நாட்டில் போக்குவரத்து சாதனக் குறைவுகள், தேவையான பண்டங்களுக்குத் தட்டுப்பாடு போன்ற தொல்லைகள் அனந்தம் நாள்தோறும் வளர்ந்தன.

இவைகளில் முக்கியமானவை உணவுப் பஞ்சமும் நூல் பஞ்சமும். உணவும் நூலும் தட்டுப்பாடாக இருந்ததால், கிடைப்பதை எல்லோரும் சமமாக அனுபவிக்க வேண்டுமென்பதற்காக கொள்முதலும் பங்கீடு முறைகளும், கட்டுப்பாடுகளும் வகுக்கப்பட்டன.

இவைகளால் ஏற்பட்ட பயன் என்ன? நம் மாநிலத்தில் கொள்முதல் விகிதம் பிற மாகாணங்களைக் காட்டிலும் அதிகம் என்று டில்லி அமைச்சர்களே கூறினர். ஆயினும் வடநாட்டார் குறிப்பாக உபரியாக உள்ளவர்கள் ஒழுங்காகவும் அறத்துக்குப் பயந்தும் நடக்காமலிருந்தபடியால், நாம்தான் உணவுக்காகக் கணக்கு வழக்கில்லாமல் தெண்டமிட்டதோடு கேவல நிலையும் அடைந்தோம். டில்லி அரசாங்கத்தார் நம்மை அலட்சியப்படுத்தியே வந்தனர். உணவுப்பொருள் நம் பகுதியில் பற்றாக்குறை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவு.

— தமிழ்த்தென்றல்

ஆனால் நூல் பஞ்சம் ஏற்பட்டதுதான் தில்லி அரசாங்கத்தாரின் கொடுங் கோன்மையின் விளைவு! இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் நூலில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் நம் மாகாணத்தில் நிறுவப்பட்டிருக்கும் ஆலைகளாலே நூற்கப் பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் நம் கைத்தறிகளுக்கு நூல் கிடையாமல் நெசவாளர்கள் பட்டினியால் வாடி வதைந்தார்கள். காரணம்? ஓர வஞ்ச நெஞ்சினராகிய தில்லி அரசாங்கம் இங்கு உற்பத்தியாகும் நூலில் நமக்கு வேண்டிய பங்கை ஒதுக்கிக் கொடுத்து விடாமல், முழு உற்பத்தியையும் எடுத்துக் கொண்டு நம்மை வாட விட்டு விட்டார்கள்.

கட்டுப்பாட்டில் நேர்மையுமில்லை. நாணயமுமில்லை. பங்கீட்டு விதிகளை அமல் நடத்த ஏற்பட்ட இலாக்காவோ திங்கள் தோறும் பெருகத் தான் கண்டோம். வரையறுக்கப்பட்ட அளவு மட்டும் அரிசி வாங்கிச் சாப்பிட்டவர்கள் யார்? கொடுக்கப்பட்ட அளவு மட்டும் துணிமணிகள் வாங்கியது யார்? கையில் காசில்லாதவர்கள் தான்! ஏனையோர் அவரவர் வசதிக்குத் தகுந்தபடி அதிகமாக வாங்கி வாழ்க்கையை நடத்தியிருக்கிறார்கள். இதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே பணம் இல்லாதவர்கள் தான் உண்டியையும் செலவினத்தையும் சுருக்கினார்கள். மற்றப்படி நாடு கண்டதென்ன?

அமல் நடத்திய ஆட்சியாளர்களுடைய நாணயமும், ஆளப்பட்டவர்களின் ஒழுக்கமும் குறைந்ததைத் தான் கண்டோம்!

ஒழுக்கம் குன்றினால் மக்களின் வாழ்க்கையே கெட்டு விடுமல்லவா? மேலும் உணவு தானியங்களின் பங்கீடு விதிகளாலும் கொள்முதல் முறையாலும் பொது மக்களின் குறிப்பாக விவசாயிகளின் உற்சாகமும், ஊக்கமும், உழைப்பும் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது.

— தமிழ்த்தென்றல்

ஆகவே உணவுக் கட்டுப்பாடுகளை அறவே அகற்றி விட வேண்டும் என்று நாம் திரும்பத் திரும்ப எழுதி வந்ததும், பேசியதும் தென்றல் அன்பர்களின் நினைவில் இருக்குமென்று நம்புகிறோம்.

1950-ம் ஆண்டில் நாசிக் நகரத்தில் நடந்த காங்கிரசு மாநாட்டில் "கட்டுப்பாடுகளை நீக்கக் கூடாது" என்று ஒரு தீர்மானம் நிறைவேறியது. அதைக் குறித்து 17—10—1950ல் பிறந்த "தென்றல்" இதழில் நாம் எழுதியிருந்ததை நினைவூட்ட விரும்புகிறோம்.

கட்டுப் பாடுகளை நீக்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டபடியால் ஆதிக்கத்திலிருக்கும் மத்திய அரசாங்கத்தார் உணவுப் பொருள் மீதுள்ள கட்டுப்பாடுகளை நீக்கப் போவதில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். எனவே அவர்களை நோக்கி நிற்கும் சென்னை மாகாணத் தவரும் கட்டுப் பாடுகளை விலக்க மாட்டார்கள் என்று தான் கொள்ளல் வேண்டும். ஆயினும் நம் அமைச்சர்களுக்கு ஊக்கம் பிறக்கும் வண்ணம் பொது மக்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்று கூறுகிறோம். எல்லாக் கட்டுப் பாடுகளை நீக்கு முன் நகரங்களில் மாத்திரம் கட்டாய உணவு பங்கீட்டை வைத்துக் கொண்டு, கிராமங்களில் உள்ள பங்கீட்டு முறையை அறவே நீக்கி விடலாம். அங்கு கொள்முதலும் வேண்டாம். பங்கீடும் வேண்டாம். உபரியாகவுள்ள ஜில்லாக்களிலிருந்து கிடைக்கும் நெல், அரிசி தானியங்களை நகரங்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து விடலாம். அதோடு வெளி நாட்டிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களை சேமிப்புக் கிட்டங்கிகளில் தேக்கி வைத்துக் கொண்டால், பின் எங்காவது பற்றுக் குறை ஏற்பட்டால் அங்கு உதவவும், எதாவது ஓரிடத்தில் விலைவாசிகள் உயர்ந்தால் உடனடியாக அங்குக் கொண்டு போய் விலையைத் தணிக்கவும் பயன் படும். கிராமங்களில் கொள்முதலும் பங்கீடும் இல்லை என்று சொல்லி விட்டால், அங்குள்ள விவசாயிகள் எப்பாடு பட்டாயினும் தங்களுக்கு வேண்டிய அளவு உணவை உற்பத்தி செய்து கொள்வதற்கும், பாட்டுக்கு ஏற்ற நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையின் பேரிலும் உணவல்லாத பிற விளை பொருளின் மீது நாட்டஞ் செலுத்தாமல்

— தமிழ்த்தென்றல்

அதிகமாக உணவுப்பொருளை விளைவிப்பதற்கும் முன்வருவார்கள் என்பது உறுதி. தங்களுக்கு வேண்டிய உணவைத் தாங்களே பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற பொறுப்பை மக்கள் மீது சுமத்த வேண்டுமென்று காந்தியடிகள் கூறிய உட்கருத்தும் நிறைவேறும். ஆகையால் உணவுக் கட்டுப் பாட்டு முறையை இவ்வழியில் அடுத்த அறுவடை காலத்திற்குள் திருத்தி அமைக்க வேண்டுமென்று பொது மக்கள் கிளர்ச்சி செய்தால் நமது அமைச்சர்கள் செவி சாய்ப்பார்கள் என்று நம்புகிறோம்" என்று எழுதியிருந்தோம்.

மறுபடியும் உணவு நெருக்கடியைப் பற்றி 16-12-50-ல் வெளியேறிய "தென்றல்" இதழில் வற்புறுத்தியிருந்ததைக் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம்.

நகரங்களில் மட்டும் பங்கீட்டை வைத்துக் கொண்டு மற்ற இடங்களில் நீக்கி விட வேண்டுமென்ற கருத்தைத் தப்பாகப் பொருள் கொண்டு அதனைச் செய்யக் கூடாது என்று கூறிப் பெரிதும் சிக்கலிலேயே போய் விழுகின்றார்கள். கிராமப் பங்கீட்டை எடுத்து விட வேண்டுமென்று எதற்காகச் சொல்லுகிறோம்? உணவுப் பொருள்கள் விளைவது நகரங்களிலல்ல. கிராமங்களில் தான். அங்கு அரும்பாடு பட்டு உழைத்து உற்பத்தி செய்யும் உணவை அதனை ஆக்கியோனுக்கு அரை வயிற்றுக்குக் கூடக் காணாத அளவுக்குக் கொடுத்து விட்டு, மற்ற இடங்களுக்குக் கொள்ளை கொண்டு போனால் யாரால் தான் பொறுக்க முடியும் இந்தக் கொடுஞ் செயலை? நீக்குவதென்றால் கிராம மக்களின் தேவையைப் பற்றிக் கவலைப் படாமல் விட்டு விடுவதல்ல. அவர்கள் நன்றாக உழைத்துத் தேவையான அளவு வயிறார உண்டு எஞ்சியதை நல்ல விலைக்கு விற்று அதன் விளைவால் தனக்கு ஏற்படும் ஆக்கத்தை நினைத்து, மென் மேலும் உணவு உற்பத்தியைப் பெருக்கச் செய்யும் ஆர்வத்தை உண்டாக்குவது தான் கிராமப் பங்கீட்டை எடுத்து விட வேண்டுமென்பதன் அடிப்படை நோக்கம். மேலும் கிராமங்களில் எங்காவது ஓரிடத்தில் திடீரென்று விலை உயர்ந்து விட்டாலோ, அல்லது இருப்புக் குறைவு ஏற்பட்டாலோ அந்நிலையை ஈடு செய்யத் தேக்க இருப்பும் ஆங்காங்கு வைக்க வேண்டுமென்றும் கூறுகிறோம். இந்தத் தேக்க இருப்புக்கும் நகரங்களுக்கும் உபரியாகவுள்ள மாவட்டங்களிலிருந்

து வெளியிடங்களிலிருந்தும் கிடைக்கக் கூடிய உணவுப்பொருள்களை ஒதுக்கி வைத்துக் கொள்ளலாம். இந்த முறையைக் கையாளுவதற்கு எதிரியாக நிற்பவர் யார்? பங்கீட்டு முறை எடுபட்டால் அதன் விளைவாக வேலையை இழக்க வேண்டியவர்களும், பங்கீட்டு முறையால் பல வகையிற் பயன் பெறும் ஆதிக்கத்திற் செல்வாக்குப் பெற்ற புதிய அன்பர்களும் தில்லி நடு இடத்திற்குப் பயப்படும் தலைவர்களுமே யாவர் என்று கூறலாம்.........

விளைச்சலைப் பெருக்குவதற்குத் தூண்டு கோலாக இருப்பதற்காகத் தான் இந்தக் கிராமப் பங்கீட்டை எடுத்து விட வேண்டுமென்று சொல்லுகிறோமே யொழிய, வாய் வீச்சுச் செல்வாக்குள்ள மக்கள் வாழும் நகரத்தாரை மட்டும் நிறைவு செய்து கொண்டு, வாயில்லாப் பூச்சிகளாக விளங்கும் கிராமத்தாரைத் தெருவில் விடுவதாக எண்ணமில்லை என்பதை உணர வேண்டும். ஆகையால் திடமாக ஒரு முடிவுக்கு வந்து கிராமப் பங்கீட்டை எடுத்து விட முடிவு செய்ய வேண்டும்."

மேலே கூறப்பட்டவற்றை எழுதிய பின் ஒரு திங்களுக்குள் சென்னை அரசாங்கம் கிராமப் பங்கீட்டு முறையை விலக்கி விட்டனர். "ஒழிந்தது கிராமக் கொள் முதல்" என்ற தலைப்பில் 14—1—51-ம் தேதித் 'தென்றலில்' அதை வரவேற்று எழுதியிருக்கிறோம்.

"சென்னை அரசாங்கம் கிராமப் பங்கீட்டுமுறையையும் தானியக் கொள் முதல் முறையையும் பற்றாக் குறை மாவட்டங்களில் நீக்கி விட்டது. இந்த முடிவுக்கு வர வேண்டுமென்று தான் நாம் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கின்றோம். எனவே இந்தத் துணிகரமான முடிவை நாம் வரவேற்பதுடன் முழுமனத்துடன் ஆதரிக்கின்றோம். இக்காரியத்தில் வெற்றி பெற அரசியலாருடன் ஒத்துழைக்க ஆயத்தமாக இருக்கின்றோமென்று உறுதி கூறுகின்றோம்"

என்று தெரிவித்திருக்கிறோம்.

இப்பொழுது ஓராண்டுக்குப் பின்னர் உணவுப் பொருளின் மீது உள்ள எல்லாக் கட்டுப் பாடுகளையும் இன்றைய சென்னை அரசாங்கம் அறவே நீக்கிவிட்டது. முதலமைச்சர்

சி. ஆர். அவர்களின் துணிகரமான முடிவையும் உறுதியையும் பாராட்டுகின்றோம். அவரை வாழ்த்துகின்றோம்.

கிராமப் பங்கீட்டை ஒழித்தமைக்காக 14—1—51-ல் எழுதிய அதே கட்டுரையில்,

"பெரிய நிலக்கிழார்களும், வணிகப் பெருமக்களும் நாட்டின் நன்மையை முதன்மையாகக் கொண்டு உணவுப் பொருள்களைப் பெருக்குவதிலும், அவைகளை எல்லா மக்களுக்கும் ஏற்ற விலையில் போதிய அளவு கிடைக்கும் வண்ணம் செயல் புரிய முன் வர வேண்டும். உணவுக்காக வெளி நாட்டை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் இழி நிலையை மாற்றக் கூடிய வசதியும், வாய்ப்பும் இப்பொழுது கிடைத்திருக்கிறது நமது உழவர் பெருமக்களுக்கு. தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைத் தாராளமாக உற்பத்தி செய்வதோடு பிறமக்களின் தேவையை நிரப்புவதற்குத் தன்னாற் கூடிய மட்டிலும் அதிக அளவு உற்பத்தி செய்வதன் மூலம் நல்ல ஊதியம் பெறுவதற்கும் வழி பிறந்திருக்கிறது. காலா காலத்தில் அரசாங்கத்தின் உதவிகள் கிடைக்காதிருந்தும் மழையும் அடிக்கடி பொய்த்து விட்டபோதிலும் உழவர்கள் முயற்சியில் ஒரு போதும் குன்றியதில்லை. அயராது உழைத்து வருவதை நாம் எங்கணும் பார்க்கின்றோம். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நல்ல வேளையில் நல்ல பயன் பெறலாம். விடாது உழைப்பார்களாக. வணிகர்கள் இந்த வேளையைத் தம் சுய நலத்திற்குத் தகுந்த வாய்ப்பு என்று கருதாமல் எக்காரியத்தையும் வெளிப் படையாகச் செய்து வரவேண்டுமென்று விரும்புகிறோம். இந்தக் காங்கிரசு ஆட்சியிலே ஏதோ சில வியாபாரிகள் நடத்திய தகாத செயல்களால் வியாபார உலகத்தின் மீது மக்களுக்கு அவநம்பிக்கையும், வெறுப்பும் ஏற்படும்படி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தச் சமயத்தில் அரசாங்கத்தின் நோக்கம் ஈடேறும் வண்ணம் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய பதுக்கல், தேக்கல், கடத்தல் முதலிய முறையில்லாமல் பொறுப்புணர்ச்சியோடு முன் வந்து ஆவன செய்ய முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். நற்பெயர் எடுப்பதற்கும், நல்வினை செய்வதால் ஏற்படும் இன்பத்தைத் துய்ப்பதற்கும், மக்களின் அன்பைப் பெறுவதற்கும், நேர்மையான ஊதியம் தேடுவதற்கும் ஏற்ற சமயம், தக்க வாய்ப்பு என்பதனை மறப்பது நன்றன்று என்று எச்சரித்துக் கொள்கின்றோம்."

என்று எழுதியதை மீண்டும் எல்லாக் கட்டுப்பாடுகளும் எடுக்கப்பட்ட இச்சமயத்திலும் வலியுறுத்திக் கொள்கின்றோம்.

"பெரும் பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு."

தமிழ் வெல்க!

— தமிழ்த்தென்றல்

நகரங்களில் பங்கீடு ரத்து உண்டா?

31-5-52-ம் நாள் ஆசிரியர் அனுப்பி இருந்த கேள்வி.

"நகரங்களில் உணவு பங்கீடுமுறை ரத்தாகுமா? அப்படியானால் அவசர நிலைமையை சமாளிக்க தேக்கங்கள் வைக்கப்படுமா?"

இம்மாதம் இறுதியில் கூட இருக்கிற அசெம்பிளியில் பதில் அளிக்கக் கேட்டு, சென்ற 31—5—52-ம் நாள் நமது ஆசிரியர் மேற்படி கேள்வியை அனுப்பி இருந்தார்.

கட்டுப்பாடு ரத்தாகிவிட்டது சம்பந்தமாக முதல் அமைச்சர் 6—6—52-ல் பேசிய ரேடியோ பிரசங்கத்திற்கு மேலும் விவரம் வேண்டுமென்றால் மேலிட்டு கேட்டுக் கொள்ளலாமென்று 11—6—52-ம் தேதி அரசாங்கத்தின் பதில் வந்தது.

7—6—1952.

FOOD CONTROLS.

Our Editor welcomed Government's Move.

Mr. V. V. Ramaswamy, M. L. A., Leader of the Independent Progressive Block in the Assembly welcomes the removal of controls on all food grains including rice. This he has been urging upon the Government for the past three years and congratulates Madras Government on this bold step. This will throw the people upon their own resources. Moreover, this will remove the sad plight and shameful position of depending upon our own Northern States and other foreign countries, which did not play the game. Existence and Enforcement of various controls have sapped the morality of those who rule and those who are governed. It is now hoped people will rise to the occasion and bear cheerfully any untoward inconveniences.

— தமிழ்த்தென்றல்

உணவுப் பொருள் கட்டுப்பாடு ரத்து

பத்திரிகைகளுக்கு விடுத்த நமது ஆசிரியரின் பாராட்டுச் செய்தி

அரிசி உள்ளிட்டு சகல உணவுப் பொருள்கள் மீதிருந்த கட்டுப் பாடுகளை ரத்துச் செய்தது குறித்து சென்னை அசெம்பிளி முற்போக்குச் சுயேட்சைக் கட்சியின் தலைவர் நமது ஆசிரியர் உயர்திரு V. V. இராமசாமி எம். எல். ஏ. அவர்கள் வரவேற்பதாக பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதை சென்ற மூன்று வருடங்களாகவே வற்புறுத்தி வந்திருக்கின்றார். இத்தகைய தைரியமான நடவடிக்கைக்காக சென்னை மாகில அரசை பாராட்டுகின்றார். இதன் மூலம் பொது மக்கள் தங்களுடைய சொந்த உழைப்பை நம்பி இருக்கும் நிலைமை ஏற்படும் என்றும் கருதுகின்றார்.

மேலும் தங்கள் தம் கடமையையும் பங்கையும் செய்யாத பிற நாடுகளையும் சிறப்பாக வட நாட்டு மாகில அரசாங்கங்களையும் நம்பி இருக்கும், வருந்தத்தக்கதும், வெட்கபடவேண்டியதுமான நிலைமை இனி ஒழிந்து தீரும். பலவித கட்டுப்பாடுகளை கடைப்பிடித்து அமல் நடத்தியதன் பலன் ஆட்சிப் பொறுப்பிலிருக்கின்றவர்களையும் ஆளப்படுகிறவர்களையும் ஒழுக்கத்திலிருந்து தவறும்படி செய்வதில் தான் முடிந்தது.

நிலைமைக்கேற்ப தங்கள் பொறுப்பையும் ஏற்படும் அசௌகரியங்களையும் மகிழ்ச்சியுடன் தாங்கும் மனவலிமை பொது மக்களுக்கு ஏற்படுமென்றும் உறுதியாக நம்புகின்றார்.

காலம் வேண்டுவதென்ன ?

பஞ்சத்தைத் தடுக்க

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேல் மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டுவிட்டது என்று பொதுமக்களுக்குச் சொல்லப்படுகிறது.

உண்மை என்ன ?

காலத்தில் பெய்யவேண்டிய மழை தவறியது உண்டு. சில சமயங்களில் கொட்டு கொட்டென்று கொட்டிப் பயனின்றி மக்கள் பல வாறு அவதியுறும் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இதை வெள்ளப் பஞ்சமென்று சொல்லலாம்.

அநேக சமயங்களில் இரண்டாவது மேல்மழை பெய்யாமல் பயிர்களெல்லாம் கெட்டுப்போயிருக்கின்றன. எங்கு கட்டாயமாக மழை வேண்டுமோ அங்கு பெய்வதில்லை. ஆனல் பக்கத்தில் தேவையில்லாத வேளைகளிற் பெய்து பயனற்றுப் போகிறது. வானம் பூரித்த இப்படிப்

— தமிழ்த்தென்றல்

பட்ட திருவிளையாடல்களைத்தான் கண்டோம். இப்படி நடந்தது ஓராண்டல்ல, ஈராண்டல்ல. ஐந்தாண்டுக் காலம்.

ஆட்சியிலிருந்த காங்கிரசார் என்ன செய்தார்கள் ? பெய்த மழையை அடக்கித் தேக்கி வைக்க என்ன திட்டமிட்டு வேலை செய்திருக்கின்றார்கள் ?

பெரிய பெரிய அணைக்கட்டுகளும், நீர்த்தேக்கங்களும் பல கோடிச்செலவில் திட்டமிட்டார்கள். இவைகளைக் கட்டிமுடிக்கப் பல்லாண்டுகள் பிடிக்கும். இக்காலத்து மக்களின் வரிப்பணத்தைச் செலவழித்தால் பின்சந்ததிக்குத்தானே பயன்படும் !

ஆனல் இப்போது தேவைக்கு என்ன செய்ய வேண்டும் ? எல்லாக் கண்மாய்களையும் மராமத்துச் செய்தல் வேண்டும். ஆறுகளிலும், ஓடைகளிலும் நம் முன்னோர்கள் செய்தபடி சிறு சிறு அணைகளைக் கட்டிவைத்தால், அந்தந்த இடங்களில் தண்ணீர் தேங்கிநிற்கும். பக்கத்திலிருக்கும கண்மாய்களுக்குத் தண்ணீர் கொண்டுபோகலாம். ஓரங்களிலிருக்கும் வயல்களுக்கும் கிணறுகளுக்கும் தண்ணீர் தாராளமாய்க் கிடைக்கும். ஊற்று இருந்து கொண்டேயிருக்கும். மேலும், மக்களின் பிறவசதிகளுக்கும் கால்நடைகளின் வசதிகளுக்கும் தட்டுப்பாடில்லாமல் இருந்துகொண்டேயிருக்கும். இவ்விதநோக்கத்துடன் சிறு அணைக்கட்டுகள் கட்டும்போது அவைகள் வண்டிப்போக்குவரத்துக்கு உரிய பாலமாகவும் இருக்க வேண்டும். பெரிய நீர்த்தேக்கமாகக் கட்டிப் பக்கத்திலுள்ள சிற்றூர்களை அழிக்கும் திட்டமாக இருக்கக்கூடாது.

இப்படி ஆங்காங்கு நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்கு அங்கங்கே உள்ள மக்களிடம் கடனுகவோ மற்றப்படியாகவோ பெற்றுக் கொள்ளலாமென்று கருதுகிறோம்.

சென்னை நகருக்குக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் போன நிலைமையில் ஆடினேம்; பாடினேம்; மழை பெய்தது; செவ்வேரியில் தண்ணீர் நிரம்பியது. ஆனல் நகருக்குள் கிழமேலாக ஓடும் அடையாற்றிலும், கூவ நதியிலும் ஓடிய வெள்ளமெல்லாம் கடலுக்குத்தானே போய்விட்டது. சலவைத்தொழிலுக்குக் கூட வேண்டிய தண்ணீர் இல்லாமலிருக்கின்றதே. ஆங்காங்கு சிறு அணைகள் இருந்தால் தண்ணீர் தேங்கி நிற்குமல்லவா? இதைச் செய்யாதுவிடுத்த குற்றத்தை ஆட்சியாளர் மீது சுமத்தினல் பொருந்துமே.

— தமிழ்த்தென்றல்

மேலே கூறிய சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றினால் உணவுப் பெருக்கத்துக்கும் உடனடியாக வழி பிறப்பதுடன் பலனும் கிட்டும். பஞ்சமும் வராது ஒழியும்.

துணிப்பஞ்சந் தொலைய

நம் மாநிலத்தில் நூலுக்குப் பஞ்சமும், உடைக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டதுதான் மிகவும் கேவலம். பருத்தி தாராளமாக விளைகின்றது. நூல் ஆலைகளும் நெசவு ஆலைகளும் ஏராளமாக இருக்கின்றன. நெசவுக்கு, தேவைக்கு வேண்டிய அளவுக்குமேல் நூல் நூற்கப்படுகிறது. அப்படியிருந்தும் நூற்பஞ்சம் ஏன்?

தில்லி அரசாங்கத்தார் ஏதோ ஒரு திட்டத்தை வைத்துக்கொண்டு நூலைப் . பிறமாகாணங்களுக்கும் வெளிநாட்டுக்கும் பங்கீடு செய்கிறார்கள். நம் நூலை எடுத்துக் கொண்டு நமக்கு வேண்டிய கைத்தறி நூலும் போதிய துணியையும் கொடுப்பதில்லை என்றால் அக்கிரமமல்லவா?

கைத்தறி நெசவுக்கு வேண்டிய நூலைக் கணக்கிட்டு முதலில் அதை ஒதுக்கிவைத்துக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக சென்னைமாநிலத்து மக்கள் அணிந்துகொள்ளும் உடைகளில் இன்னவைதான் அணிய வேண்டும் என்று ஒப்புக்கொள்ளக் கூடிய ஒரு வரையறுப்பு ஏற்பட வேண்டும். அதற்குரிய நூல்ரகங்களை மட்டும் நூற்கச் செய்து இங்குள்ள கைத்தறிகளும் நெசவாலைகளும் நெய்தல் வேண்டும். .வெளி நாட்டிலிருந்தோ பிறமாகாணங்களிலிருந்தோ வேறு துணிகளை இங்கு இறக்குமதி செய்ய விடக்கூடாது. இந்தவிதமான கட்டுப்பாடுகளை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வைத்துக் கொள்ளலாம். இந்த உடன்பாட்டுக்கு தில்லி அரசாங்கத்தை இணங்கும்படி செய்ய வேண்டும். இவ்விதமாகச் செய்தால் நூல், துணி இவைகளின் விலையும் ஒரு கட்டுப்பாட்டில் நிற்கும். நெசவாளர்களுக்கும் தொடர்பாக வேலை இருந்து கொண்டேயிருக்கும். மேலேகூறிய

[தொடர்ச்சி 67-ம் பக்கம் பார்க்கவும்]



— தமிழ்த்தென்றல்

கல்லும் பேசுகிறது

பதினைந்தாம் பேச்சு

கோவை கிழார்

எங்கள் நாட்டிலும் சமணர்கள் இருந்தார்களா?

எங்கள் கல்லூரியில் ஒரு சரித்திர ஆசிரியர் இருந்தார். மற்ற ஆசிரியர்களைக் காட்டிலும் பெரிய பட்டம் பெற்றிருந்தார். அவரை மிகவும் பெரிய அறிவாளி என்று பிள்ளைகள் எல்லோரும் மதித்திருந்தார்கள். அவர் பல்லைக் கடித்துக் கொண்டு சில சொற்களைச் சொன்னால் அறிவு அவருடைய பற்களுக்கு இடையே சிக்கிக் கொண்டு வெளிவர முயலுகிறது என்று நாங்கள் எண்ணினோம். அவர் பற்களை நெரிக்கும் போது எல்லாம் எங்களுக்குச் சிறிது அச்சம். எங்கே எங்களை வைகிறாரோ என்று அஞ்சி நடுங்குவதும் உண்டு. அவருடைய பற்களுக்கிடையே அறிவு அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறது என்று நாங்கள் எண்ணினதை இப்போது நினைத்தால் இராஜாஜி அவர்களுடைய கருப்புக் கண்ணாடிக்குள்ளே அறிவு துலங்குகிறது என்று "சங்கர் வாராந்திரம்" எழுதிய விசித்திரப் படமே நினைவுக்கு வருகின்றது.

— தமிழ்த்தென்றல்

அந்த ஆசிரியருடைய அறிவுப் பொலிவைக் கண்டு நாங்கள் பல கதைகளைக் கேட்டிருக்கிறோம். அவைகள் முற்றும் உண்மை என்றே நாங்கள் நம்பியிருந்தோம். அவர் பட்டப் பரீட்சைகள் முற்றும் பாடசாலைப் படிப்பின்றி தானே கற்றுத் தேறினார் என்பது ஒன்று. ஏழ்மையால் வீட்டில் விளக்கின்றி தெரு விளக்கின் கீழ் நின்று படித்தார் என்பது ஒன்று. வயது முதிர்ச்சியடைந்த பிறகு வடமொழி படிக்க ஆவல் கொண்டு தானே வாசித்து நிபுணரானார் என்பது ஒன்று. இவை முதலாகிய கதைகள் சொல்லிச் சொல்லி நாங்கள் பெருமை அடைவோம்.

"நமது நாட்டில் மக்களுக்குச் சரித்திர ஞானமேகிடையாது. பெரியவர்களுக்கும் அப்படித்தான், பிள்ளைகளுக்கும் அப்படித்தான்" என்று சொல்லி விட்டு "ஆழ்வார்கள் எத்தனை பேர்?" என்று ஒரு ஐயங்கார் பையனைக் கேட்டார். அவன் சொல்லத் தெரியாமலே அடுத்த பையனி

டம் 'இவர் எப்போது சொல்லிக் கொடுத்தார்?' என்று முணுமுணுக்குவான். "வைஷ்ணவத்தைத் தாபித்தவர் யார்?" என்று கேட்டார். அதற்கும் விடை இல்லை. பிறகு பல்லைக் கடித்துக் கொண்டு "பொது அறிவு இல்லாத பிள்ளைகள்" என்று வைது விட்டு "வைஷ்ணவத்தைத் தாபித்தவர் இராமநுஜர், அவரைப் பின்பற்றிப் பன்னிரெண்டு ஆழ்வார்கள் அதனைப் பிரசாரம் செய்தார்கள்" என்று ஒரு போடு போடுவார். அறியாத பிள்ளைகள் ஆகிய நாங்கள் அதனை உண்மை என்று நம்பி அவருடைய விசாலமான மூளைக்குப் பெருமை கொடுத்து விட்டுத் தாழ்ந்து நிற்போம். இக்காலத்துப் பிள்ளைகள் சும்மா இருப்பார்களா? "ஐயா! எந்த சரித்திர நூலில் இதனைக் கண்டு பிடித்தீர்கள்" என்று கேட்க மாட்டார்களா?

ஒரு நாள் சரித்திர பாடத்தில் எங்கள் அறிவு திகழ்ந்த ஆசிரியர் திரு முன்னர் நாங்கள் அடங்கி ஒடுங்கி அமர்ந்திருந்தோம். எங்கள் நெஞ்சாகிய வாழைப் பழத்திலே எந்த அற்புத ஊசியைக் கொண்டு இன்று ஏற்றுகிறாரோ என்று நாங்கள் வியந்து கொண்டிருந்தோம். அப்போது என்றைக்கும் மறக்க முடியாத ஒரு அற்புதச் சரித்திர ஞானத்தை ஏற்றி விட்டார். "தமிழ் நாட்டிலே சைவ சமயத்திலே 63 நாயன்மார்களும் நான்கு ஆசிரியர்களும் இருந்தார்கள். ஆங்கில சரித்திர நூல்களிலே அவர்களைப்பற்றி எழுதவில்லை. நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய செய்திகளில் அது ஒன்று. ஆனால் அவர்களைப் பற்றிப் புராணங்களிலே பல நம்பத்தகாத செய்திகள் எழுதப்பட்டுள்ளன. அவைகளை விலக்கி விட்டு உண்மைகளை மட்டும் நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

எனக்கோ "இவரேன்! சைவ வைஷ்ணவங்களை அடிக்கடி எடுத்துக் கூறுகிறாரோ, நமது பாடங்களைப்பற்றிச் சொன்னால் போதாதோ" என்று தோன்றிற்று. ஆனால் அக்காலத்துப் பாடசாலை விதிகளின்படி பிள்ளைகள் வகுப்பில் எதையும் கேட்கக் கூடாது. ஆகையால் சும்மா இருந்து விட்டேன். மீண்டும் தொடங்கினார்.

"ஒரு உதாரணம் கூறுகிறேன். சம்பந்தர் மதுரையிலே 8000 சமணர்களைக் கழுவேற்றினாராம். இது உண்மையாக இருக்கக் கூடுமா? 8000 சமணர்களை ஏற்றியிருந்தால் அது மிகப் பெரிய சம்பவம் அல்லவா! அதற்குப் பிரபலமான சரித்திர ஆதாரம் இருக்கும் அல்லவா? அப்படி யாதொன்றும் கிடைக்கவில்லை. ஆகவே அது ஒரு கட்டுக் கதை. வட இந்தியாவில் தான் சமணர்கள் இருந்தார்கள். தமிழ் நாட்டில் சமணர்களுடைய ஆதிக்கமே இருக்கவில்லை. ஆகவே 8000 சமணர்கள் இருந்திருக்க முடியுமா? அவர்களை ஒருவர் கொன்றிருக்க முடியுமா?" என்று சொன்னார்.

தற்காலத்து ஆராய்ச்சிகளை அந்த ஆசிரியர் அறிந்திருந்தால்

அவர்கள் அவ்வாறு பேசியிருக்க மாட்டார்கள். சேக்கிழார் அருளிச் செய்த பெரிய புராணத்தில் தான் சமணர்கள் கழுவேறின செய்தி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அந்தப் புராணத்தை ஏனைய புராணங்களோடு ஒத்திட்டுப் பேசுவது பேதமை. தக்க சான்றுகள் இல்லாது சேக்கிழார் எதையும் கூற மாட்டார். சரித்திரத்தில் ஆராய்ச்சி செய்த தற்காலத்து அறிஞர்கள் எல்லோரும் சேக்கிழார் கூற்றுக்களை பொன்னே போலப் போற்றுகிறார்கள். அச்சிறப்பை அந்த ஆசிரியர் அறியார்.

மேலும் பாண்டிய நாட்டுக் கல்வெட்டுகள் சேக்கிழார் சொன்ன செய்திகளைத் தழுவி பேசுகின்றன. அக்கற்கள் பேசுகிற மொழியை அந்த சரித்திர ஆசிரியர் கேட்டிருக்க மாட்டார். அவைகளைப் படிக்க அவருக்குப் போதுமான ஆற்றலும் ஆதாரக் கல்வியும் இருக்கவில்லை. இந்தக் காலத்தில் அவ்வாசிரியர் இருந்திருந்தால் தாம் சொன்ன பேச்சைப் பற்றித் தாமே நொந்து கொண்டு மன்னிப்பு கேட்டிருப்பார். ஆனால் என்ன! இந்த ஆராய்ச்சிக் காலத்திலும் சில சரித்திரக்காரர்கள் கழுவேற்றின செய்தியை ஒத்துக் கொள்ளுவதில்லை. அது கிடக்கட்டும். சமணர்கள் இருந்தார்கள் என்றாவது ஒத்துக் கொள்ளுகிறார்களா? கற்கள் இதை பற்றி என்ன சொல்லுகின்றன? பார்ப்போம்.

சமண சமயம் என்றும் ஜைன சமயத்தைப் பிரசாரம் செய்த ஆசிரியர் மகா வீரர். அவர் அவதரித்தது வடநாட்டில் இமயமலைச் சாரலில். அது 2500 ஆண்டுகளுக்கு முந்தியாகும். அக்காலத்தில் நடந்து வந்த உயிர்ப்பலி வேள்விகளை எதிர்த்தே அவரது சமயக் கொள்கை தோன்றிற்று. ஆகவே அவர் கொள்கை பொது மக்களிடம் வெகு எளிதில் பரவிற்று. கி. மு. 3-ம் நூற்றாண்டிலேயே சந்திரகுப்தன் தென் நாட்டிற்கு வந்த போது சமணக்குரவர்களும் வந்தார்கள். அதற்குப் பின் கடைச் சங்கத்தார் காலத்தில் பல முனிவர்களும் ஆசிரியர்களும் வந்தார்கள். தமிழ் கற்று நூல்கள் எழுதினார்கள். பிறகு தலைக்காட்டில் கங்கர்கள், காஞ்சியில் பல்லவர்கள், மதுரையில் பாண்டியர்கள் அந்தச் சமயத்தில் ஈடுபட்டார்கள். அரசர்கள் ஈடுபடவே பொது மக்களும் ஈடுபட்டார்கள். இவர்களுக்குப் போதனை செய்ய ஆயிரக்கணக்கில் குரவர்கள் வேண்டும் அல்லவா? அக்குரவர்கள் தவம் பூண்டவர்கள். ஆகையினால் குன்றுகளிலும் பாறைகளிலும் எழுந்தருளியிருந்தார்கள். தமிழ் நாட்டில் பல இடங்களிலும் இப்படிப்பட்ட சிறு குன்றுகளும் பாறைகளும் உண்டு. அவைகளில் கடுந் தவம் புரிவதற்காகப் பாறைகளில் படுக்கைகளும் குகைகளும் உண்டாக்கினார்கள். இச் சமணப் படுக்கைகளின் விவரம் அறியாத பின் காலத்தில் இவைகளைப் பாண்டவர் படுக்கைகள் என்று கூறத் தொடங்கினார்கள். உண்மையில் இவைகள் சமணர்கள் தவம் புரிந்த இடங்களே ஆகும். இச் செய்தியை

அக்கற்களே கூறுகின்றன. அநேக பாறைகளில் தவம் புரிந்த குரவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவைகளை கொண்டு இப்படுக்கைகள் சமணர்கள் இருந்த இடங்கள் என்று கூற முடியும்.

இப்படிப்பட்ட படுக்கைகளும் குகைகளும் மதுரையைச் சுற்றியிலுமுள்ள குன்றுகளில் ஏராளமாக இருக்கின்றன. அண்மையிலே ஆராய்ச்சி செய்வதற்காக கல்வெட்டுப் பரிசோதகர்கள் இம்மலைகளைத் தேடிப் பார்த்ததில் இவைகள் அகப்பட்டன. மதுரையைச் சுற்றி எட்டு மலைகள் இருக்கின்றன. அவ்வெட்டு மலைகளிலும் 8000 குரவர்கள் இருந்தார்கள் என்று புராணம் கூறுகிறது. ஒவ்வொரு குன்றிலும் 1000 ஆக எட்டு குன்றுகளில் 8000 பேர் இருந்தார்கள். இவர்கள் பாண்டியனுடைய ஆதரவில் சமண சமயத்தைப் பிரசாரம் செய்து கொண்டிருந்தார்கள். அம்மலைகள் ஆனைமலை, பசுமலை, இடபமலை, நாகமலை, பன்றிமலை (வராக) முதலியன. அக்காலத்திலிருந்து சம்பந்தர் இதனைத் தம் வாக்கால் "ஆனைமாமலை ஆதியான இடங்களில் பல அல்லல் சேர் சமணர்கள்" என்று கூறுகிறார். இவ்வெட்டு மலைகளிலும் அச்சமண குரவர்கள் இருந்து சென்றதற்குத் தக்க ஆதாரங்கள் இருக்கின்றன. அவைகளை விவரமாக ஆராய்ச்சி செய்து அந்தக் கல்வெட்டு அறிஞர்கள் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். இப்போது சென்றாலும் மதுரைக்கு அருகே உள்ள ஆனைமலையிலும் நாகமலையிலும் சமணர் சின்னங்கள் நிரம்பக் காணலாம்.

சேக்கிழார் பெருமான் சம்பந்தர் புராணத்தில் கழுவேறின சமணர்களைக் குறிக்கும் போது

"எண் பெருங் குன்றத்து எண்ணாயிர
வரும்
ஏறினார்கள்" (திரு ஞா — 855.)

என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் பரஞ்சோதியார் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் அடியிற்கண்ட செய்யுளில் சமணர்கள் இருந்த மலைகளின் பெயர்களைக் கூறியிருக்கின்றார்.

"அஞ்சனங் கவுஞ்சங் கோவர்த்
தனந்திரி கூடங் காஞ்சிக்
குஞ்சரஞ் சைய மேம கூடமே விந்த
மென்றும்
மஞ்சிவர் வராக மெட்டும் வைகுறு
மமணர் தம்மில்
எஞ்சலில் ரேவர்க்கோலை வேறுவே
றெழுதி விட்டார்."
(பாலை எய்த படலம்-செய்.7.)

இச் செய்யுளில் கூறும் எட்டு மலைகளில் காஞ்சிகுஞ்சரம் (அத்தி மலை) தவிர மற்றவைகள் வடநாட்டு மலைகள். அம்மலைகளிலிருந்த எண்ணாயிரம் குரவர்களையும் காஞ்சி அரசன் தருவித்து மதுரைப் பாண்டியன் மீது அபிசார வேள்வி செய்யும்படி ஏவினானாம். அவ்வமணக் குரவர்கள் வேள்வி செய்து நாகம், பசு முதலியவைகளை ஏவினார்களாம். அவைகளை இறைவன் அருளைக்

— தமிழ்த்தென்றல்

கொண்டு பாண்டியன் கொல்லுவித்தான். மீண்டும் பரஞ்சோதியார் பாண்டியன் சுரம் தீர்த்த படலத்தில் "மலையிடங்களில் திரண்டனைகதவத்த எண்ணாயிரம் கயவரும்" என்றும் சமணரைக் கழுவேற்றிய படலத்தில்

"ஆறிரெ டிரண்டடுத்த வாயிரஞ்
சமணரும்"

என்றும் கூறுகின்றார். இதனாலே வடநாட்டில் எட்டு மலைகளில் தவஞ் செய்து கொண்டிருந்த எண்ணாயிரம் சமயக் குரவரும் தெற்கே வந்து மதுரையில் எட்டு மலைகளில் வாசஞ் செய்தார்கள் என்று அறியலாம். இன்றைக்கும் அம்மலைகளில் சமணர் படுக்கைகள் இருக்கக் காண்கிறோம்.

இந்த எட்டு குன்றுகளின் பெயர்களைக் கூறும் பழைய செய்யுள் ஒன்று உண்டு. அது வருமாறு:

"பரங்குன்று, ஒருவகம், பப்பாரம்,
பள்ளி,
யருங்குன்றம், பேராந்தை, யானை—
இருங்குன்றம்,
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப
வல்லார்க்கு
சென்றெட்டுமோ பிறவித் தீங்கு"

இக்குன்றுகள் மதுரையை அடுத்து உள்ளன. மேலும் நாலடியார் பாடிய புலவர்கள் இந்த எட்டு குன்றுகளில் தவம்புரிந்தவர்களாம். அதனை மற்றொரு செய்யுள் கூறுகிறது.

"வண் பெருஞ் சிறப்பின் மாதாம்
புரிந்தாங்
தென் பெருங் குன்றத் திருந்த
முனிவரர்" என்பதும்,
எண் பெருங் குன்றத் தெண்ணாயிர
மிருடி
பண் பொருந்தப் பாடிய பா
நானூறும்"

என்பதும் பழைய ஏட்டுப் பிரதிகளில் உள்ள பாடல்கள். இந்த எட்டுக் குன்றுகளிலும் சங்கத்தார் காலம் முதற் கொண்டே குருபரம்பரை போல 8000 குரவர்கள் இருந்து தவம் செய்து கொண்டு சமண சமயத்தைப் பெருக்கி வந்தார்கள். அவர்களில் நின்ற சீர் நெடு மாறனார் காலத்தில் சம்பந்தரால் தோற்கடிக்கப்படவே அக்குரவர்களில் பெரும்பான்மையோர் கழுவில் உயிர் துறந்தார்கள். சமணமும் ஒருவாறு குறையத் தொடங்கியது. பின்னால் சில குறிப்பிட்ட இடங்களில் தான் சமணம் நின்றது.

பாண்டி நாட்டிலே கோவிற்பட்டிக்கும் சங்கரநயினார் கோயிலுக்கும் இடையே கழுகுமலை என்ற ஒரு அருமையான திருமுருகன் மலை இருக்கிறது. இங்கே மலை அடிவாரத்தில் உள்ள ஆலயம் மிகப் பெரியது. முருகக் கடவுள் அங்கே எழுந்தருளி அன்ப கோடிகளுக்கு அருள் புரிந்து வருகின்றார். தென்னாட்டில் மிகப் புகழ் பெற்ற இசை நூலாகிய காவடிச் சிந்து இந்த முருகனைப் பற்றியதே. இந்த இடத்திற்கு அருகில் உதித்த அண்ணாமலை ரெட்டியார் என்ற கவிஞர் தான் இந்த பிரபந்தத்தைப் பாடினவர்.

— தமிழ்த்தென்றல்

தற்காலத்தில் தமிழ் நாடெங்கும் இசை யுலகில் மிகப் பெயர் பெற்று விளங்கி இந்தத் தலத்தை நிலையுபடுத்துவது இந்த இசை நூலாகும். இந்தத் தலத்து மலை ஒரு பெரிய பாறையாகும். அப்பாறையின் ஒரு புறம் அழகிய சுனை நீர்த்தடாகம் இருக்கின்றது. அது நீர் நிரம்பி உள்ள போது பார்த்தால் இனிய காட்சி தோன்றும். அந்தப் பாறை சாய்ந்த வண்ணம் இருப்பதால் வெகு எளிதில் ஏறலாம். அதன் வடபுறச் சரிவில் குடைந்த ஒற்றைக் கற் கோயில் உண்டு. அது பிள்ளையார் கோயில். வடநாட்டு இளாபுரிக்கயிலாய நாதர் கோயில் போன்று இருக்கும். அதை விட்டு இடையில் சிறிது தூரம் மலை ஏறினால் அங்கிருந்து பாறை செங்குத்தாக இருக்கும். இந்த இடத்தில் ஏராளமான படுக்கைகளும் சிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன. அந்த இடத்தில் தான் சமண குரவர்கள் முன் காலத்தில் தவம் செய்தது. குரவர்களும் (ஆண்) குரத்திகளும் (பெண்) இங்கே தவம் புரிந்த காலத்தில் அவரவர்கள் சிலைகளைச் செதுக்கியும் பெயர்களை எழுதியும் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட உருவங்களின் பெயர்கள் 15 இருக்கின்றன. சில குரவர்களின் பெயர்கள் — குணாகரர், புட்பநந்தி, பரிநந்தி, சாந்திசேனப் பெரியார், கனகவீர அடிகள், பிறப்பபடாரர், சாத்தம்பமவிதவன், குறண்டிக் காவிதி, விலை சந்திரக் குரவர்கள், சாந்தி சேன அடிகள், ஆதித்த படாரர் முதலியவர். சில குரத்திகளின் பெயர்கள்: — பழஇரக்காணிக் குரத்தி, மிழலூர் குரத்தி, சிரிவிசயக் குரத்தி பார திருச்சாரணத்துக் குரத்திகள், மலைக்கைக, நாங்கூர் குரத்திகள், அரட்டெமிக் குரத்திகள், முதலியன. இவைகளை சம்பந்தர் தேவாரப்பதிகத்தில் கண்ட பெயர்களாகிய 'சந்து சேனன், இந்து சேனன், தரும சேனன், கந்து சேனன், கனக சேனன், கனகநந்தி, புட்பநந்தி, இயனைநந்தி, அனைநந்தி முதலிய பெயர்களோடு ஒத்திட்டுக் காண்க. ஆகவே அக்காலத்துச் சமணர் வாழ்க்கை, ஒழுக்கம், அறம், தவம் முதலியவைகளைப் பற்றி இந்தப் பெரும்மலைப்பாறை பேசுகிறது அல்லவா? இப்பாறைகள் இனி எதிர் காலத்திலும் யார் அதனைப் பார்க்க வந்தாலும் அவர்களோடு பேசிக் கொண்டே இருக்கும் என்க.

பாண்டிய நாட்டில் மற்றொரு இடமாகிய ஒரு பாறையிலும் சமண



— தமிழ்த்தென்றல்

னைப்பற்றி அது பேசுகின்றது. அது ஏர்வாடிக்கருகில் உள்ள பொட்டல் பாறை என்பது.

இனி பாண்டிய நாடு மட்டும் அல்ல. சோழ நாட்டிலே சிராப்பள்ளி, நார்த்தாமலை, குடுமியாமலை, சித்தன்னவாயில் முதலிய பல பாறைக்குன்றுகள் சமண சின்னங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்கின்றன.

கொங்கு நாட்டிலோ புகழூருக்கு அருகில் உள்ள ஆறு நாட்டார்மலை (வேலாயுதமலை), பழனிக்கடுத்த ஐவர்மலை, விஜயமங்கலத்துக்கடுத்த அரசண்ணாமலை, உடுமலைபேட்டைக்கடுத்த திருமூர்த்திமலை முதலிய பாறைகளும் சமணர் சின்னங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்கின்றன. சமண நிலங்களில் பல கோயிற்கற்களும் சமண ஆதிக்கத்தைப் பற்றிக் கூறுகின்றன. தனிக் கருகில் உள்ள ஆமனேசுவரர் கோயில்கள் விஜயமங்கலத்திற்கருகில் உள்ள நெட்டைக் கோபுரம், திங்களூர், பூந்துறை, சீனாபுரம் முதலிய இடங்களில் உள்ளவைகளும் சமண மேம்பாட்டைக் குறிக்கின்றன. பொதுமக்கள் இவைகள் சமண பண்பாட்டைத் தெரிவிக்கின்றன என்று கூட அறியாமல் இருக்கின்றார்கள். ஆகவே ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் சமணர்கள் மேம்பாடு மிக உன்னத நிலை பெற்றிருந்தது எனவும் அந்த நிலை பின்னொரு காலத்தில் அழிவுற்றது எனவும் கல் சான்றுகளே பேசி நமக்கு அறிவிக்கின்றன என அறிய வேண்டும்.



— தமிழ்த்தென்றல்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.

மதுரை-தூத்துக்குடி-அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்	நெம்பர் 80 வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு
வேண்டிய சாரிக்கன் நூல்கள்,
இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள்,
கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்
கேற்ற மடக்கு இரட்டை நூல்கள்
மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற
மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும்
நூல்களைப்போல் எல்லா வகையிலும்
கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

போன்: 250 (4 லைன்) தந்தி: "ஹார்வி"

— தமிழ்த்தென்றல்



[மூலம்: கவிஅரசர் தாகூர்]

[தமிழாக்கம்: டி. என். கிருபேந்திர பாபு. பி. எஸ்ஸி. (ஹானர்ஸ்)]

கண்ணுக்குப் புலப்படாத கைவிரல்கள், இளங் காற்றைப் போல, என் இதயத்திலே நீர்க்குமிழி நாதத்தை இசைத்து விளையாடுகின்றன.

❁ ❁ ❁

"ஓ, அலை கடலே! உனது மொழி யாது?"
"முதல் முடிவற்ற மொழி..........!"
"ஓ, பரந்து கிடக்கும் ஆகாயமே! நீ பதிலிறுக்கும் மொழி யாது?"
"முதல் முடிவற்ற மௌன மொழி.......!"

❁ ❁ ❁

என் இதயமே! உலகம் உன்னைக் காதலிக்கிறது. அது கூறும் மொழிகளைக் கவனித்துக் கேள்.

❁ ❁ ❁

படைப்பின் மர்மம், இரவின் இருண்ட தன்மையைப் போன்றது. ஒரு அகண்ட மர்மம் தான்!
ஆனால், அறிவை மீறிய இந்த அதிசயம் காலை மூடு பனியைப் போன்றது!

❁ ❁ ❁

ஒரு செங்குத்தான உயர்ந்த பாறையின் உச்சியிலே காதலுக்கு இடமளிக்காதே!

— தமிழ்த்தென்றல்

ஏனெனில், உயரத்திலிருந்து நழுவினால் அது நாசமாகி விடும்!

❁ ❁ ❁

இந்தச் சிறு சிந்தனைகள் எல்லாம் இலைகள் மோதி எழுகின்ற இனிய ஓசை வெள்ளம் தான்; என் மனத்திலே, இன்பத்தையே ஆனந்தமாக இசைக்கின்றன!

❁ ❁ ❁

உன்னையே உன்னால் அறிந்து கொள்ள முடியவில்லையே! நீ காண்பது உனது வெறும் நிழல் தான்!

❁ ❁ ❁

'மிகச் சிறந்த' தொன்றை என்னால் தேர்ந்தெடுக்க முடியவில்லையே!

ஆனால் 'மிகச் சிறந்தது' என்னைத் தேர்ந்தெடுத்து விடுகின்றது.

❁ ❁ ❁

முதுகுப் பக்கம் விளக்கை எடுத்துச் செல்பவர்கள், தங்கள் நிழலை முகத்திற்கு முன்னால் விழும்படிச் செய்து கொள்கிறார்கள்.

❁ ❁ ❁

நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே, அது ஒரு இடையறாத மர்மம் தான்; அது தான் உயிரோடு கலந்த வாழ்க்கை!

❁ ❁ ❁

"புயலுக்கு எங்கள் இனிய ஓசை வெள்ளத்தினால் பதிலிறுக்கிறோம்; ஆனால், மௌனமாக இருக்கும் நீ யார்?"

"நான் ஒரு சாதாரண பூ!"

❁ ❁ ❁

கண்களுக்கு இதழ்கள் சாந்தியளிப்பது போல, உழைப்புக்கு அமைதி நிறைந்த ஓய்வு வேண்டும்.

❁ ❁ ❁

மனிதன் ஒரு பிறந்த குழந்தை; அவன் சக்தி,வளர்கிறதே அது ஒன்று தான்!

(தொடரும்)

— தமிழ்த்தென்றல்

மருத்துவ மண்டலம்



[டாக்டர் ந. நமசிவாயம் I. M. P.]

17. ரோசாப்பூச் செயநீர்:— ரோசாப்பூ காம்பு நீக்கிய இதழ்களை ஒரு கும்பாக் கோப்பையில் சிறுகப் போட்டு அதன் மேல் சிறுக மாச் சீனி தூற்றி அதன் மேல் பூவைப் போட்டு அதன் மேல் சீனி தூற்றி இவ்விதம் டை கோப்பை நிறைய இட்டு மேலே சீனி தூற்றி வெயிலில் வைக்கச் செயநீர் இறங்கும். மாலையில் வடித்து எடுத்து வைத்துக் கொண்டு இரவும் டைகோப்பையை அப்படியே வைக்க; காலையில் எடுத்துப் பார்க்க. இறங்கிய செயநீரை எடுத்து வைத்துக் கொள்க. நமக்கு எவ்வளவு வேண்டுமோ அதற்குத் தக்க எத்தனை கோப்பையானாலும் தயார் செய்யலாம். வருடக் கணக்காக இருந்தாலும் செயநீர் கெடாது. தண்ணீர் அல்லது நயம் பன்னீர் இவைகளில் 2 தேக்கரண்டி அளவு டை செயநீரைக் கலந்து அருந்திவர மேகம், நீர்க்கடுப்பு, சதையடைப்பு, உஷ்ணத்தால் உண்டாகும் கடுப்பு முதலியவைகள் நீங்கி நலம் தரும்.

18. பெண்களுக்குக் குழந்தை பெற்ற பின் வரும் கிராணிக்கு:— நல்ல

— தமிழ்த்தென்றல்

மாவுள்ள சுக்கு பலம் 1 இடித்து வடிகட்டி அம்மியிலிட்டு மைப்போல் அரைத்து $\frac{1}{4}$ படி பாலில் கலக்கி சுத்தமான 1 பலக் கருப்புக்கட்டியைத் தட்டி டை பாலில் கரைத்துத் தீயெரிக்கவும். லேகிய பதம் வரும் சமயம் விசம்படி பசுவின் நெய் சேர்த்து கிண்டுக. கரண்டியில் ஒட்டாத சமயம் பார்த்து இறக்கி வைத்துக் கொள்க. பெரிய எலுமிச்சங்காய் அளவு காலை மாலை கொடுத்து வர, அசீர்ணத்தால் போகும் வயிற்றுப் போக்கு கிராணி, புண் இவைகளைக் குணப்படுத்தும்.

19: சிரங்கு எண்ணெய்:- 3 தேங்காயை உடைத்துத் திருகிப் பால் பிழிந்து (பூழுங்க நன்றாய்க் கொதித்த வெந்நீரை விட்டு ஆறியதும் பிழிந்து எடுக்கவும்) வடிகட்டி டை பாலில் நெல்லிக்காய் கெந்தகம் பலம் $\frac{1}{4}$ அழுத்திச் சேர்த்து அடுப்பேற்றித் தீ எரிக்கவும். மெழுகு பதத்திலிறக்கி மறு பாத்திரத்தில் இறுத்து ஆறிய பின் எடுத்து வைத்துக் கொள்க. சிரங்கு உள்ளவர்கள் டை எண்ணெயைப் பூசி 1 மணி நேரம் வைத்தி

ருந்து அரைப்புத் தேய்த்து தீராக. இவ்விதம் இரண்டு, மூன்று முறை செய்து வர சிரங்கு நமைச்சல், இவைகள் நீங்கி நலந்தரும்.

20. சோகைக் காமாலைக்கு:— கரிப்பான் இலை 3 மிளகு சேர்த்து அரைத்துச் சுண்டைக்காய் அளவு காலை மாலை பாலில் கலக்கிக் கொடுக்கவும். 10, 15 நாள் கொடுத்து வரக் குணந்தரும். வடி சாற்றில் வெல்லக்கட்டியை ஊற வைத்து எடுத்து அதுவும் உட்கொள்க. நோய் நீங்கும்.

21. குழந்தைகளுக்கு வரும் மாந்தத்திற்கு நேய்:— ஒரு தேங்காயை உடைத்து பால் பிழிந்து வடிகட்டி அதில் இந்துப்பு நாலுக்கு விராகன் எடை 2. காசம் விராகனெடை 2. மருதாக்கை வாட்டிப் பிழிந்த சாறு அரை வீசம் படி. வேலிப் பருத்தி இலையைக் கசக்கி பிழிந்த சாறு அரை வீசம் படி. இவைகளை ஒன்று சேர்த்துக் கலக்கித் தீ யெரிக்கவும். கொதிக் கொடுத்து பெருகு பதத்து இறக்கி மறு சட்டியில் வடித்து அதையும் வடிகட்டி எடுத்து வைத்துக் கொள்க. கால் அவுன்ஸ் எடை அமுர்தப் பாலில் சேர்த்துக் கொள்க. மாந்தம், உப்பிசம், வயிற்றுப் போக்கு இவைகள் நீங்கி சுகந்தரும்.

[தொடரும்.]

— தமிழ்த்தென்றல்

மூன்று கல்லறைகள்

[மணி வழுதி.]

பாண்டியனும் அமிர்தவல்லியும் பள்ளித் தோழர்கள். அப்படியென்றால் பாலர் வகுப்பிலா? இல்லை. பாண்டியன் பத்தாம் வகுப்பில் தேற முடியாமல் "பல்டி" யடித்தானே, அதே ஆண்டு அவள் வகுப்பிற்குப்படி யேறி வந்தாள் அமிர்தவல்லி.

கண்டதும் காதல் என்கிறார்களே, அதுவல்ல இவர்கள் கொண்டது. பாடச் சந்தேகங்களை ஒருவருக்கொருவர் விளக்கம் கேட்கும் வழியில் நடம் பிடித்து, மெல்ல மெல்ல நான்கைந்து மாதங்களில் நல்ல முறையில் புரிந்து கொண்டனர். அன்பு அரும்பி, பாசம் மலர்ந்து மணம் வீசுவது காதலா? பிரேமையா? அது எதுவாக இருந்தாலும் சரி, உலகம் தோன்றிய அந்த நாள் முதல் சகல இன்ப துன்பங்களையும் வழி நடத்திச் செல்லும் அந்த வலிமை மிக்க சக்திக்கு இவர்கள் இரையானார்கள்!

ஆண்களுக்கு எதிலும் உடனே அனுபவிக்கத் தானே தெரியும். அதில் தான் இவர்கள் அசகாய சூரர்களாயிற்றே. இதன் பின்னே வரும் விளைவும் நிலையும் என்னஎன்

— தமிழ்த்தென்றல்

பதை எல்லாம் யோசனைக்கு எடுத்துக் கொள்ளுவதில்லை அல்லவா? அமிர்தவல்லியோ எதையும் சிந்தித்துப் பார்க்கும் இயல்பினள். இந்நிலையில் வாழ்க்கையை அடியோடு ஏற்றியோ, மாற்றியோ வடிவம் தரும் இதில், நன்றாக சிந்தனை செய்து பார்க்கத் தவறவில்லை அவள்.

தான் ஒரு தழுவக் கூடாத தருவைத் தழுவி வளர்ந்து விட்டோமோ என்ற சந்தேகம் அவளிடையே பரவியது. பதற வைத்தது. பலப்படவும் செய்தது. அப்பொழுது எதிர்காலம் இருட்டில் பதுங்கி நின்று எக்காளமிடுகிறதா? இதென்ன இந்த பெண் சுத்த அப்பாவியா? "காதல்" என்றவுடன் "போடுங்கள் போடுங்கள்" என்று அனுபவித்து திளைப்பதை விட்டு, இது அவளுக்கென்ன புரியாத புதிரா? சுத்தத் தப்பு. புரிந்த விபரம் தான்.

ஆகவே தான் கருத்தில் தெளிவில்லை. கண் கலங்கி நின்றாள் இவர்களுடைய அன்பு அ[illegible]றால் பெருமையால் அணி புரி[illegible]ம்பானை மை தான். [illegible]த்து, சிந்திக்க, தில் எப்பொ[illegible]திறன் இல்லை அவளுக்கு. பாசம், பா[illegible]லையில் இது ஒன்று தான்

நிலைக்கிறது. மறுக்க முடியாதது. காட்டாற்று வெள்ளம் போல் இவர்கள் பேசிய "காதல்" பெருமிதம் பேசுகிறது. மாண்புமிக்கதே. என்றாலும் அவளது காதலன் செய்துள்ள தவறு இருக்கிறதே அதை தட்டிக்கழித்துப்பேச இந்தசமுதாயத்தில் யார் இருக்கிறார்கள்?

பாண்டியன் அவளுடைய குலத்தவன் அல்ல. அவன் மறவர் வகுப்பைச் சேர்ந்தவன். அமிர்த வல்லியோ முதலியார் வகுப்பில் வந்தவள். வளர்க்கப்பட்டவள்.

முன்னணியில் நிற்கும் முன்னேற்றவாதிகளும் முதுகு காட்டியுள்ள இந்த முயற்சியில் நமது "மதியழகன்" தன் பொருட்டு சுற்றத்தையும் உற்றத்தையும் தியாகம் செய்வாரா? இடை விடாது யோசித்தும் கூட அந்த இளம் உள்ளத்திற்கு இதற்கு விடை காண இயலவில்லை.

"சிவந்த அதரங்களின் அசைவில் ஆனந்தம் புரிந்த காதலுக்காக — அந்த இதழ் ஓரத்தில் அரும்பிய புன்னகைக்காக — தங்கள் வாழ்க்கையை மண்ணாக்கிக் கொண்ட அப்பாவிகளின் வரலாற்று ஏடுகள் என்று-பல கற்பனைகளை-கதைகளைப் புனைந்துள்ளார்கள், எழுத்தாளர்கள். இவைகளை படிக்கிறபோதும் இத... இனிப்பில் ஏக்களிக்கிறது. ...உந்தி நிற்கிறது. ஆனால் ...சமுதாயத்தில் அப்படிச் ...றிந்தவரி ...த்தறிவில்

எட்வர்ட்

சிறந்த விவேகிகள் இந்த எதிர் நீச்சுக்கெல்லாம் வர மாட்டார்கள் போலும்!

அவளது சிந்தனை வேகத்தின் சுழல் இது!

அவளைப் பொறுத்தவரை தியாகம் செய்ய ஆவல்தான். ஆனால் "பாண்டியனுடைய" பண்பு அப்படி இருக்குமா?

குமுறு வென்று சிந்தனையைக் குடைந்தெடுக்கும் கேள்வியை அவளும் அவனிடம் கேட்டு விட்டாள்.

"காதலைப் போல கருத்திலும் துணிவு வேண்டும். இது காலம் கண்ட தீர்ப்பு அல்லவா?"

"ஆமாம்! அதற்காக.........?"

"ஏச்சையும் பேச்சையும் எதிர்ப்பையும் சமாளிக்க நாம் வேற்றூர் சென்று விட்டால்..................'

"சமுகத்தை விட்டு ஒதுங்குவதா? உலகை விட்டுப் போவதும் ஒன்று தானே! இந்த விவாதம் எல்லாம் இப்போது எதற்கு? பரீட்சை முடியட்டும் அமிர்தம்!"

காலம் பார்த்து நடப்பது காரிய சித்திக்கு உற்றது என்பதை பாண்டியன் போற்றுவதாகவே அவளுக்குப்பட்டது. இப்படி தேர்தல் பந்தித்திக் கொண்டதால் ஏற்பட்ட தெளிவு. தெளிவில் கிடைத்த இனிமை அந்த இனிமை வழி வாய்க்காலில், நாட்கள் மாதங்களை உருண்டன. தேர்வு வந்தது. நடந்தது.

— தமிழ்த்தென்றல்.

கோடை விடுமுறையின் குளுமையை இந்த இளம் காதலர்கள் கோலாகலத்துடன் அனுபவித்தனர். பகல் இரவு வெயில் என்றெல்லாம் அவர்கள் பார்க்கவில்லை. தோட்டம், துறவு, காடு, மேடு என்றும் கருத வில்லை. எல்லாம் எதுவும் இன்பமயம் அவர்களுக்கு. இடம் பொருள் தட்ப வெட்பம் இவைகளைத்தாண்டி பறப்பது தானே காதல்.

பரீட்சையின் முடிவு இருவருக்கும் வெற்றி தந்தது. பாண்டியனுக்கு மேலும் படிக்க மனமில்லை. குடும்பநிலையும் அப்படி இருந்தது. மேலும் இனியும் பள்ளிப் படிப்பின் பாரத்தைஏற்ற அவன் மூளை தயங்காதென அவனுக்குப் பட்டது. ஆகவே வேலை தேடும் படலத்தில் இறங்கினான். ஆனால் வேலை தேடுவதில் சிபார்சு தேடுவது தான் அடிப்படை என்பதை அனுபவம் அவனுக்கு அறிவித்தது. எப்படியோ சிபார்சும் சிக்கி வேலையும் கிடைத்தது "குமஸ்தா" என்ற பெயருடன்.

வேலைப் பாட்டிற்கு நடந்து வந்தாலும் மதுரையில் டிரெயினிங் ஸ்கூலில் தேர்ச்சி பெறுகின்ற அமிர்தவல்லியை அவன் அடிக்கொரு தரம் நினைக்காமலிருப்பதில்லை. நினைத்துக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? நினைவிற்கு நாதம் அளிக்கும் சுதிப்பெட்டி "கடிதம்" அல்லவா?

வந்தன. போயின. பற்பல. ஆனால் பாண்டியனுக்கொரு பெரிய குறை இருந்தான். எழுதுவதில் கூட இந்தப்பெண்ணுக்குள் சுதந்திரமா தானு? அப்படி அனுப்புகிற போதிலும் அந்த ஒன்றிரண்டு வரிகளை ஆயிரம் தடவைகள் படித்துப் படித்து நினைத்து நினைத்து சுகம் கண்டான்.

இதனிடையே பாண்டியனுடைய வயோதிகத் தாயும் இறந்து விட்டதால், அவனுடைய வாழ்வு ஹோட்டல் படிகளை எண்ணுவதில் வந்து நின்றது. அதுவும் உடம்பிற்கு சரிவர ஒத்துக் கொண்டதா என்றால் அதுவும் இல்லை. அது வந்து அவனை அல்லல் படுத்தி தொல்லை செய்வதாக இருந்தது.

இப்பொழுது தான் காதலுக்கு கடும் சோதனை ஏற்பட்டது. அமிர்த வல்லியோ டிரெயினிங் ஸ்கூலில் இன்னுமொரு ஆண்டல்லவா போக்க வேண்டும். அவனுடைய "நோஞ்சான்" உடம்போ ஹோட்டல் வசதியால் நோய் கொடியில் சிக்கி மட்டுமல்ல தெம்மாங்கும் இல்லாமலும் சேர்த்துப்பாடுகிறது. மறுபக்கமோ ஊத்தூரிலிருக்கும் அக்கா மகள் வள்ளிநாச்சியாரை அவனது வாழ்க்கைக்குத் துணை சேர்த்துவிட உறவினர் ஊரறிய பேசினர். வலியுறுத்தினர். பாடுபட்டனர்.

குளிர் காலத்துளைதல்க்காற்றில் உடல் நடுங்கி சோர்ந்து போன நோயாளியை நிகர்த்து, சிந்திக்க, செயலாற்றதிறன் இல்லை அவனுக்கு. ஆனால் இந்நிலையில் இது ஒன்றுதான்

— தமிழ்த்தென்றல்

மன அமைதியை தருவதாக இருந்தது. "சம்மர் வெக்கேசனுக்கு" அமிர்தவல்லி வரப் போகிறள் அல்லவா? ஆச்சு! இன்னும் மூன்று தினங்கள் தானே!

ஆனல் அமிர்தவல்லியோ விடுமுறைக்குத்தனது மாமன் வீட்டிற்கு மதராஸ் போவதாகவும் எழுதி விட்டாள்.

ஆவல் முறிகிற பொழுது ஆத்திரமும் அறிவுப்பஞ்சமும் ஏற்படுவது மனித வரலாற்றின் அற்புத உண்மை அல்லவா? இந்த பொல்லாத உணர்வுப்பொறியில் சிக்கித்தத்தளித்தான்.

வாலிபத்தின் தாக விடாய் தீர தவித்தவன் 'சடார்' என்று தடம் புரண்டு போனன். அக்காவின் அன்பு முகத்திற்கு ஆறுதல் செய்வது கடமை என்றான். உறவினர் கூறுவது உண்மை யெனக் கொண்டான். ஆக முடிவு என்னவா! வள்ளிநாச்சியாரை வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டான் ஒரே நாள் கூத்தில்.

பாண்டியனுடைய திருமண அழைப்பு அமிர்தவல்லிக்கும் கிடைத்தது. அவள் இதற்காகக் கொதித்தெழவில்லை குண்டடிபட்ட கூர்க்காவைப் போல். மிகமிகச்சுலபமாக ஏமாற்றப்படுவது பெண் இனம் என்பதை கண்டறிந்து கொண்டதாக அவளுக்கு முடிவு ஏற்பட்டது. வாழ்த்துமடலும் அனுப்பினாள், 'வாழ்ந்து நலம் பெறுங்கள்' என்று.

காலச் சுழலில் காட்சிகளும் மாதங்களும் கழன்றோடின. சாதாரண குமாஸ்தாவாகப் பஞ்சாயத்து போர்டு ஆபிசில் சேர்ந்த பாண்டியன் இப்பொழுது மானேசர் பதவிக்கு வந்து விட்டான். "கல்யாணம் செய்து கொண்ட பின் காதலிக்கிறோம்" என்ற விவேகானந்தரின் பொன் மொழி பாண்டியனுக்குத் தெரியுமோ தெரியாதோ வள்ளியுடன் படுக்கையில் தள்ளி இருந்து அமிர்தவல்லிக்காக எவ்வித தவறும் செய்ய வில்லை. ஆக குழந்தை உருவாகிறது. இந்நிலையில் தான் டிரெயினிங் முடிந்துக் கொண்ட அமிர்தவல்லி பஞ்சாயத்து போர்டு ஆசிரியையாக வேலைக்கு வந்தாள்.

பிரிவிற்குப்பின் கூடுவதாக பாண்டியனுக்குப் பட்டது. சபலப் புத்திக்கு அரசர்கள் இந்த ஆண்கள் தானே! அமிர்தவல்லியை வலைய வலைய சுற்ற ஆரம்பித்தான். வாழ்வே வாடி விட்டதாகப்பட்டது அவனுக்கு. எண்ணங்கள் குமிழி யிட்டன. முடிவு பக்கத்தில் கிடந்து தத்தளித்தான்.

இரண்டெழுத்துக்கள் மட்டும் அல்ல, எல்லா எழுத்துக்களையும் கூட்டிச் சேர்த்து வாசிக்க வள்ளிக்குத் தெரியும். தனது கணவன் வாலிபத்தில் அமிர்தவல்லி மீது கொண்டிருந்த ஆசையை பட்டும் படாமல் அன்றே கேட்டிருந்த ஞாபகம் அவளுக்கிருந்தது. டிரங்க் பெட்டியில் கிடைத்த கடிதங்களிலிருந்து அத்தக்கதையின் அடியும் முடியும்

— தமிழ்த்தென்றல்

தெளிவாகத் தெரிந்து விட்டது அவளுக்கு. ஆகக்கூடி இப்பொழுது வாத்தியாரம்மாவை தனது கணவன் வளைத்து திரிவதற்கு இனி காரணம் கண்டு பிடிக்க அவளுக்கு என்ன கஷ்டமிருக்கின்றது?

சர்வ சதா சோர்ந்து கிடக்கும் தனது கணவனைப்பார்க்க அவளுக்கு பரிதாபமாக இருந்தது. தான் அன்பாகப் போற்றப்படுகிறவர் இன்பம் பெறச்செய்வதும் அதைக் கண்டு உவகை பெறுவதும் கடமை வழியில் உள்ளது தானே? இது பெரிய பெரிய மேதைகளால் கூடத் தீர்க்கப் படாத சிக்கலாக இருக்கிற பொழுது வள்ளியின் அறிவு இதற்கு வழி தருமா?

ஆனல் வாத்தியாரம்மா வீட்டிற்கு வந்துபோவதை கணவனுடன் பேசுவதை அவள் தடுக்கவில்லை. கர்ப்பிணியான தனக்கு அவள் கூட மாட எவ்வளவு ஒத்தாசையாக உதவி செய்கிறள். ஆடி ஓடி எத்தனை அக்கரையாய்ப் பாடுபடுகிறள்.

வள்ளிக்கு அகால பிரசவமாகுமென்று யாரும் எதிர் பார்க்கவில்லை தான். அவளும் படுத்த படுக்கையாய்க்கிடந்தாள். பாண்டியன் டாக்டருக்கும் மருந்துக்கும் மாறி மாறி அலைந்தான். ஆனல் சிகிச்சை முறைகளைச்சிறப்புடன் செய்து வள்ளியை நாளுக்கு நாள் தேற்றி திறன் பெறச் செய்தது அமிர்தவல்லி தான் என்றால் அது மிகையாகாது.

பெரும்பாலும் அமிர்தவல்லி பாண்டியன் வீட்டோடு கிடந்தால் இது ஊருக்குத்தெரியாமலா போகும்? ஓசைப்படாமல் ஒலி பெருக்கி இல்லாமல் காதுக்கு காது பரவி கலகலத்தது. வதந்திகள் அல்ல உண்மை நிகழ்ச்சிகள் உரையாடல்மூலம் விளக்கம் பெற்றன.

ஆனல் அவர்களோ ஏரிக்கரையில் தினமும் கூடிக் கூடி காதலைப் பேணிக் கருத்தில் இனிமை கொண்டனர்.

ஏரிக் கரையில் கூடிக் கூடி......................

— தமிழ்த்தென்றல்

முத்துச்சாமி முதலியார் பொருள் வலிமையில் சிறந்தவரல்லராயினும் சொல் திறன் மிக்கவர். தனது வகுப்பின் கௌரவத்தையே பாண்டியன் களங்கப்படுத்தி விட்டானே என்று கருதினார். கடுகடுத்தார். உறவினர் ஒன்றாகக் கூடவில்லை. ஒருவருக்கொருவர் இதே பேச்சு. இதே சிந்தனை. அமிர்தவல்லிக்கு வயிற்றில்............இப்படியும் பேச்சு வந்தது. வகுப்பு வெறி வரிந்து கட்டி விட்டது. இனி அதன் கோரத்தை யார் தடுக்க முடியும்? அன்றிரவு வாய்க்கால் வெளியில் பாண்டியன் தாக்கப் பட்டான். கூரிய பிச்சுவா அவன் வாழ்வை குறுக்கி முடித்து வைத்தது. ஊர் அல்லோலகலப்பட்டது. போலீசு வந்தது. விசாரணை நடந்து யார் யாரையோ ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர். இதைப்பற்றி எல்லாம் வள்ளிநாச்சியாருக்கு என்னகவலை? இல்லை அமிர்தவல்லிக்குத் தான் என்ன சிந்தனை?

வள்ளிநாச்சியாருக்கு அடைக்கலம் ஒரு துளி விஷம். அமிர்தவல்லிக்கோ ஒரு முழம்..............

மறவர் குல மயான வெளியில் வள்ளிக்கும் பாண்டியனுக்கும் கல்லறைகள் அடுத்து அடுத்து.

அமிர்தவல்லிக்கோ உயர் சாதிக்கான பகுதியில் இளைப்பாற இடம் அளித்தனர்.

இன்ப வாழ்வில் இணைந்திருந்தவர்களைப் பிரிக்க கோரம் செய்த வகுப்பு வெறி அவர்களை மயானத்திலும் பிரித்து வைத்துப் பெருமை பேசியது.



— தமிழ்த்தென்றல்



விருதை ந. இராமசாமி

குமார்

கருமை பாய்ந்த "வெல்வெட்டில்" வீசி யெறியப்பட்ட வைரக் கற்கள்!

கடுகிப் பாயும் மின்னலினின்றும் சிதறி விழுந்த ஒளி முத்துக்கள்!

கரு கருத்த வானின் அணையா சுடர்களென அழகு தந்த ரத்தினங்கள்!

காலம் காலமாக மலர்ந்து நிற்கும் புஷ்பராக புகழ் மணிகள்!

களிப்பின் நீர்த்துளிகளென நவரத்தின பொலிவில் தளிர்ந் கொட்டின, அந்த இருண்டு கிடந்த இரவை இனிமையாக்க.

அழகின் அழியா

அணி முத்துக்கள்!

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நட்சத்திரம் உண்டு என்பார்களே! அப்போ என்னுடைய நட்சத்திரம் எதுவாக இருக்கும்?

அதோ! மகிழ மரங்களின் மேல் 'மெர்க்குரி' வெளிச்சம் போடுகிறதே அதுவா?

அதற்கு மேலே, இன்னும் கொஞ்சம் மேலே, பளபளத்து பிரகாசம் கொட்டுகிறதே அதுவா?

இல்லை, "இந்த இருளைக் கிள்ளி எடுத்தெறிவதே என் வேலை" என்று வானத்தே வாள் வீசி மின்னுகிறதே அதுவா?

சற்றுச் சாய்வில் நீலமும் சிவப்பும் பாய்ந்தோடும் ஒளிப்புள்ளியாக உவகை தட்டுகிறதே அதுவா?

காண்போர் கண்கள் கூச — கருத்தில் இன்ப அலை மோத — பல்வேறு வண்ணங்களை வீசிடும் வைரமணிக்கும்பல்! நின்ற நிலையில்,

நிற்காது நடனமாடும் ஆயிரமாயிரம் ஒளி உருவங்கள்! அழகின் அழியா அணி முத்துக்கள்!

அதுதான் நடக்கவில்லையே!

துழாவினேன். தேடினேன். காண்பது அனைத்தும் என்னுடையதாகவே பட்டன. பிரித்தெண்ண முடியாத பரப்பு! பெயர்த்தெடுக்கக் கூடாத அமைப்பு!

கண்போரனைவருக்கும் சொந்தமாகிவிடும் வானத்துக் கருமுகிலும், அதன் வழி கொட்டும் பிரவாகமும், இரவின் ஒளிச் சிதறல்களும் யாவருக்கும் பொதுவுடைமை தானே!

காண இனிமை தந்த காட்சிப் பொருள்களை எல்லாம் என்னுடையதாக இருக்க வேண்டுமென்றே விரும்பினேன். ஏங்கினேன். மற்றொருவருக்கு அது உரிமை என்பதைக் கூட நான் நினைப்பதில்லை. சுற்றிச் சுற்றித் திரிந்தேன். அதில் கூட சுகம் கண்டேன். அலுத்துச் சோர்வதை ஆனந்தமாக ஏற்றுக்கொண்டேன்.

வாலிபத்தின் முறுக்கும் முட்டாள்தனமும் இப்படித் தான் இருக்கும் போலும்!

கன்னியர் வேட்டைக்காக எனது கல்லூரி வாழ்விலே நான் எடுத்தாடிய காவடி ஆட்டம்! ஒரு நாள் புரோக்கிரமை ஒரு பெரிய நாவலாக எழுதித் தள்ளலாம். இந்த நேரங்களில் "மேக்கப்" கலைக்காக நான் செலவு செய்த பொன்னான காலத்தை கொஞ்சம் புத்தகங்களைப் புரட்டுவதில் தள்ளி இருந்தால், நான் கண்டிப்பாக இன்று "கிராச்வெட்" தான். ஆனால் அது தான் நடக்கவில்லையே!

பவானியின் பாதை!

இண்டரோடு கல்லூரிக் கதை முடிந்து மிலிடெரிக்கு வந்தேன். தேர்ச்சி முடிந்து "வி.சி.ஓ." ஆக பெங்களூர் டிரெயினிங் சென்டரில் வேலை கிடைத்தது.

தொட்டில் பழக்கமென்று உபமானமாக கூறுகிறார்களே! அதெல்லாம் சுத்தமாகத் தப்பு. அம்மா அப்பா மீது அலை மோதி நிற்கும் அந்தப் பிள்ளைப் பருவத்துப் பரிவும் பாசமும் பின்னிட்டுப் பழக்கப்பட்டு நின்று விடுகிறதா?

பள்ளிப் படிப்பில்—அது தான் —அறிவில் சத்து ஏறுகிற பொழுது பழக்கப்பட்டுப் போகிற வழக்கங்களுக்கு மனிதன் முழு முழுக்க அடிமை தான்! இது தான் நடந்து தீருகிறது ஒவ்வொருவர் வாழ்விலும்!

ஆக பழைய வாடை இங்கும் என்னை விட்டு விடவில்லை. எங்கள் "பாரக்ஸ்" லைன் வழியாக 'ரிக்ரியேஷன் கிளப்பிற்கு'ப்போக நேர் பாதை இருந்தாலும் உயர்ந்த அதிகாரிகளின் 'பேமிலி குவார்ட்டர்ஸ்' பக்கமாகவே................

— தமிழ்த்தென்றல்

Telegrams: COOPFIRE. Telephone: 4361.

The Co-operative Fire General Insurance Society Ltd.,

MADRAS-1.

President: Sri. T. M. CHINNAYYA PILLAI M. A., B. L.

Transacts

Fire Insurance of all description and Motor Vehicles Insurance.

For Particulars—Apply to:—

P. SHUNMUGAM, B. A.,

POST BOX NO. 1249 **MADRAS-1**

READY FOR SALE! READY FOR SALE!

CENT PERCENT SWADESHI

FIRST

&

BEST INDIAN MAKE

"AGAR-AGAR"

FLAKES

SUITABLE FOR BACTERIOLOGICAL PURPOSES.

Please apply to:-

RAJAN INDUSTRIAL WORKS,

Manufacturers of Agar - Agar,

VIRUDHUNAGAR. (S. INDIA)

— தமிழ்த்தென்றல்

ஆமாம் அது தான் மேசரின் மகள் 'பவானி' இப்பாதை வழியாகத் தானே 'லேடிஸ் கிளப்பிற்கு' போகிறுள்.

கசாப்புக் கடையில் கணக்கு வேலை...................!

அவளும் போகிற போக்கில் தலைகுனிந்தபடியே சென்றிருந்தால் இப்படியெல்லாம் சங்கடங்கள் வருமா? இணையில்லாத எங்கள் இதய பிரேம பாசத்தை எதிர்க்க எத்தனை பேர்கள் தலைப்பட்டார்கள் தெரியுமா? அவளும் என்னை மாறி மாறி பார்த்து மடையனுக்கி விடவில்லை. "அலெக்சாண்டர் டூமாஸின்" கற்பனைக் காதலன் 'ஸ்டூவர்டாக' சுந்தரம் பாடச் செய்தாள்.

"பாரக்ஸ்" பாதை முகட்டில் நிற்கிறதே அந்த 'லில்லிரோஸ்' பூச்செடித் தொட்டி தான் எங்களுக்கு "போஸ்டாபிஸ்". கடிதங்கள் கை மாற ஆசை முற்றி அன்பு, பாசம், பிரேமை இப்படியே தாவித்தாவி காதல் குதித்தது — சிரித்தது.

"ஏன் பவானி! சிவில் லைப்பில் தான் நீங்கள் எதிலும் நுழைந்து விடுகிறீர்களென்றால் மிலிடெரியிலும் உங்கள் கையில் தான் மேசர்..........ஜெனரல்,.........."

"வாழ்வு சிறக்க பொருள் வேண்டும். கசாப்புக் கடையில் கணக்கு வேலையென்றால் கூட எங்கள் அப்பா..............."மனு"வழி வகுத்த வாழ்வின் மர்மம் இதுதானே!."

"ஆறு பாரு! பவானி! எங்க தென்காட்டில் கொஞ்சம் அப்படி இப்படினுக் கூட கழுத்தைத் திருகி..........."

"வீரம்! அதுவும் மனிதப் பண்பு தானே"

காதலித்து மணப்பது களிவு மிக்கதா?

இப்படி எங்கள் பேச்சு வாழ்க்கையைப் பற்றி, யுத்தத்தைப்பற்றி, அரசியலைப்பற்றி எல்லாம் பரவி நிற்கும்.

கால முன்னேற்றத்தின் கருமணியாய்ப் பேசுவாள். அவளது அழகில் சொக்கி மயங்கினேன் நான். ஆனால் அவளுடைய அறி

— தமிழ்த்தென்றல்

வின் ஆழத்தைக் காணமுடியாமல் வியந்தேன். அவளுடன் பேசுவது அறிவின் 'ரேஸ்' பந்தயமாக எனக்குப் பட்டது. உன்னிப்பாகப் பேசாவிட்டால், உதறல் எடுக்கும் வண்ணம் மடக்கி விடுவாள் பேச்சில்.

கூடிப் பேசினோம். திட்டம் வகுத்தபடி 'லீவு' எடுத்தேன். எங்கள் "ஹனிமூன்" மைசூரில் மகிமை பாடியது.

அழைப்பிதழ் கிடைத்து மேசர் அலறிப் புடைத்து ஓடோடி வரவில்லை. மிலிடெரி வானில்.............. அவரது கடு கடுப்புப் பேச்சுக்கு பவானி கடுகளவும் பதறவில்லை. **"காதலித்து மணப்பது காலத்தின் பண்பு. இதை வந்து "கடுக்காய்"** கொடுத்தேன் என்று பேசுவதில் பொருளில்லை" என்றாள். இதற்கு மேல்.........ஒத்துப் போவது—உலகோடு ஒட்டி நடப்பது தானே அவர்களது லயம்...........

கலந்து உறவாடினர். விருந்து வைத்தார். வேடிக்கை தந்தார்.

யுத்தம் முடிந்து "டிஸ்சார்ஜ்" படலம் வந்த பொழுது எனக்காக போராடாமல் இருப்பாரா மாமா? 'டிஸ்சார்ஜ்' கிடைத்து சென்னை வந்தேன். இங்கு வந்ததும் வராததுமாய் எனக்கு வயநாடு மலைப் பகுதிக்கு "பாரஸ்ட் ரேஞ்சர்" வேலை கிடைத்தது.

காதலித்து மணப்பது களிவு மிக்கது என்றே கருதினேன். பெரு மிதம் கொண்டேன். ஆனால்.........

— தமிழ்த்தென்றல்

பவானி

காதலித்து மணப்பது களிவு மிக்கது என்றே கருதினேன். பெரு மிதம் கொண்டேன். ஆனால்...........

மாலைப் பொழுதில் சோலையின் பக்கம் செல்கிற போது, குளுமையில் "தென்றல்" கூத்தடித்தால் வேண்டாமென வெறுப்போர் உண்டா? பசும் பாலுக்குத் தேவை புளிப்பல்ல! இனிப்பு! வாழ்விற்கு அவசியம் காதல்! அது என் வாழ்வில் சம்பவிக்கிற தென்றால் 'சீ' என்று

உதறித் தள்ள நான் என்ன உள்ளமும் உணர்ச்சியும் இல்லாதவளா?

கண்ணோட்டத்திலே கலந்து — பேச்சிலே பெருகி — செய்கையால் சிறந்து — அந்தப் பொல்லாத காதல் இருக்கிறதே அது, என்னையும் அவரையும் இணைத்து கணவன் மனைவியாக்கி வைத்தது.

காதல் முற்றுப் பெருமல் — முறிந்து போகுமானால் சாவே வரட்டுமே, அதுவே இனிக்கும். இப்படி கொஞ்ச காலத்திற்கு முன் அறிவு மேதை ஒன்று எழுந்து உலகில் அலறி விட்டுப் போனதாக ஞாபகம்.

காதல் வெற்றி பெற்று மணம் நிகழ்ந்து விடுமானால், எதிர் பார்த்து ஏங்கியபடி இன்பம் பிறக்க வேண்டும். அப்படிப் பிறந்தால் மட்டும் போதுமா? அதுவும் காலம் முழுக்க நிலைக்க வேண்டும். இது தானே நியாயம். அப்படி இல்லை என்றால் ....

இது ஏனோ? இதற்காகவா உருட்டும் பார்வை பார்த்து - திருட்டுத்தனமாகச் சந்தித்து — குருட்டு சமூகத்தை எதிர்த்து — போராடிப் போராடி திருமணம் செய்துகொண்டோம்? காதல் வளர வளர அதன் இனிமைகுறைவதாகக் காதலர்களுக்குப் படுகிறது என்று கூறின பெரியவர் அனுபவித்துத் தான் சொல்லியிருப்பாரோ?

ஓடி வந்தவள் தானே!

எவரேனும் காதல் மணம் களிப்புத் தரும் என்று கூறுவரேயானால், இப்போது அதைக் கண்டித்தே பேசுவேன் நான். **மணமானபின் காதல் கண்டிப்பாகக் கசக்கும்!** இது எனது அனுபவ முடிவு.

“அட பைத்தியக்காரி! காதல் மணத்தை ‘கஞ்சா, அபின்’ என்று கடு கடுப்பாய்க் காய்கிறாயே!” என்று சில பலர் கூறலாம். ஆனால் உண்மையோ.........? காதலனை கணவனாக்கி வாழ்பவர்களைக் கேட்டாலல்லவா தெரியும்?

காதலன் பணக்காரனாகவோ காதலி ஏழையாகவோ, இல்லைமாறி மாறியோ இருந்து மணம் புரிந்து கொண்டால் பொருளாதார அடிப்படையிலே அபிப்பிராய பேதம். இருவரும் சரி சமம் என்றால் சந்தேகச் சூறாவளி! மூக்கு உள்ள மட்டும் 'சளி' இருந்து கொண்டு தானே இருக்கும்! காதலித்து மணந்தவள் மேலும் சுலபமாக காதலிப்பாள், நடப்பாள் என்று இந்த நெடுமதியாளர்கள் எவ்வளவு சுலபமாக நினைத்து விடுகிறார்கள்! “அவனோடு ஓடி வந்தவள் தானே” என்று எவ்வளவு இலேசுப்படச் சொல்லி விடுகின்றனர்!

காதலைப் பற்றி இந்த சமூகம் கொடுத்திருக்கிற இந்த அத்தாட்சியை உடைத் தெறிய...................?

என்னைப் பொறுத்தவரை நாங்கள் இருவரும் பொருளாதார சமத்துவம் உடையவர்களே! வெறுங் கையுடன் அவரோடு காதல் வாழ்வு நடத்த நான் வரவில்லை.

— தமிழ்த்தென்றல்

நகை நட்டு — ரூபாய் ஆயிரத்துக்கு செக் — சீர் மிக்க சீதனங்கள் இப்படி இத்தனையும் கொண்டு வந்தேன். இவை மட்டுமென்ன? பட்டத்து ராணி மணம் முடித்து புக்ககம் போகும் போது ஒரு தோழியையும் அவளுக்கு அனுப்பிவைப்பார்களே, அதுபோல எனக்கொரு வேலைக்காரியை அனுப்பித்தந்தார் அப்பா. சகல சம்பத்துக்களுடன் வந்துசேர்ந்தேன், பெரு வாழ்வு நடத்தப் போகிறோமென்ற பெருமிதத்தோடு. ஆனால் நிகழும் நிகழ்ச்சிகளோ............?

பொதுவாக ஆண்களே சந்தேகப் பிராணிகள் தானோ? எழுந்தால் — நடந்தால் — பேசினால் — இங்கும் அங்கும் பார்த்தால் — ஏன் தும்மினால் கூட சந்தேகப்பட்டால்.......? **“சந்தேகத்தின் முடிவு சாவின் வாசல் வரை”** என்று கூறுவார்களே! ஏன் நானும் அவரைப் பற்றி இப்படி சந்தேகப்பட்டால்........கதை என்னவாகும்? ஓ! இதற்குத் தான் ஆண்களுக்கு கட்டணமில்லாமல் தாராள லைசென்ஸ் வழங்கப்பட்டு வருகிறதோ காலம் காலமாக! இதை எதிர்க்க யாரால் ஆகும் இந்த சமூகத்தில்?

காதல் நில் ஸ்டாக் தானா!

எங்களுக்கு மணமான புதிதில் நாங்கள் இருவரும் எங்கு போனாலும் ஒன்றாகவே போவோம். வருவோம். நாடகம் — சினிமா — “பிக்னிக்” — வேட்டையாடுதல் இப்படி எல்லாக் களியாட்டங்களிலும் இன்பம் நுகர்ந்தோம். ஆனால் எந்த

— தமிழ்த்தென்றல்

‘மகராசி’ கண் வைத்தாளோ - இல்லை எந்த ‘மகாத்மா’ மனதில் நினைத்தாரோ — எல்லாம் ஓரிரு மாதங்களுக்குள்...................

இப்போது காதல் பூரணமாகப் போய் விட்டதா? கலியாணத்துக்குப் பின்னர் காதல் ‘நில் ஸ்டாக்’ தானா? காரணம் என்ன? புரியாத புதிரா? தெரியாத விடையா?

அகல்யா அல்லவே நான்!

ஒரு வேளை எங்கள் வீட்டிற்கு கண்ணன் தவறாது வருகிறாரே! அதனால் வளர்ந்து வரும் அனர்த்தமா?

என் கணவருக்கு நண்பராம். அவரே அழைத்து வந்தார். அறிமுகம் செய்தார். அருஞ்சுவை அளித்தார். அன்போடு பழக வைத்தார்.

சும்மாகிடக்கிற சோம்பேறிக்கு சோறும் போட்டு படுக்கப் பஞ்சணையும் கொடுத்தால் குளிர்காய குட்டி கிடைக்குமா என அவன் கருதத் தானே செய்வான்! அப்படி என்றால் கண்ணன் வந்து...........?

களங்கமின்றி பழகுகிற பண்பில் — சௌசன்யமாக உறவாடுமிடத்தில் — சந்தேகமா? அதுவும் காதலித்து கடிமணம் புரிந்து — சுற்றம் — சூழ்நிலை — சுகம் — சொத்து — அத்தனையும் துறந்து இவரே துணை யென்று கிடக்கும் நானா தடம் தப்பி நடப்பேன்?

நான் — அவர் — கண்ணன் — வேலைக்காரி லட்சுமி — எல்லோ

ருமாக தினமும் 'கேரம்' ஆடுவோர். சில சமயங்களில் லட்சுமியின் வடக்கத்திப் பாடல்களின் இனிமை வெளியிலே மெய் மறந்து கிடப்போம். இந் நேரங்களில் விதர்ப்ப விளையாட்டுக்கு வேளை ஏது? இது கூடவா இந்த மனிதருக்கு அர்த்தமாகவில்லை!

பிரமனுக்கும் — பரம சிவனுக்கும் ஓரே மாதிரி தலைகள் இருந்ததால் மனம் மருண்டு கட்டி அணைத்தாளாம் பார்வதி. அப்படிக் கூட இல்லையே அவரும் — கண்ணனும். என் ஆசை அத்தானைப் போல கண்ணன் மாறு வேடம் பூண்டு என்னிடம் மருவிட வந்தாலும், மானம் இழந்து கணவனின் கடுங் கோபத்திற்கு ஆளாகி கல்லான அகல்யா அல்லவே நான்!

தேறுதல் வழி கற்கண்டு மொழி

பின்னர் என் இக்க புயல்! (மா-ம்.)! புயலுக்குத் தெரியுமா தன்னால் விளையும் பலாபலன்? வீழ்ந்து சாயும் மரங்கள்—இடிந்து சரியும் குடிசைகள் — சிக்கி மாயும் மனிதர்கள் — இவற்றைப்பற்றியெல்லாம் அது கவலைப்படுவது தான் இல்லையே!

அவரது உள்ளத்தில் குமுறும் புயல் வெளிக் கிளம்பி வீச ஆரம்பித்தால்.........ஐயோ! நினைக்கவே முடியாத கொடூரம்! அவர் மறைமுகமாகத்தானே ஏதேதோ கூறுகின்றார். நானும் மறைமுகமாக நீதி — நேர்மை நியாயங்களைக் கூறினேன்.

அந்தப் பாவி கண்ணனும் வராமல் இருக்கக் கூடாதா? ஏன் வந்தால் தான் என்ன? தன் கண்ணை நம்பாதவனுக்கு கண்மணியும் — காட்சியும் எதற்கு? உலகம் மாயை — மண்ணுலகு நிலையாம் என்று உருப்படாத உபதேசம் செய்யும் ஞானிக்கு வருமானம் எதற்கு? "பஜ கோவிந்தம்" பாடிக் கொண்டு இந்தக் கூட்டம் தானே கடவுளைக் காப்பாற்ற கிளம்பி விடுகிறது! பார்க்கப் போனால் எல்லாம் தன் வயிற்றுப் பாட்டிற்குத் தான்!

சோர்ந்து கிடந்த அந்த நேரத்திலும் எனக்கு தேறுதல் வழி லட்சுமியின் கற்கண்டு மொழி.

அவளது பால் வழியும் முகத்தில் — பச்சிளம் பேச்சில்...........

குமார்

அவளது பால் வழியும் முகத்தில் — பச்சிளம் பேச்சில்..........அவையெல்லாம் கனவில் கண்ட காட்சியாக அல்லவா போய் விட்டது. இன்றோ வெறுப்பும் வேதனையும் வீறிட்டு வருகிறது அவளைக் காணும்போதும்.

மரக்கிளையில் பழுத்துத் தொங்கிய நாவற் பழத்தைக் கீழே விழுந்து புழுதியிற் பட்டுக் கெட்டு விடாமல் மடியேந்தி ஏற்றுக் கொண்டேன் மனதார. இவ் வாழ்வே 'புதையல்' என பெருமை கொண்டோம். சிற்றின்பச் சுகத்தில் பேரின்பத் தேனருந்தித் திளைத்தோம். வாழ்க்கை உன்னதமாய் மலர்ந்தது, வெண்ணி

— தமிழ்த்தென்றல்

லா விரிந்த வானில் விளையாடிப் புரண்டு விந்தை தருவது போல.

எதிர்பார்ப்பதும் ஏமாறுவதும் இரட்டைக் குழந்தைகளா?

பெண்ணடிமை ஒழிய வேண்டும் — சம உரிமை கொடுக்கவேண்டும் — பரம்பரை பரம்பரையாக வீட்டில் பூச்சிகளென வீழ்ந்து கிடக்கும் மாதருக்கு விடுதலை வழங்க வேண்டும் — என்று முழங்கி இருக்கிறேன் முன்பு. ஆனால் இன்றோ வனிதையருக்கு விடுதலை தந்தால் — உரிமை ஈந்தால் எத்துணை பயங்கரத்தில் விபரீதங்கள் விளையும் என்பதைக் கண் கூடாகக் காணுகின்றேன். 'சோஷியலாக'ப் பழக விட்டுப் பார்த்தால் அப்புறம் தெரியும் அவர்களுக்கு உரிமை கொடுத்ததின் மகத்துவம்.

இல்லறத்தில் பாதியளவு பாத்தியதைப் பெற்றாள் பவானி. சமபலங் கொண்ட குடும்பமே அமைத்தோம். ஏனைய ஆடவரைப் போல அடக்கு முறை விதிக்கவில்லை நான். மூக்கணங்கயிறு மாட்டி — சாட்டையால் வாட்டி சம்சாரம் நடத்தவில்லை. எண்ண — பேச — எழுத — எங்கள் குடும்ப அரசியல் சட்டத்தில் உரிமை தரப்பட்டிருந்தது. அதன் பலனோ? இன்று பேசவோ—எழுதவோ இயலாத வேதனை சம்பவம். — வெட்கம் கெட்ட விபரீதம்.

இணையும் இரண்டு உள்ளங்களின் சேர்க்கையிலே பிறக்கும் இனிய கீதமே "காதல்" எனப் போற்றினேன். என்னை வாழ்விக்க

— தமிழ்த்தென்றல்

வந்த வள்ளி - வேதனையை விலக்கும் வடிவழகி - மனக்குறையைப் போக்கும் மாதரசி – குடும்ப விளக்கு —குலமாமணி—குணக்குன்று என்றெல்லாம் பாராட்டினேன்.

எதிர்பார்ப்பதும் ஏமாறுவதும் இரட்டைக் குழந்தைகள் தானு?

நீண்ட அமைதியில் நித்திரையா?

நானும் சூசகமாகக் கண்டித்து விட்டேன். ஆனால் அவளோ பார்க்கும் பார்வையில் — பசப்பும் பேச்சில் — பணிவிடை புரிவில்—என்னைச் சரிக்கட்ட அல்லவா பார்க்கிறாள். கண்ணனை வீட்டிற்கு வராமல் தடுத்தேன். ஆனால் இப்படிப்பட்ட கயவர்களுக்கு இவளின் துணை தானே அமெரிக்க "டாலர்" மாதிரி உதவி செய்கிறது.

"வாட்ச் ஹவுஸ்" பக்கத்தின் வடபுறமாக அவன் நுழைவதைத் தான் கண் கொண்டு பார்த்து விட்டேனே! இனி தாமதிக்க என்ன இருக்கிறது? சுட்டுத் தள்ள வேண்டியது தான் துரோகியை! அதுவும் அவனது காதலி—பவானியின் பார்வையின் முன்பே இது நடந்து தீர வேண்டும். ஐயோ! அப்போ அன்பு அலைபாய நான் போற்றிய காதல் கரை புரண்ட வெள்ளத்தில் களிமண் கரையும் கோரம் போலதானு? ஆமாம் இனி இதற்காக ஒப்பாரி வைத்துப் பயன்? அடுத்த "ஷூட்டிங்" அவனுக்குத் தான். மூன்றாவது எனது இதயத்திற்கு. பிறகு நீண்ட அமைதியில் நான் நித்திரை பெறு

வதை யார் தடுக்க முடியும்? ஒழி யட்டும் காதல்! தொலையட்டும் பாசம்! நொறுங்கட்டும் பிரேமை!

அத்தானின் "பை ஆர்டர்!"

"பவானி இன்று........."

"என்ன அத்தான்!........"

"நம் பங்களாவில் இரவு நேரத்தில் நுழைந்து அட்டகாசம் பண்ணும் 'மிளா' வை வேட்டையாடப் போகின்றேன்."

"இது உங்க கடமை. இத்தனை நாள் இல்லாமல் இன்று மட்டும் என்னிடம் இதை..........."

"சொல்வதில் அர்த்தமிருக்கிறது பவானி! அது சாதாரண 'மிளா' அல்ல. வெறி கொண்டது இன்றைக்கு எனது குறியிலிருந்து தப்பவே............"

"முடியாது அத்தான்! இதை நீங்களா சொல்ல வேண்டும்? பட்டாளத்துக்காரர்! பாரஸ்ட் ரேஞ்சர்! பார்வைக் குறி எப்படிப் பழுதாகும்? பெங்களூரில் நீங்கள் அந்த காட்டுப் பன்றியை............."

"அது பகல் வேளை "ஷூட்டிங்." இரவு ஷூட்டிங்கில் எனது "எய்ம்!" எப்படி இருக்கிறது என்பதை நீ பார்க்க வேண்டாமா?"

"ஷூட்டிங் என்று எனக்குத் தெரியாதா? கண்ணீர் விடும் காட்சி யென்றால் எனக்குப் பிடிக்கவே இல்லை, அத்தான்!"

"இல்லை நீ வந்து தான் ஆக வேண்டும்."

"பை ஆர்டர்" என்று அத்தான் ஆணையிட்ட பின் நான் அலட்சியம் செய்வேனா?"

பட்டாளத்துப் பார்வைக்குறி!

கட்டளை பிறப்பித்த பிறகு தானே வரச் சம்மதித்தாள். வர வில்லையாம். ஆமாம் எப்படி வர முடியும்? கண்ணனின் திர விளையாடலில் கலந்து கொள்ள பங்களா வில் தயாராக இருக்க வேண்டாமா?

நடு நிசி, மங்கிய நிலவொளி. காரணம் மப்பு மந்தாரமான நிலையே. அதோ!...துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தேன். குறி வைத்தேன். இனி குதிரையைத் தட்ட வேண்டியது தான் மீதம்.

படபடமாக பதுங்கிப் பதுங்கி... ......"அதோ! பாரு பவானி!......."

"சுவாமி! அது மிளா?........... அங்கு பாருங்கள்...........மற்றொரு நிழல் நெருங்குகிறதே........."

"போடி சண்டாளி!........அது உன் ஆசைச் சந்தேகம் "சடார்" என குதிரையைத் தட்டியது

"டுமீல்"..........

வீறிட்டு ஓடினேன். பின் தொடர்ந்தேன்.

பட்டாளத்துக்காரர்!......பாரஸ்ட் ரேஞ்சர்!.........பார்வைக் குறி எப்படி பழுதாகும்?

— தமிழ்த்தென்றல்

நான்

"பட்டாளத்துக்காரர்! பாரஸ்ட் ரேஞ்சர்! பார்வைக் குறி எப்படிப் பழுதாகும்? என்றே குமார் நினைத்தான்.

"துரோகி! என்னை துடிதுடிப் போடுகிறான். எங்கதான் போயிடுவா ....?"

மங்கிய நிலவொளியில் நிழலாட்டம். நடு நடுங்கிய கரங்களில் துப்பாக்கியை அழுத்தி......குதிரை தாவியது. அதே பயங்கர ஒலி!

இனி தனக்கு குறி வைக்க வேண்டும். அதற்குள் அந்த துரோகிகளைப் பார்க்க ஒரு சபலம். இதென்ன ஆச்சரியம்! இடைவெளியிலிருந்து மரங்களின் நிழலினின்று இப்பொழுது தான் ஓடுகிறதே அது ....? பவானியா? அப்போ இப்போ விழுந்தது...........?

ரேஞ்சர் சுட்டதும் சரிதான். குறியும் சரிதான். ஆனால் ஆள் மாறாட்டம் அற்புதத்தை நடத்தி விட்டதே!

"நீங்க செய்த சண்டாளத் தனம்........" பவானி கதறினாள். குருதி வெள்ளத்தில் வேலைக்கார லட்சுமியும் தோழன் கண்ணனும்...

— தமிழ்த்தென்றல்

கற்சிலையாய் நின்ற ரேஞ்சரின் கண்கள் படபடத்து, அருவி பாய்ந்தது.

மேசரின் மருமகன் — பட்டாளத்துக்காரர்—பாரஸ்ட் ரேஞ்சர் என்றாலும் குற்றம் குற்றம் தானே. அலிப்பூர் சென்ட்ரல் ஜெயில் தூக்கு மேடையின் சுருக்குக் கயறு சுருங்கியது. ரேஞ்சரின் கதையும் முடிந்தது. ஆனால் எப்பாவமும் அறியாத பவானியோ "கீழ்ப்பாக்கம்" ஸ்பெஷல் வார்டில் இருந்தும் இல்லாதவளாய்—வாழ்ந்தும் வாழாதவளாய் — காலம் தள்ளுகிறாள்.

ஷேக்ஸ்பியர் கற்பனையில் உருவகம் கொண்ட ஆண்களைப் பற்றி முடிவு கட்டியது எப்படி?

"மாக்பெத்தின்" அழிவுக்குக் காரணம் அவனுடைய பேராசையே.

"ஒத்தல்லோவின்" அழிவு அவனது பொறாமையில் சுடர் விட்டுத் தெறித்தது.

"லியரின்" பரிதாபகரமான முடிவு அவனுடைய முரட்டுப்பிடிவாதத்தில் பிறந்தது.

அறிவாளியான "ஹாம்லெட்டின்" நாசம் மனச் சஞ்சல வேரிலிருந்து முளை விட்டது.

திறமைசாலியான இந்த பாரஸ்ட் ரேஞ்சரின் முட்டாள் தனம்...........

"மனிதன் பலஹீனன். அதிலும் முழு முழுக்க சந்தேகப் பிராணி" என்ற "ஜான் கீட்ஸின்" தத்துவத்தில் தளிர் விட்டது தானே!

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்

மதுரையிலேயே மிகப் பெரிய ஹோட்டல்.

ஒரே சமயத்தில்
400 பேர்கள் சாப்பிட இடவசதி அமைந்தது. பெண்களுக்கும், குடும்பத்துடன் வருபவர்களுக்கும் மாடியில் வசதியான இடம் உள்ளது. சுத்தம், நாவிற்கு ருசியுள்ள சிற்றுண்டிகள், சாப்பாடு, காபி இவைகளுக்கு இன்று பிரசித்திபெற்று விளங்குவது.

"நாகலக்ஷ்மி பவான்"

பிராமணாள் காபி & சாப்பாடு ஹோட்டல்
9—10, மீனாட்சி கோவில் தெரு,
(சென்ட்ரல் பேங்க் எதிர்)
மதுரை,

Prop:- நாகலிங்கம் ஸ்டோர்ஸ்
A. N. M.

—'ராஜம்'

— தமிழ்த்தென்றல்



[கே. வைரவன்]

"நேரமாகும் பாதை. திரளான மக்கள் "திமு திமு" வென ஒருவரோடு ஒருவர் முண்டி மோதிக் கொண்டு திணறினர். காகிதப் பூக்களால் மிக மிகக் கவனத்துடனும் — கவர்ச்சியுடனும் அலங்கரிக்கப்பட்ட தேரின் உச்சி முகடு அலசயத் தொடங்கிற்று.

"பாட்டாளி மக்கள்" எழுப்பிய "பஜ கோவிந்தம்" வான வெளியில் எங்கோ முட்டி எதிரொலித்தது. சுண்டி இழுக்கப்பட்ட இழுப்பில் அப்பனுக்கும் அம்மனுக்கும் அருகே ஆனந்த பரவசமாய் அமர்ந்திருந்த 'அய்யரின்' உச்சிக் குடுமி ஒரு குதி போட்டுக் குதித்தது. மேளக்கோஷ்டியிலிருந்த அந்த குசும்புக்கார 'ஜால்ரா' பையன் இதைப் பார்த்ததும் சிரித்து விட்டான், தனக்கு இருக்கிற குடுமியை மறந்து விட்டு.

"அப்போது தானே "குண்டுக் கத்தரிக்காய்" மாதிரி குடுகுடு வென "அம்மா! அம்மா! என்று அலறி வந்து கட்டிக் கொண்டது குழந்தை ...."

கந்தசாமி இப்படி நினைத்தார்..... ......பேசவில்லை!

கன வேகமாய்ப் பறக்கும் சிட்டுக் குருவியைப் போல காலத்தின் சுழல் அதிகரிக்க — அதிகரிக்க பையன் எப்படி விறு விறுப்பாய் வளர்ந்து விட்டான். வீதியில் கிடைத்த — பேர் தெரியாத — அந்த ஊமைக் கோட்டானை இப்படி ஓர் விஞ்ஞான விற்பனனாக — விலை மதிப்புக் கொண்ட டாக்டராக — அழகில்

— தமிழ்த்தென்றல்

நினைக்கும் அற்புத வாலிபனாக — ஆளாக்கி விட்டோமே என்றெண்ணி எண்ணி, அகம் மகிழ்ந்தார் கந்தசாமி.

"பிரபல வர்த்தகர் ரத்ன சபாபதி செட்டியாரின் ஒரே ஆண் குழந்தை தவறி விட்டது. புது நிறம். வலது புருவத்தின் மத்தியில் வடு.... ...." இப்படி ஒலி பெருக்கி அலறிக் கொண்டிருந்தது. பெற்றவள் புலம்புவாள். வளர்த்தவர் வாடுவார். பாவம்! பையனைக் கொன்று போய் விட்டு விடலாம் சரணார்முகாமில் என்று தான் முதலில் பட்டது. இருந்தாலும் மலட்டு வாழ்வில் மனம்சோர்ந்துகிடந்த கந்தசாமியின் நெஞ்சத்து ஊற்றில் பிள்ளைப் பாசம் பிறிட்டுப் பெருக்கெடுத்தது.சுயநலம், இரக்கச்சிந்தனையை சிதறடித்தது — சிரித்தது. பங்களாவின் பரவசப் பூரிப்போடு.

இருபது வருடங்கள் 'இல்லாத கொடுமையில்' வாடியவனுக்கு புதையல் கிடைத்தால் ஏதாவது பேசுவானா? எவரிடமாவது காட்டுவானா? கந்தசாமியின் குடும்பம் களிவுப் பாதைக்குத் திரும்பியது. காலமும் கட்டியம் கூறியது.

X X X

கல்கத்தா ஜெனரல் ஆஸ்பத்திரி சர்ஜன் டாக்டர் மனோகர் இயந்திரம் போல இங்கு மங்கும் சுழன்று கொண்டிருந்தார்.

அடுத்தடுத்து கடலலைபோல வரும் கேள்விகளுக்கு — சிகிச்சை முறைக்கு — மாறி மாறி வழிமுறைகள் — யோசனைகள் கூறிக் கூறி அவரே அசந்துவிட்டார், ஐந்தாறு சக டாக்டர்களின் துணை இருந்துங்கூட. வகுப்பு வெறியின் கோரத்தினால் படுகாயமடைந்த — பதை பதைத்த — வாடி வதங்கிய கூட்டம் ஆஸ்பத்திரியெங்கணும் அடைத்துக்கொண்டிருந்தது.

சேவா உணர்ச்சியும் — தியாக உள்ளமும் — பொறுமைக் குணமும் இல்லா விட்டால் இந்தப் பொல்லாத டாக்டர் உத்தியோகம் பார்க்க முடியுமா? அப்பப்பா............எத்தனை ஆப்ரேஷன்கள் — எத்தனை "சீரியஸ் கேஸ்கள்". அதோ இதோ வென மயிரிழையில் ஊசலாடும் அத்தனை உயிர்களும் மனோகர் கையிலே! காயங்களினால் கருத்திழந்தோர் — வியாதிகளில் வெந்து படுவோர் ஆவல் — நம்பிக்கை இவ்வாறாகத் தானே இருக்கின்றது. 'எல்லாம் டாக்டரையா மனம் வைத்தால் பிழைத்து விடுவேன்' இப்படி முனுமுனுக்காத சீக்காளியை யாராவது பார்க்க முடியுமா என்ன?

பொறுப்புடன் சகிப்பு. இது எவ்வளவு சிரமம் என்பது செயல் புரிகிற பொழுது தானே தெளிவுறத் தெரிகிறது. ஒவ்வொரு "பெட்டிற்கும்" கிடைக்கும் அவகாசமோ ஒன்றிரண்டு வினாடிகள். இதில் நோயாளியின் நிலைமையை மட்டும் அறிந்தால் போதுமா? ஏங்கி பரபரக்க விழிக்கும் அந்த ஜீவனுக்கு நம்பிக்கை அல்லவா அளிக்க வேண்டும்.

— தமிழ்த்தென்றல்

வேற்று காயங்களுக்குக் கட்டுப் போட்ட அந்த பத்தாம் நம்பர் படுக்கையை நெருங்கும் பொழுதே டாக்டர் உள்ளத்தில் இனமறியாத ஒரு பற்றுக் கோல் தழுவி நின்றது. உடலெங்கும் ஒருவித நடுக்கம். நடுக்கத்தில் தெளிந்து நின்றது ஓர் பாசம்.

மீண்டுமொரு தடவை "ஸ்டெதஸ் கோப்பை" எடுத்து மாட்டிய பொழுது வெட்கம் டாக்டரின் உடலை வெல வெலக்க வைத்தது. அவன் உயிர் பிழைக்க வேண்டுமென்ற தீராத ஆசையால் இப்படி மறுக்க மறுக்க பரீட்சை செய்தால் பார்க்கிறவர்கள் தான் என்ன நினைப்பார்கள்?

மூன்றாவது தினம் அவனது காயமடைந்த காலை எடுத்து விட்டால் தான் உயிருக்கு ஆபத்தில்லை என்று 'மேல் நர்ஸ்' மெய்யழகன் கூறிய பொழுது அந்த அனுதை எழுப்பிய ஈனக்குரல், மனோகரின் உள்ளத்தைத் தொட்டது — உடலை உலுக்கியது — உலகமே சுழன்றது.

"வேண்டாம் மெய்யழகா! புது முறையில் சிகிச்சை செய்து வெற்றி காண்போம்" டாக்டரின் ஆன்ம மனம் உதிர்த்த நம்பிக்கை இது.

உலகத்து நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக ஓட்டி விரட்டிய நாட்கள், ஞாயிற்றுக்கிழமையைத் தாண்டி வாரத்தைப் பிடித்தன. 'ட்யூட்டி' இல்லாத நேரத்தில் கூட டாக்டர் வார்டுகளில் வளைந்து வளைந்து சுற்றி வந்தார். சுறுசுறுப்புக் காட்டினார்.

— தமிழ்த்தென்றல்

பத்தாவது நாள் நோயாளியைப் பற்றி டாக்டருக்கு நம்பிக்கை வந்து விட்டது, பரவசத்துடன் வந்தார். பார்த்தார். பேசினார் அன்பு கனிய, ஆவல் ததும்ப.

"டாக்டர்..............!"

"என்ன வேணும் லல்லி!"

"எனது தாய் தந்தையரைப் பற்றி ஏதாவது தகவல்........?

"இல்லையே லல்லி! இது வரை எதுவும் கிடைக்கவில்லை. இனிமேல் ...."

"அனுதை தானு நான்......?"

"இருக்காது. இருக்கவும் முடியாது. "இந்த உடல்" உன்னை அனுதையாக விட்டு வைக்காது......"

"நீங்கள் பேசுவதின் அர்த்தம் ...."

"உனது அழகு உனக்கு சொர்க்க வாசலாக — சொகுசுப் பண்ணையாக — சுந்தர பற்களாக ஆதரவளிக்கும்!"

"நான் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்வேன் டாக்டர்!"

"ஆண்டவனிடம் பக்தனும் — ஆண்டையிடம் அடிமையும் — பணக்காரனிடம் பாட்டாளியும் தனக்கு இனிமையானதைத் தானே வேண்டுவான்!"

இரத்த ஓட்டத்தில் சூடு தட்ட — நரம்பற்ற நயனங்கள் தட்டித் தட்டி விழிக்க — பாசம் பரவசத்தில் குதித்தது. செம்பொன் கன்னங்களில் சிவப்பேறி லீலை புரிந்தது.

'அப்படியே லாவகமாய் ஒரு தட்டு' தட்டி விட்டு நகர்ந்து சென்றார் டாக்டர். குளிர்ந்த இரத்தம் சுதாரித்து ஓடி ஓடி "பிளட் பிரசர்" வந்து விடக் கூடாதல்லவா வியாதியாளருக்கு! இந்தக் கவலை மிக மிக அதிகம் டாக்டருக்கு!

இந்தியாவிடம் காஷ்மீர்—சீனத்திடம் பட்டு—பழனியிடம் பஞ்சாமிர்தம்—டாக்டரிடம் லலிதா! வசந்தம் வீசும் வண்ண மலர் தோட்டத்தில் காதல் மொக்கு மலர வைக்க—காய்த்து பழுக்க வைக்க பரவசத்தில் பழகினர்.

பூரண குணமடைந்த பின்னரும் எத்தனை நாட்கள் தான் 'டிஸ்சார்ஜ்' செய்யாமல் இருக்க முடியும்? இல்லை. ஆஸ்பத்திரி ரொட்டியும் பாலும் லலிதாவுக்கு கிடைக்க வேண்டுமென்ற கவலையா அவருக்கு?

அகதி நல்வாழ்வில் இருந்தவள். ஆதரிப்பது கடமைதானே! டாக்டரின் அம்மாவும் அப்பாவும் இதை ஆட்சேபிக்கவில்லை. தகிக்கிற வெய்யிலில் தத்தளித்த உயிருக்கு டாக்டரின் மேக வர்ண மெருகு தீட்டிய மாளிகை "குயில் மாடம்" குடையானது!

மலர் மணம் வீசும் 'தென்றல்' சிரிக்கும் மாலை நேரங்களில் மாமரத் தடியில் கூடினர். பேசினர். பெருமையைப் பேணினர்.

நாடகக்காரர்கள் தனித் தனியாக—அரங்கம் அரங்கமாக—ஒத்திகை போட்டாலும், என்றுமே ஒரு நாள் அரங்க மேடையில் ஆடுவதில் தானே அவர்களுக்கும் திருப்தி. மக்களுக்கும் மகிழ்ச்சி. அதுபோல டாக்டரும் அகதியும் கருத்து ஒருமித்து இருப்பினும் "கணவன்—மனைவி" என்ற திருமண அறிவிப்பை வெளியிட்ட பின்னர் தானே அவர்களுக்கும் ஆனந்தம். பிறருக்கும் உவகை?

அவளோ அநாதை. அதட்டி 'அப்படி இப்படி' என்று கூற ஆட்கள் கிடையாது. டாக்டரோ தாய் தந்தையரின் சொல்லைத் தட்டி நடக்காத 'தங்கக்கம்பி' இளமையிலிருந்து. சிரித்து வளர்ந்து சிங்காரமாய் செழுமை தரும் "செல்லப் பிள்ளை". இதற்கெல்லாம் மேலாக மற்றொரு வசதி அவர்களுக்கு இருந்தது. இந்த பரந்த உலகில்—கதைகளில்—கற்பனைகளில்—வருகிற மாதிரி வில்லனும் கிடையாது வேதனை தர இவர்களுக்கு.

"ஊர் பேர் தெரியாத அநாதையைக் கட்டிக் கொள்ளுகிறாயா? நல்ல குடும்பமாக இருக்கலாம்? இன்றைக்கு நல்லது நளினம் மிக்கது சீர் வரிசை என்ன வரும்? சே! சே! இது என்ன சம்பந்தம்! நம் குடும்ப கௌரவம் என்ன ஆவது? இதற்கா உன்னை வளர்த்துப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வந்தேன்? இனி நீ என் மகன் இல்லை? இதோ நான் போகிறேன்" என்று சந்தாமிக்கத் அவ்வார். இந்த முறை கேடான திருமணத்திற்கு ஒப்பார் என்று ஏதோ ஒன்றிரண்டு ஆஸ்பத்திரி நர்ஸ்கள்

— தமிழ்த்தென்றல்

— தமிழ்த்தென்றல்

சென்னை-600 003

குசுகுசு வெனப் பேசினது என்னவோ உண்மை தான். கந்தசாமியோ அவர்கள் முகத்தில் கரியைப்பூச வில்லை. கருத்தில் சீர்திருத்தத்தைப் போற்றி களிவுடன் காதலர் பாதைக்கு "காங்கிரட்" அமைக்க வழி வகுத்தார்.

X X X

இன்று இந்த தெருவில் திருமணம். மாப்பிள்ளை வீடு இப்படி. பெண் குடும்பத்தின் பெருமை இது. என்பதெல்லாம் இந்த பாதவிக்கும் பரதேசிக்கூட்டத்திற்கு மிகத் தெளிவாகத் தெரிந்து தானே விடுகிறது. அவர்களுடைய நாட் குறிப்பில் — டைரியில் — இந்த விபரம் கட்டாயம் வரிந்திர வேண்டும். இதை விட்டு வேறு வேலை அவர்களுக்கு? எப்படியோ காத்துக் கிடந்தால் மீதமாகிறதில் இந்த ஜீவன்களுக்கு ஏதாவது கிடைக்கும் அல்லவா?

இந்தக் கூட்டத்திலொருவனாகத் தான் இந்த வயோதிகனும் வந்தான். ஆனால் இவனோ அவர்களுடன் இருந்து விடவில்லை! அகதியல்லவா! அந்த உரிமையுடன் உள்ளே 'விடு விடு' என்று நுழைந்தான். சந்திரத்தில் கூட 'சீட்டு' வாங்கி நுழைய வேண்டிய காலத்தில் இவன் வந்து இப்படி 'மளமள' என்று புகுந்தால்.........

பங்களாவிற்கு வந்தனவே உள்ள காவலாளியுடன் இன்று பந்திபோசனத்திற்காகக் கதவுக்கு மற்றொரு பெருத்த ஆளை நிறுத்தப் பட்டிருக்கிற பொழுது வயோதிகனுக்கு வரவேற்புப் பத்திரமா வாசித்து அளிப்பார்கள். தடுக்கப் பட்டான். தகராறு.

இந்தப்போராட்டத்தில் கிழவன் கீழே உருண்டான். மேலே மாடியில் தன்னை சிங்காரித்துக் கொண்டிருந்த மணப்பெண்ணோ இதைக் கண்டு அலறி விட்டாள். அலறினவள் அங்கேயே வீழ்ந்து விடவில்லை. ஓடோடி வந்தாள். தன் "அப்பாவை" கட்டித் தழுவினாள். தூக்கிவைத்தாள். பதறிக்கதறினாள்.

மகளுக்குத் திருமணம். கிழவர் பரவசத்தில் மிதந்தார். மணப் பந்தலுக்குத் தள்ளாடி வந்தார்.

"ஆ! மணமகன்!.........." கிழவரின் புருவங்கள் வெறித்து வரினை. விழிகள் பருத்தன. 'ஆமாம்! புருவத்தில் வடு... அதே இரட்டை மண்டை. மூக்கு..................'

"அடே! ராமு!" அலறி விட்டார்.

"லல்லி! இவன் உன் அண்ணன் அம்மா! திருநாளில் தவறினவன்.........."

"என்ன!..........லலிதா பதறினாள். காதல் களி நசுங்கிச் சிதைந்தது. சூன்ய வெளியில் சமாதியானது.

ஆகக்கூடி உலகத்து கேடுச்சிகளிலிருந்து பிரிந்து போனாள். பைத்தியமாகும் டாக்டரின் காதல்!

— தமிழ்த்தென்றல்

* தலைவலி
* ஜலதோஷம்
* ஜுரம்
* பல்வலி
* தசைவலி

முதலியவைகளுக்கு நிச்சய நிவாரணி

அஜைபரின்

தயாரிப்பாளர்கள் :

மெர்குரி பார்மசூடிகல்ஸ்,

தெற்காவணிமூல வீதி : : மதுரை.

—"ராஜன்"

இந்திய மழலைகள் சிங்க பலம்பெற

எமது

என். எம். பி. பார்லி

குளுகோ பிஸ்கோத்துக்களை

உபயோகியுங்கள்.

59, அமெரிக்கன் காலேஜ் எதிர்புறம்,

மதுரை.

—'ராஜன்'

— தமிழ்த்தென்றல்



[illegible]

1. காலைக் குயில் கூவக் — கால்நடை
கானகம் ஏகையிலே,

சோலையின் தென்றலிலே — மலர்மணம்
சில்லென்று வீசையிலே!

2. ஆதவன் தோற்றங் கண்டு — கன்னிநான்
ஆசையுடன் மலர்ந்தேன்.

ஒதும் எழில் பெறவே — உலகில்
ஒய்யாரமாய்த் திகழ்ந்தேன்.

3. கண்ணில் கனல் பொங்க — தோழிகள்
கண்டு பயமுறுத்த

வெண்ணில வின் உவமை — சொல்லியே
முல்லையும் கேலிசெய்தாள்.

4. வண்டின் இசைதனிலே — மயங்கி
வையம் மறந்து நின்றேன்.

கண்டேன் புது உலகம் — வண்டதன்
காதல் சுகந்தனிலே.

5. நெகிழா அரவணைப்பில் — மூழ்கியே
நெஞ்சம் குளிர்ந்திருந்தேன்

முகிழா மலர்வகைகள் — சிரித்தே
முகம் சிவந்தனவே.

6. அணைப்பில் அகமகிழ்ந்த — எனது
அன்பு நல் காதலனும்

இணைப்பின் சுவை மறந்தே — விட்டெனை
இமைப்பினில் மறைந்தான்.

7. காதலன் தன்வரவை — பார்த்துநான்
கண்கள் கலங்கி நின்றேன்

சோதனை செய்துவிட்டான் — உள்ளத்தில்
தொல்லையும் தந்துவிட்டான்.

8. அந்திக் குயில் கூவ — ஆவினம்
ஆயர்மனை திரும்ப

மந்த மாருதந்தான் — சோலையில்
மண்டிக் கலந்திடவே.

9. செங்கதிர் செல்வனுமே — குன்றிடை
சென்று மறைந்து விட்டான்

அங்கம் நிறமிழந்த — ரோஜா நான்
அவலமாய் உதிர்ந்தேன்.

— தமிழ்த்தென்றல்

போட்டோர் மார்க்

சந்தனாதித்தைலம்

எங்களிடம் அநேக வித மூலிகைகளினால் தயார் செய்யப்பட்ட சந்தனாதி, அரைக்கீரைத்தைலமும், ஹேர் ஆயில்களும், வாரம் இரு முறை ஸ்நானம் செய்தால் கண் எரிச்சல், கண் மங்கல், கண்ணீர் வடிதல், சரீரத்தில் உஷ்ணம் முதலிய வியாதிகளை நீக்கி கூந்தலை வளரச்செய்யும்.

பொன்னு விலாஸ் சீயக்காய் பவுடரை உபயோகியுங்கள்.

Pro: V. M. சேர்மசாமி நாடார்,

எண்ணைக் கடை,

M. S. பட்டணம் பொடி ஏஜெண்டு,

ஷாப் வியாபாரம், தெப்பத்திற்கு மேல்புறம், விருதுநகர்.

விவசாயிகளுக்கு அரிய சந்தர்ப்பம்.

எங்களிடம்

GEC, க்ராம்ப்டன், B. T. H., A. E. I., 3, 5, 7½ ஹார்ஸ் பவர் மோட்டார்களும், DPE பம்ப் செட்டுகளும், சகல விதமான வயரிங் சாமான்களும்

சரசமான விலையில் கிடைக்கும்.

மேலும் சினிமா சம்பந்தமான சகல சாமான்களும் கிடைக்கும்.

க்ரீன்விச் கமர்ஷியல் சிண்டிகேட்

227-A, தெற்கு மாசி வீதி, [கிராம முன்சிப்கோர்ட் சமீபம்]

'ராஜன்' மதுரை.

— தமிழ்த்தென்றல்

போன பின்பே திரும்பி வராதே!

மூலம்: மாப்பசானின் "ஏவாக்"

தழுவல்: ப. சி. அ. வணங்காமுடி

பாரிஸ்,
10—4—'52.

அன்பு ஜெகீஸ்!

வணக்கம். நலம் பெருக, நனி சிறந்த ஆவல்.

உனது கடிதம் நேற்றுக் கிடைத்தது. மகிழ்ந்தேன். காகித உறையில் ஒட்டியிருந்த நம் நாட்டு (!) தபால் தலைகளைப் பார்க்க மிக மிக ஆனந்தமாக இருந்தது. தாய் நாட்டை விட்டுப் புறப்பட்ட ஓராண்டுக் காலத்தை அவைகள் மறக்கச் செய்தன. திறந்தேன். படித்தேன். தோழா! ஏன் உனக்கு இப்படி கஞ்சத்தனம்! நீண்ட கடிதம் எழுதினால், நேரமும், மையும், தாளும் நீண்டு செலவாகுமென்ற நினைப்பா? நீ தான் நீண்ட கடிதம் எழுதுவதில்லை. நானாவது எழுதுகிறேன்.

மேல் நாட்டு எழுத்தாளர்கள் பிரான்சை ஒரு முறையாவது சுற்றி வருவது வழக்கமாம். ஆனால் நான் —எழுத்தாளனல்லாத நான் —இன்று இந்தப் புரட்சி பூத்த—நாகரிகத்தின் சிகரமான பிரான்சை வலம் வருகிறேன்.

நம் ஊருக்குப் பக்கத்திலுள்ள ஆவல்குரம்பட்டியில் அதிசயமாகத் தோன்றிய ஊற்றைப் பார்க்க நாம் சிறு பிள்ளைகளாயிருந்த போது அடிக்கடி ஓடுவோமே, அதே ஆவல் வளர்ந்து இன்று நான் உலகை வலம் வரச் செய்திருக்கிறது. அது மட்டுமல்ல, ஆசிரியர் பொன்னம்பலம் நமக்கு ஓர் நாள் "வால்டயரைப்" பற்றிச் சொன்னாரே, நினைவிருக்கிறதா? அப்போது என் சிந்தனை நான் காணாத அந்த பிரான்சு நாட்டை வலம் வந்து கொண்டிருந்தது. அணையாத அந்த ஆவல் இன்று அழகு பெற்றது. எனது உலகச் சுற்றுப் பிரயாணத்தால், செயலில்.

நான் அடிக்கடி சொல்வேன். "உலகை வலம் வர வேண்டும். மனித நாகரிகத்தின் சின்னங்களையும் வேறு பட்ட மனிதப் பண்புகளையும் காணவும் அனுபவிக்கவும் வேண்டும்" என்று. அப்போது நண்பர்கள் இராமசாமியும் பாஸ்கரனும் என்னைக்கேலி செய்தார்கள். ஆனால் நான் இதோ இன்று இந்த கோலாகலபுரியான பாரிஸிலிருந்து உனக்கு கடிதம் எழுதுகிறேன்.

"வாழ்வின் மாலை நேரமான முதுமைப் பருவத்தை எய்து முன் மனிதன் வாழ்க்கையின் இனிமை

— தமிழ்த்தென்றல்

மையைச் சுவைக்க வேண்டும்" இப்படி அடிக்கடி நான் கூறுவது உண்டல்லவா? ஏன் இதைப் பற்றியே நம் "மந்திரி மன்றத்தில்" ஓர் விவாத அரங்கம் கூட நடக்கவில்லையா?

நண்பன் ராஜா வைத்தியக் கல்லூரியில் படித்தவரல்லவா? அவர் சொன்னது இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு பெண் பிணத்தை அறுத்துப் பார்த்தபோது அவள் வாழ்வின் இன்பத்தை அனுபவியாமல் இறந்ததை அவரது ஆசிரியர் சுட்டிக் காட்டினாராம்.

இதைப் போன்று பலர் வாழ்வின் இனிமையை ருசிக்க வகையின்றி, வெப்பம் மிகுந்த கோடை கால மாலை நேரம் போன்ற முதுமைப் பருவத்தில் ஏங்கியபடி செத்து மடிகிறார்கள்.

இதை ஏன் எழுதுகிறேனென்றால், இங்கே போனவாரம் ஓர் சம்பவம் நடந்தது. தலைநகரை இணைக்கும் பிரதம சாலையோரத்திலுள்ள மரமொன்றில் ஓர் பிணம் தொங்கிக் கொண்டிருந்தது. இனியாவது அதற்கொரு இனிமை கிடைக்கட்டுமென்று இளங்காற்று அதனைத் தாலாட்டிக் கொண்டிருந்தது!

நரைத்த மயிர், நலிந்த உடல், உழைப்பின் சின்னங்களாக உடலெல்லாம் காய்ப்புகள். வயது 50-ஐத் தாண்டி இருக்கும். இதைப் பார்க்கக் கூடினர் சிலர். இவர்கள் எல்லாம் பங்களா வாசிகள். பொங்கும் சோகத்துடன் பார்த்தனர் பலர்.

இதையெல்லாம் வேடிக்கை சம்பவமாக கருதுகிற இவர்கள் இப்படி அடித்துப் புடைத்து கூடுவதில் வேறு ஆச்சரியத்திற்கு என்ன இருக்க முடியும்?

சோதனையில் அதன் சட்டைப் பையில் ஓர் கடிதம் இருந்தது. "ஈவினிங் நியூஸ்" பத்திரிக்கையில் வெளிவந்த கடிதம் இதுதான்.

"என் பெயர் "டெவாக்." நான் ஓர் புத்தகக் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன்." இது தான் என்னைப்பற்றிய விவரம். இந்த விவரத்தை வைத்துக்கொண்டு நீங்கள் எனது உயிர்போன உலர்ந்த உடலை யாரிடமும் தந்துவிடமுடியாது. அல்லது இதைவிட அதிக விவரமும் விலாசமும் தந்தாலும், நீங்கள் என் பிணத்தை மண்ணுக்குத் தவிர வேறுயாரிடமும் தரமுடியாது.

"நான் ஓர் அனாதை.

"எனது வாழ்க்கை, நமது நாட்டுப்பெயர் பெற்ற சிறு கதை மன்னன் கேய். டி. மாப்பசான் எழுதிய "ஏ வாக்" எனும் கதையை ஒட்டி — அதைவிட சுவையாக இருக்கும்! அப்போது "வால்டயர்" பிறந்தும் திருந்தாத பிரான்சு, எமிலி ஜோலா, மாப்பசான், சுட்டிக்காட்டியும் சுகப்படாத "சொர்க்க பூமி" என்னைப்பார்த்து நகைக்கும்! இது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் எழுதுகிறேன்.

"நான் பிறந்த ஒரு மாதத்தில் என் அன்னை இறந்துபோனாள்.

— தமிழ்த்தென்றல்

இருந்தாலும் நான் வளர்ந்தேன். பேச ஆரம்பித்தேன். அப்போது நான் குளறிக்குளறிச் சொன்ன அந்த வார்த்தையைக் கேட்க எனது அப்பாகூட இல்லை. ஆனால் அதட்டும் குரலும், ஆவேசமும் கொண்ட எனது சித்தப்பன் என்னை வெறுப்போடு வளர்த்தான். அவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். பாலைவனப் பிரயாணிகளுக்குப் புகல்தரும் "ஓய சிசை" யாராவது வெறுப்பதுண்டா?

"என்னோடொத்தகுழந்தைகள், அழகிய ஆடைபூண்டு ஆடிப்பாடி விளையாடும்போது, கருமையில் பூத்த உடையோடு கடின வேலை செய்துகொண்டிருந்தேன். இளமைப் பருவத்தில் நான் கற்றதெல்லாம் வேலை, உணவு, உறக்கம். எனக்கு உலகம் தெரியாது. இன்பம் தெரியாது. இவைகளை நினைக்கத்தான் எனக்கு நேரம் ஏது?

"விடிந்ததும் எழுந்து நேராக புத்தகக் கடைக்குள் நுழைவேன். இருளடைந்த அந்தக்கடையின் அறையொன்றில் எண்ணும் எழுத்தும் தவிர, வாழ்வோ, இன்பமோ இல்லாத கணக்கை மாலை வரை எழுதுவேன். ஓய்வே காணாத அந்தக்கண்கள் "ஓய்வு உலகிற்கு" வா என அழைக்கும். அப்போது வயிறு தன் வாட்டத்தைப் பாடும். பிறகு. பிறகென்ன! சாப்பாடு, தூக்கம், மீண்டும், சாப்பாடு! அதில் கூட வாயிற்கு ருசி வேண்டும் என்று நான் ஆசைப்பட்டதில்லை. ஒட்டி

— தமிழ்த்தென்றல்

உலர்ந்த அந்த ரொட்டியே எனக்கு "கேக்."

"ஒரு நாள் என்னுடன் வேலை பார்த்த எழுத்தாளர் வரவில்லை. அவருக்குத் திருமணமென்று பேசிக் கொண்டார்கள். அப்போது எனக்கு எப்போது திருமணம் என்றும் கேட்டார்கள். அந்த நேரத்தில் மனைவி என்பவளை திருமணத்தின் மூலம் அடைவதால், இன்பம், சோபிதம் வாழ்வெல்லாம் மலரும் என்று என் சிந்தனை செப்பியது. ஆனால் மனைவியை அடைய — திருமணம் நிகழ—நான் உழைக்க வேண்டும். சேமிக்கவேண்டும்.

"அன்றிலிருந்து உடலைச் சக்கையாகப் பிழிந்தேன். உடல் எனும் யந்திரத்தை ஓய்வெடுக்கவிடாமல் வேலை எனும் ஓட்டியிடம்விட்டேன். உழைத்தேன்! உழைத்தபடியே இருந்தேன். இப்பொழுது நான் கொஞ்சம் பணம் சேர்த்துவிட்டேன். திருமணத்திற்குப் போதுமான பணம் என் கையில் புரண்டது.

"அது வசந்தகாலம். இருந்த ஆடைகளை அணிந்து கொண்டு கண்ணாடியின் முன் நின்றேன். மாலை நேரத்து மஞ்சள் வெயில் உடைந்த கண்ணாடியில் விழுந்து விந்தை புரிந்தது. அதில் படர்ந்த என் உருவம் என்னை திகைக்க வைத்துவிட்டது.

கண்கள் பஞ்சடைத்துப் போயிருந்தன. தலை வழுக்கையாகியிருந்தன. கன்னங்கள் ஒட்டி, நாசி

பெரிதாகி நெற்றியில் சுருக்கம் விழுந்து 50 வயதுக் கிழவனாகக் கண்ணாடிமுன் நின்றேன். 20 வயதிலிருந்து உழைத்தேன். திருமணத்திற்குப் பொருள் சேர்த்தபின் என் வயது 50 ஆகிவிட்டது என்பதை அறிந்தவுடன் என் வாடிய முகத்தில் மேலும் பந்தம் சுண்டியது.

"ஆனாலும் என் உடலில் இளமை முறுக்கு இருப்பதாக எண்ணினேன். என் வாய் பழைய காலத்துக் காதல் பாட்டொன்றை முணுமுணுத்தது. என் கைகள் வழுக்கைத் தலையை தடவியபின், கால்கள் நகர ஆரம்பித்தன. எங்கே! அது தானே முக்கியம்.

"இளம் பெண்களும், ஆண்களும் உல்லாசமாகக் கூடுவார்களே பூஞ்சோலை, அங்கே என் கால்கள் போயின. மாலைக்காற்று அற்புதமாக வீசியது. வழியெல்லாம் ஆண்களும், பெண்களும் கைகோர்த்த வண்ணம் உல்லாசமாகப் போனார்கள். சுற்றுமுற்றும் பார்த்தேன். என்னைப் போன்று யாரும் தனியாக அந்த வீதியில் இல்லை. என் கால்கள் திரும்ப முயன்றன. ஆனால் மனம் என் கால்களைக் கட்டளையிட்டன, போகும்படியாக.

"பூஞ்சோலையின் சந்தடியற்ற ஓர் பகுதிக்கு வந்தேன். மனித வர்க்கத்தைவிட்டு ஒதுங்க எண்ணினேன். ஓர் பலகையில் அமர்ந்தேன். சுற்றுச் சூழ்நிலைகள் என்னைப் பித்தனாக்கிக் கொண்டிருந்தன. அப்போது எனக்குப் பின் பக்கத்தில் செடி அசைவதைக்கேட்டுத் திரும்பினேன். அங்கே கொஞ்ச தூரத்தில் ஓர் இளைஞனும் இளம் பெண்ணும் முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். என் உடலே ஆடியது.

"நான் யாரையும் முத்தமிட்டதில்லை. யாரும் என்னை முத்தமிட்டதில்லை. முத்தம்! நிச்சயமாக இது இன்பமாகத்தான் இருக்கவேண்டும். மனிதனைக் கலையுள்ளமுள்ளவன் என்று அறிவிக்க அவன் உடலில் வாயைத்தவிர வேறு என்ன இருக்கிறது? அந்த வாய் மெல்லிய கன்னத்தைத் தொடும்போது நிச்சயம் இன்பமாகத் தான் இருக்கும்.

"நான் அந்த முத்தத்தைச் சுவைக்க முடியுமா?

என் கை என்னையுமறியாமல் என் உதடுகளைத் தடவின. அவைகளோ காலத்தால்—அப்பப்பா! எவ்வளவு கரடு முரடாகிவிட்டன! கன்னத்தையும் தடவினேன். அங்கு ஓர் பள்ளத்தாக்கைத்தான் உணர்ந்தேன். நான் எரிமலையானேன்! எரிமலை தனது கொதித்துக் குமுறிய குழம்புகளைக் கண்களின் வழியாகக் கக்கின. ஆம் நான் அழுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

"வாழ்வின் இன்பம் எனக்கு இனிமேல் இல்லை. ஏன் எனக்கு வாழ்வே இல்லை. இதோ மாலை நேரம் வந்துவிட்டது. கதிரவன் அன்றைய கணக்கை முடித்து

— தமிழ்த்தென்றல்

"திட்டம்" கட்டிவிட்டான். இனி இருள். எங்குமே இருள் தான். ஆம். நான் வாழ்வின் மாலை நேரமான முதுமைப் பருவத்தில் நிற்கிறேன். இனி மரணந்தானே? இருளொழிந்து காலை மலரலாம் நாளை. ஆனால் எனது வாழ்விலிருளை ஒழிக்கக் கதிரவன் ஏது? இல்லை. அது எப்படித்தான் இருக்கமுடியும்?

"நான் விரும்பித்தான் சாகிறேன். அதோடு வெதும்பி, பொங்கிப் புலம்பி சாகிறேன். நாகரீகமென்றால் என்ன என்பதறியாமல் வாழும் இவ்வுலகை விட்டே ஓடுகிறேன்."

X X X

இது தானப்பா அந்தச்செய்தி. நான் உலகெங்கும் இதையே தான் காண்கிறேன். வாழ்வின் மாலை நேரமான முதுமை பருவம் வரை இன்பங் காண முடியாமல் ...இன்பத்தை நினைக்க நேரமில்லாமல் — வெதும்பிச்சாகும் நிலை உலகை விட்டு என்று போகும்?

சிந்தித்து எழுது. பிறபின்.
உனதன்புள்ள,
இராஜன்.

X X X

சென்ற வாரம் பேராசிரியர் வடிவழகனைக்காண மதுரை போனபோது, ரயிலில் ஓர் காகித உரை கிடைத்தது. அதில் அன்னிய நாட்டு தபால் தலைகளைக் கண்டவுடன் நண்பர் நாராயணமூர்த்திக்காக அதை எடுத்தேன்.

அவ்வுரையில் "இரா. ஜெகதீசன் பி. ஏ. (ஆனர்ஸ்) பேராசிரியர், கல்லூரி, விருதுநகர்" என்று எழுதி இருந்தது. அதனுள் இருந்த கடிதம் தான் மேலே உள்ளது. இதைப் படித்தபோது என்னை மறந்த நிலையிலிருந்தேன். சந்தடியிருந்த மதுரை ரயில் நிலையம் கூட என் அமைதியைச் சிறிது நேரம் கலைக்க முடியவில்லை.

என் எதிரே இருந்த முதியவர் "எங்கேபோகறாய் தம்பி!" என்றார். அவரை ஏறிட்டுப்பார்த்தேன்.

மதுரை, எனது வாய் முணுமுணுத்தது. கிழவர் பொக்கை வாய் விரிய சிரித்த வண்ணம் "இதான் மதுரை தம்பி!" என்றார்.

கும்பல் மிகுந்த மதுரைநகரின் கண்டேனா, என் உடல், உணர்ச்சிக் குழம்பாக ஓடிக்கொண்டிருந்தது.

"வான வில்லைப்போலே வரும் வாலிபம் தானே! போன பின்னே திரும்பிவராதே! எழில் போன பின்னே திரும்பி வராதே!"

எங்கோ கேட்டிருந்த இந்தப் பாட்டை என்னையும் அறியாமல் முணங்கினேன். கடைசியாகப் பெருமூச்சோடு கூடேறிய இவ் வார்த்தைகள் தெறித்தன என் வாயிலிருந்து; "மாலைநேரமும் அல்ல. வாலிபம் வானவில்லும் அல்ல! மாலைநேரமும் வானவில்லும் திரும்பி வரும். வாலிபமோ திரும்பி வரவே வராது! வாலிபம் ஒருமுறை அனுபவிக்கும் முதலிரவு. ஒருமுறை பிறக்கும் பிறப்பு. ஒருமுறை சாகும் மரணம். ஆகவே **போன பின்னே திரும்பி வராதே!**"

— தமிழ்த்தென்றல்

USE

MURALI PENS,

MADE BY ENGLISH EBONITE.

GUARANTEE LEAK-PROOF.

Stockists:-

A. 1382, Virudhunagar Co-operative Stores Ltd.,
VIRUDHUNAGAR.

டிரேட் மார்க். ரிஜிஸ்ட்ரேஷன்.

ஒருவரது டிரேட் மார்க், டிரேட் நேம், டிசைன் முதலியவைகளை பிறர் உபயோகிக்காமல் தடுக்க புதிய ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்து கொள்வது நலம்.

புகழ் பெற்ற

சேலம் மாம்பழம்

மல்கோவா, குண்டு, கடுசாலை முதலிய புகழ்பெற்ற சேலம் மாம்பழம் மொத்தமாகவும், சில்லரையிலும் சப்ளை செய்யப்படும்.

விவரங்களுக்கு :

எஸ். என். முனிசாமி ராஜு,
நாருயண ராஜு தெருவு, சேலம். (தென் இந்தியா)

— தமிழ்த்தென்றல்

வேலைக்காரன்

[மதுரை, இ. எஸ். தியாகராஜன்]

ஸ்ரீ வள்ளி புரொடக்‌ஷன்சார் தயாரிப்பு. ஏற்கனவே பட உலகில் அனுபவம் வாய்ந்த அதன் உரிமையாளர் திரு. அடைக்கப்பச் செட்டியாரவர்களின் அரிய தயாரிப்பு.

நடிகர்கள்:—

டி. எஸ். பாலையா, டி. ஆர். மகாலிங்கம்; எஸ். வி. சுப்பையா; ஏழுமலை; வி. கே. இராமசாமி; பி. டி. சம்பந்தம்.

நடிகைகள்:—

எம். எஸ். திரௌபதி; மாதுரிதேவி; எஸ். வரலட்சுமி; கே. ஆர். செல்லம்; டி. வி. குமுதினி முதலியோர்.

"ஸ்ரீ வள்ளி புரொடக்‌ஷன்ஸ்" "வேலைக்காரனில்"—காலேஜ் மாணவியாகத் தோன்றி கச்சிதமாக நடித்துள்ள எஸ். வரலட்சுமி.

— தமிழ்த்தென்றல்

கதையின் அடிப்படை.

"வினை விதைத்தவன் வினை யறுப்பான்"—என்ற நீதிக்கு எடுத்துக் காட்டாக உள்ளது.

நடிப்பு:—

எஸ். வி. சுப்பையாவுக்கே முதலிடம் கொடுக்கலாம். வேலைக்காரனாகத் தோன்றுகிறார். வேஷம் மிகப் பொருத்தம். விசுவாசமான வேலைக்காரனாக நடிக்கிறார். ஒவ்வொரு கட்டத்திலும் உணர்ச்சிகரமாக நடிக்கிறார். பழியோரிடம், பாவமோரிடமாக, தன் கூடையில் வீசி எறியப்பட்ட செயினைத் தான் திருடவில்லை என்று சொல்லும் கட்டத்தில்; போலீஸாரிடமிருந்து சாகுந் தருவாயிலிருக்கும் தன் தாயாரைக் காண "அம்மா — அம்மா" என்று துடிக்கும் கட்டத்தில்; காணாமற் போன தன் குழந்தையின் ஏக்கத்தால் சோகமடைந்திருக்கும் தன் எஜமானரிடத்தில் "20 வருடங்களுக்கு முன் என் மீது பொய்க் குற்றம் சாட்டி, சிறையிலடைத்த பொழுதும், என் பெற்ற நெஞ்சமும் இப்படித்தானே இருக்கும்" என்று கூறும் கட்டத்தில்; அதே நேரத்தில் முதலியார் தன்னைக் கன்னத்தில் அறையும் பொழுதும் இவரது நடிப்பு மிக மிகப் பிரமாதமாயிருக்கிறது. கூலி வேலை பார்த்தேனும் குழந்தையை வளர்க்கும் கட்டம்; குழந்தையைத் தோளில் போட்டு வண்டி இழுத்தும்; மணி அடித்தவுடன் ஓடி குழந்தையை வளர்க்கும் பொழுதெல்லாம் இவரது நடிப்பு இயல்பாகவே உள்ளது.

வி. கே. இராமசாமி

தனவந்தர் முதலியாராகத் தோன்றி, கம்பீரமாகவும், தனக்கு இயல்பாக அமைந்துள்ள பேச்சுக்களால் கணக்காய்ப் பேசி நடித்துள்ளார்.

வி. எம். ஏழுமலை

கலியுகமாகவும்; பி. டி. சம்பந்தம் விளக்கெண்ணெ கணக்குப் பிள்ளையாகவும் தோன்றி நகைப்பூட்டும் முறையில் நடித்திருக்கின்றனர்.

டி. எஸ். பாலையா

குமாரராகத் தோன்றி, தாயை இழந்து, தந்தையைப் பிரிந்து, மாமன் முதலியார் வீட்டில் வளரும் பொழுதே, விஷமியாகி, பின் முதலியாரிடம், அடிக்கடி பணம் பறிக்கும் கட்டத்திலும்; மல்லிகாவிடத்தில் சரசமாடி, மணப்பதாக வாக்களித்து பின் அவளை ஏமாற்றி, குற்றத்தை தாசி மல்லிகாவையே தான் கெட்டதற்குக் காரணம் அவளே தானெனக் குற்றம் சாட்டும் கட்டத்திலும்

— தமிழ்த்தென்றல்

தன் மிடுக்கான பாணியில், துடுக்காகப் பேசி சபாஷ் பட்டம் பெற்றுவிடுகிறார்.

எம். எஸ். திரௌபதி

நடிகையைப் பொறுத்த மட்டில், ஒரு அரசியல் வாதிக்கு இரண்டாந்தாரமாகத் தோன்றி, "பொந்தில் வாழும் எலிகள் கூடப் பூனைக்குப் பயப்படுவதில்லையே — மனிதன் மனிதனுக்கு அஞ்சியா வாழ்வது" என்றுகூறும் இடத்தில்; தான் கருவுற்றது தெரிந்து, கணவனில்லாக் காலத்தில் உலகம் தன்னைவிபசாரி என்று தூற்றுமே என அஞ்சி கணவனிடம் முறையிடுமிடத்தில்; வேலைக்காரியாகவே இருந்து, தாய் என்று சொல்லிக் கொள்ளாமலே காலங் கழித்து, பின் தன் மகளுக்கு ஆபத்து என்று தெரிந்த பொழுது டாக்டரிடம் அலறி அடித்துக் கதறும் இடத்திலும் நம் மனத்தை உருக்குகிறது இவரது நடிப்பும், பேச்சும்.

மாதுரிதேவி

தாசி மல்லிகாவாகத் தோன்றி, குமார் தன்னை மணப்பதாக வாக்களித்த பொழுது, மலர்ந்த முகத்துடன் வரவேற்றும்; பின் குமாருடன் தன்னைக் கைவிடலாகாது என்று கெஞ்சும் கட்டத்திலும் நன்றாக நடித்துள்ளார். குமார் தன்னை மணக்காமல் போகவே, விஷமிட்டுக் கொன்றது தானே என்று கேஸில் போலீஸில் ஆஜராகி, "சாகசம் பேசி, ஒரு பெண்ணை ஏமாற்றி, கற்பழித்து, பின் முடியாது என்று

— தமிழ்த்தென்றல்

கூறும் ஆண் மகனைத் தண்டிக்க இந்நாட்டில் சட்டமிருக்கிறதா?" என்று கூறும் கட்டத்தில் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது இவரது நடிப்பு.

வசனம்

சக்தி டி. கே. கிருஷ்ணசாமி. கருத்தும் சுவையும் நிரம்பியதாக எழுதியுள்ளார்.

பாடல்கள்

முக்கியமாக கு. மா. பாலசுப்ரமணியத்தின் பாடல்கள் பாராட்டத்தக்கவை. சிதம்பரம் ஜெயராமன் பின்னணி வசீகரிக்கிறது. ஒலி, ஒளிப்பதிவு, நன்றாக அமைந்துள்ளது. ஸ்ரீ வள்ளி புரொடக்ஷன்சாரின் முதல் படமாயினும், இது முழு வெற்றிகரமான படம் என்றே கூறலாம். இப்பொழுது மதுரை ஸ்ரீ தேவியிலும், மற்றும் தென்னாடு, கேரளம், சென்னை முதலிய இடங்களிலும் அமோக ஆதரவுடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

புயல்

பெலிகன் பிக்சர்ஸ் தயாரிப்பு. திரைக்கு வரத் தயாராம். எம். வி. ராஜம்மா; கே. ஆர். ராம்சிங், ஜி. எம். பஷீர், முஸ்தபா, இன்னும் நமது அபிமான நடிகர்கள், நடிகைகள் நடிக்கின்றனராம். தென்னாட்டில் பல இடங்களில் புயலும் மழையும் ஏற்பட்டு நன்மைகள் உண்டானதல்லவா? திரையுலகிலும் ரசிகர்களின் அபிமானம் "புயல்" படம் நிச்சயம் பெறுமாம். பல சிக்கலான சூழ்நிலைகளை படத்தில் உண்டாக்கி, பின் அமைதிக் கட்டங்களும் வருகிறதாம்.

வளர்ந்து வரும் நாகரிக மோஸ்தர், [illegible] கிராப் வேலைத்திறன்
நம்பிக்கை நாணயம் நிறைந்தது
மலபார் டெயிலரிங் மார்ட்
புரோப்: M. P. KARUNAKARAN, [illegible] ரோடு, விருதுநகர்.

செருப்பு சல்லடை, கடலைப்பெட்டி சல்லடை, அரிசல் டாய் சல்லடை,
மைஸ் அல்லர் சல்லடை முதலிய சல்லடை ரகங்களுக்கு
ஸ்ரீ ராமகிருஷ்ணா அயர்ன் ஸ்டோர்
தங்கமரத் (செ. மீ. பொன்ன பாடசாலை) தெரு, விருதுநகர்.

பேபி காப்பி ஸ்ரீராமானது
விருதுநகர்.

நியூ எவரெஸ்ட் பிரியாணி ஹோட்டலுக்கு
விஜயம் செய்யுங்கள்.
Prop: K. Karuppiah Nadar, விருதுநகர்.

காளிமார்க் சோடாகலர்
விருதுநகர்: திருநெல்வேலி: மதுரை.

A.R.M. ஆறுமுகபாண்டியன்
அருப்புக்கோட்டை

— தமிழ்த்தென்றல்

காலம் வேண்டுவதென்ன?

[16-ம் பக்கத் தொடர்ச்சி.]

கட்டுப்பாடுகளை நம்மாநிலத்தின் நன்மையை முன்னிட்டுத் தமக்குத் தாமே ஏற்படுத்திக்கொள்ள மக்கள் ஆயத்தமாக இருப்பார்களென்று நம்புகிறோம்.

மேலும் நமது பஞ்சாலைகளுக்கு வேண்டிய பஞ்சு வெளியிடங்களிலிருந்து வரவேண்டியதிருக்கிறது என்பதும் தெரிந்ததுதான். இக்குறைபாட்டையும் எளிதில் நீக்கிவிடலாமென்று அறிகிறோம். வயல்களிலும் மற்ற இடங்களிலும் குறிப்பிட்ட பருத்தி வகைகளை (உணவுத்தானிய விளைச்சலுக்கு இடைஞ்சல் இல்லாமல்) விளைவித்து, நம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென்று தெரிகிறது. இதற்குவேண்டிய முறைகளைக் கையாண்டால் அனேகமாக நமக்கு வேண்டிய பருத்தியை யாவருக்கும் வேண்டிய பருத்தியை வெளிநாட்டிலிருந்து கொண்டுவராமல் இங்கேயே உற்பத்தி செய்து கொள்ளலாமென்று விவசாய இலாக்காத் தலைமையதிகாரியே நம்மிடம் சொல்லியிருக்கிறார். ஆவன செய்வார்களாக.

வாழ வீடு கட்ட

மனிதனால் மின்னியக்க ஆற்றல் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து அழித்தல் வேலையும் ஆக்க வேலையும் எளிதாய் விட்டன. பொதுமக்கள் மின்சாரத்தைக் கொண்டு பல வசதிகளை அனுபவிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். இந்த வசதியும் மழையைப் பொறுத்துத்தானிருக்கிறது. குடகு மலையில் மழை பெய்யாவிட்டால் இருநூறு மைலுக்கு அப்பாலுள்ள கிராமத்தில் காந்த விளக்கு எரிவது தடைபட்டு விடும். இந்நிலையில்தானிருக்கிறோம்.

மின்சாரத்தினாலும் மற்ற வசதிகளினாலும் ஏற்படுகிற வாழ்க்கை நலத்தினால் நகரவாழ்க்கையை மக்கள் விரும்பத் தலைப்பட்டுவிட்டார்கள். கிராமங்களிலிருந்து வெளியேறி நகரங்களுக்கு மக்கள்போய்க் கொண்டேயிருக்கிறார்கள். இவ்வகையால், நகரங்கள் அளவுக்கு மீறிய பெருக்கம் அடைவதுடன் மக்கள் பலவித அவதிக்கும் உள்ளாய் விடுகிறார்கள்.

வறுமை ஒருபுறம் இருக்க வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்து குடியிருக்கக் கூட இடமில்லாமல் தெருவிலும் மரத்தடியிலும் விலங்கினங்களிலும் கேவலமாக வசிக்கின்றார்கள்.

பல ஏக்கரா விரிவுள்ள சொந்த இடத்திலே நடுநாயகமாக ஒரு அழகிய மனை கட்டி வாழ்கின்றவன் தனக்கு இன்னும் வசதியில்லையே என்றுதான் ஏங்குகின்றான். ஆனால் அவன் கண்ணுக்கு எதிரேயே பாழுங் குட்டைக்கரையோரத்தில் ஓட்டைத் தகரத்தையும் கிழிந்த சாக்குகளையுங் கொண்டு வேயப்

— தமிழ்த்தென்றல்

பட்ட மண்வீட்டுச் சேரிகளிலிருந்து விரட்டப்படுகின்றேமே என்று கதறுகின்றார்கள் ஏழைமக்கள். இது சென்னைநகர் காட்டும் காட்சி.

வாழ்க்கைக்குக் கட்டாயமாக வேண்டிய வசதிகளைச் சாதாரண மக்களுக்குப் பொதுவிலிருந்து கிடைக்கும்படி செய்யலாம். கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறுமல் தடுப்பதற்கு, நகரங்களில் கிடைக்கும் வசதிகளைப் பெரும்பாலும் ஆங்காங்கு கிடைக்கும்படிசெய்தால் வழியாக இருக்கும்.

ஓரிரண்டு பெரிய நிலக்கிழார்கள் தவிர ஏனைய கிராம மக்கள் கூரை வீடுகளிலேதான் பரம்பரையாக வசித்து வருகிறார்கள். இப்பொழுது அவர்கள் தற்கால நாகரிக வாழ்வில் நாட்டங்கொண்டவர்களாகத் தெரிகிறது. ஆகவே பெரிய செலவினங்களால் கட்டப்படும் வீடுகளை விடுத்து, சுருக்கமான வழிகளில் வீடுகள் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். நாட்டிலுள்ள மக்களின் சராசரிப் பொருளாதார ஆக்கம் வலுவடையும் வரை சிக்கனமாக இருக்க வேண்டும். ஏழைமக்கள் வசிக்கும் இடங்களில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது சுகாதாரம். நல்லதோர் இடத்தைக் குறிப்பிட்டு வரிசை வரிசையாகச் சிறுசிறு வீடுகள் கட்டுவதற்கு இடங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படவேண்டும். நாட்டின் தட்பவெப்ப நிலைகளை முன்னிட்டுக் கூரை வீடுகளே பொருந்துமென்று சொல்லுகிறோம். சரியாகவும் பாதுகாப்பாகவும் வைத்தால் ஐந்து ஆண்டுகளுக்கு அந்தக் கூரை நின்று உதவும். மழைத் தண்ணீரும் கழிவு நீரும் தேங்காமல் வாய்க்கால்களுக்குப் போய்ச் சேரும்படி செய்ய வேண்டும். மலசலம் கழிப்பதற்கும், குளிப்பதற்கும் ஒவ்வொரு தெருவிலும் நிலையங்கள் கட்டி எந்நேரமும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தால் ஒவ்வொரு வீட்டிலும் இந்த வசதி செய்யவேண்டிய செலவினங்கள் மிச்சப்படும்.

குடிப்பதற்கும் மற்றத் தேவைகளுக்கும் வேண்டிய தண்ணீர் கிடைப்பதற்குப் பொதுவான நிலையத்திலிருந்து ஒவ்வொரு தனி வீட்டிற்கும் குழாய் வைத்துக் கொடுக்கச் செய்யலாம். இந்த வகையால் தனித்தனிக் கிணறுகள் செலவும் ஒவ்வொருவருக்கும் மிச்சப்படும். வீடுகட்டுஞ் செலவு எவ்வளவுக்கெவ்வளவு சிக்கனமாக இருக்கவேண்டுமோ அதற்கு ஏற்றாற்போல பொதுவிலிருந்து வசதி செய்து கொடுக்கவேண்டுமென்பதுதான் நமது நோக்கமாகும். ஆகையால் புதிதாகப் பெரிய நகரங்களை நிர்மாணிப்பதைக் காட்டிலும் இருக்கின்ற கிராமங்களைச் சுத்தமாக வைத்துத் தற்காலத்திய வசதிகளைச் செய்து கொடுத்து நகர மக்களை அங்கே போகும்படி முயற்சிப்பதுதான் நலமானது என்று கருதுகிறோம். சென்னை நகரிலே மாடமாளிகைகளில் இருந்து கொண்டு பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும், புதிய நகர நிர்மாணிப்புத் திட்டங்களையும் வகுத்துக்கொண்டிருக்கும் இஞ்சினி

— தமிழ்த்தென்றல்

யர்களைச் சென்னையை விட்டு முதலில் கிளப்பிவிட வேண்டும். கிராமங்களுக்குப் போய் நம் முன்னோர்கள் ஊர்களை எப்படி அமைத்திருக்கின்றார்கள்; நீர்ப்பாசன வசதிகள் எப்படிச் செய்திருக்கின்றார்கள் என்பதை நன்றிக் கவனிக்கச் செய்ய வேண்டும். ஆங்காங்குள்ள மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கு எதை எப்படி விரும்புகின்றார்கள் என்பதை நேரில் கண்டறிந்து சிக்கனமாகச் செய்ய வழி காட்ட வேண்டும்.

மேலும் சென்னையைப் போன்ற பெரிய நகரங்களிலுள்ள அரசாங்க அலுவல் நிலையங்களை மாவட்டங்களிலுள்ள பிற இடங்களுக்கு மாற்றி அமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் மக்கள் நெருக்கம் அதிகப்படுவதைத் தடுப்பதுடன், வீட்டுவசதி கிடைக்காத் தொல்லையையும் நீக்கிவிடலாம்.

இந்த வகையாகக் கிராமங்களைத் திருத்தியமைப்பதற்கும், சிக்கனமான முறையிலே வீடுகளைக் கட்டுவதற்கும், திட்டமிடுவதுடன் அதற்குவேண்டிய பண வசதியை அரசாங்கம் தாராளமாய்ச் செய்து கொடுக்க வேண்டும். அதோடு எந்தக் கிராமமும் ஏதாவது ஒரு பெரிய சாலையுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

பெருகும் மதுவைத் தடுங்க

அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட மதுவிலக்குத் திட்டம் வெற்றி

— தமிழ்த்தென்றல்

பெறவில்லை. அதை ஒழித்துவிட வேண்டும்; அல்லது மாற்றி அமைக்கவேண்டும் என்பது பொது மக்களின் அபிப்பிராயம். பழைய காங்கிரசு அமைச்சர்களிலே பலர் திட்டத்தைக் குறை கூறியிருக்கிறார்கள். அநேக காங்கிரசுக் குழுக்களும் குறை கூறி தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றன. சி. ஆர்-ம் அவர்தம் அமைச்சரும் தவிர சட்டசபையிலுள்ள ஏனைய உறுப்பினர்களெல்லாம் எக்கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும் மதுவிலக்குத் திட்டத்தைப் பற்றி ஏதாவது குறைகூறிக் கொண்டுதான் இருக்கின்றார்கள்.

மதுவை வெளிப்படையாக உற்பத்தி செய்வதும் விற்பதுந்தான் நின்றிருக்கின்றதே தவிர மற்றப்படி உற்பத்திப்பெருக்கம் அதிகமென்றுதான் எங்கும்பேசப்படுகிறது. இதன் விளைவாக அரசாங்கத்திற்குக் கிடைத்துக்கொண்டிருந்த வருமானத்துறை ஒழிந்தது ஒருபுறமிருக்க, திருட்டுத்தொழிலும் ஒழுக்கக்குறைவும் பரவி வருவதைக் கண்டுதான் மிகவும் வருந்துகிறோம்.

ஆகவே எல்லாச் சாராரையும் ஒன்றுகூட்டி ஆலோசனை செய்து நல்ல முறையிலே திருத்தி அமைக்க முன்வர வேண்டும். இதைப் பொறுத்து மத்தியப்பிரதேசக் கமிட்டியார் சொல்லியிருக்கும் யோசனையும் கவனிக்கற்பாலது.

விற்பனை வரியை ஒழுங்குபடுத்த

மதுவிலக்கினால் கிடையாது போன வருமானத்தை ஈடு செய்வதற்காக விற்பனைவரி விதிக்கப்பட்டது. இந்த வரிவிதித்தால் அநேக சிறு வியாபாரிகள் நசித்து விட்டார்கள். வரிப்பளுவினால் வியாபார நடைமுறையும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இதன் விளைவால் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செய்யவேண்டிய வியாபாரங்களெல்லாம் மறைமுகமாக நடைபெறுகின்றன என்று சொல்லுகிறார்கள்.

ஆண்டுக்கு மொத்த விற்பனை பத்தாயிரத்துக்குக் குறைந்தால் வரியில்லை. ஆனால் பண்டங்களின் விலை ஏற்றத்தினால் சிறிய வியாபாரிகளையும் இந்த அளவு மிகவும் பாதித்து விடுகின்றது. அதோடு ஒரு பண்டத்தின் மீது ஒரு தடவை மட்டிலும் வரி விதித்தால் விலைவாசியைப் பாதிக்காது. அதை விடுத்து ஒரே பண்டத்தின் மீது திருப்பித்திருப்பி வரி விதித்தல் ஏற்படுவதால் வியாபாரம் கட்டாமல் போவதுடன், அரசாங்கத்திற்குக் கிடைக்கவேண்டிய வரியும் மறைப்பதற்குத் தூண்டுகோலாகி விடுகிறது.

மேலும் வியாபாரிகள், குறிப்பாகச் சிறிய வியாபாரிகள் கணக்கு வைத்திருப்பதில் பெரிய சங்கடங்களிருக்கின்றன. அமுல் நடத்துகின்ற அதிகாரிகளுக்குக் கோபம் வந்துவிட்டால் தலை மீது கூடையில் வைத்து மீன் விற்கும் பெண்களுக்கும், இடுப்பில் பெட்டியில் வைத்து விற்கின்ற மாதர்களுக்கும் வரி விதிக்கக்கூடாது என்ற கேள்வி பிறந்து விடுகின்றது.

ஆகவே இன்றுள்ள தொல்லைகள் பல இருக்கின்றபடியால் எல்லாச்சாமானையும் ஒன்றுகூட்டித் தக்க திருத்தங்கள் செய்ய முற்பட வேண்டும்.

மனித ஆற்றலை ஊக்குவிக்க

நம் நாட்டில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் அநேக சங்கடங்களைச் சமாளிக்க முடியாமல் இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். போதிய உணவு கொடுக்க முடியவில்லை. கிடைக்கும் துணியோ காணவில்லை. வேலையோ கிடைப்பதில்லை. வருவாயும் போதவில்லை. குடியிருக்க இடத்தையும் காணோம், என்ற பல சங்கடங்களைச் சொல்லுகிறார்கள்.

மக்கட்செல்வந்தான் பெருஞ்செல்வம் என்று நாம் கருதுகிறோம். இச்செல்வத்தைப் பயன்படுத்துவதில்தான் தமது அறிவுத்திறனை அரசினர் காட்டவேண்டும். **நாட்டின் உயர்வை முன்னிட்டு யாரும் சோம்பலில்லாமல் உழைக்க எல்லோருக்கும் வழி செய்து கொடுக்க வேண்டும்.**

இந்தியநாடானது முக்கியமாக விவசாயநாடாக இருந்தும் உணவுப் பொருளுக்காக வெளிநாட்டை எதிர்பார்க்கக் கூடிய நிலைமையானது கேவலம். ஆங்கிலேயர் ஆண்ட

— தமிழ்த்தென்றல்

காலத்து இந்நாட்டை வெளியுலகுக்குப் பல துறைகளில் அடிமையாக வைத்திருந்தது தங்கள் நலனுக்காக அவர்களின் நோக்கமாக இருந்திருக்கலாம். ஆனால் விடுதலை அடைந்த பிறகும் விவசாயத்தைப் பெருக்கி நமக்கு வேண்டிய அளவு உணவைத் தேடிக்கொள்ளத் தவறியது ஆளவந்தவரின் தொலைவு நோக்கமின்மையைத்தான் காட்டுகிறது.

நமக்குப் பின் விடுதலையடைந்த சீனா தேசம் நமக்கு அரிசியை அனுப்ப ஆயத்தமாக இருக்கிறதென்றால் நமது பின் தங்கிய நிலையை யாரிடத்தில் சொல்லி நோவது?

நாட்டில் புதைந்து கிடக்கும் மூலப் பொருள்கள் எத்தனையோ இருக்கின்றன. விவசாயத்துக்கு ஏற்ற விளைநிலங்களும் அளவின்றிப் பரந்து கிடக்கின்றன. வேண்டியது மனிதன் முயற்சியும் உழைப்புந்தான். முயற்சியும் உழைப்பும் ஏற்பட உற்சாகம் ஊட்ட வேண்டும். உற்சாகம் ஏற்படுவதற்கு உடைமையிருந்தால் தானாகவே ஏற்பட்டு விடும்.

கிராமங்களில் உள்ள விவசாய மக்கள் கடன்பளுவைத் தாங்காமல் சொத்துக்களை விற்றுவிட்டு கூலிக்குக் கூட வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். ஏழைகளின் நிலங்களெல்லாம் ஒரு சில பணக்காரர்கள் கைக்கே போய்விட்டன. அவர்கள் நிலங்களை நேரடியாகவும் சரியாகவும் கவனிக்காமல் விட்டுவிட்டபடியால் விளைச்சல் மிகுதியாகப் பாதிக்கப்பட்டுப் பஞ்சநிலையும் வந்துவிட்டது.

— தமிழ்த்தென்றல்

விவசாயக் கடன் நிவாரணச் சட்டத்தால் நிலத்தை ஈடாக வைத்துக் கடன் வாங்குவது போய் நாளா வட்டத்தில் நிலங்களைக் கிரயமாக எழுதி வைத்தே கடன் வாங்கும் நிலை ஏற்பட்டு விட்டது. இப்படிக் கிரயமாகக் கொடுக்கப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் விவசாயத்தில் சம்பந்தமில்லாத புள்ளிகளிடமே சிக்கியிருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட பெருநிலக்கிழவர்களின் யோக்கியதை என்ன? ஏழை உழவர்களிடத்தில் சட்டத்துக்கு விரோதமான வழிகளில் அநியாய வட்டி வாங்குவதும், இறுதியில் சொத்துக்கள் பூராவும் பறித்துக்கொள்வதும்தானே! இந்தவிதமான நடவடிக்கைகளிலே குத்தப்பட்டோ வெட்டுண்டோ அல்லது கொலை செய்யப்பட்டோ அல்லது கொலை செய்தோ மேலும் கிராமக் கலகங்களை உண்டாக்கியோ விடாத நபர்கள் கிடைப்பது துர்லபம். தானும் உழைக்காமலும் உழைப்பவனுக்கு நிலம் கொடாமலும் நாட்டைப்பாழாக்கும் நிலச்சுவான்தார்கள் இருந்து பயனென்ன?

ஆகவே, நிலவுடைமை முறை மாற்றவேண்டியது அவசியமாகின்றதல்லவா? இதற்கு வழி பிறநாடுகளில் கம்யூனிஸ்டுக்கட்சியார் கையாளும் முறை நம் பண்பாட்டிற்கும் பரம்பரையியல்புக்கும் உகந்ததல்ல என்று கூறுகிறோம்.

ஆச்சார்யவினோபாபாவே என்பவர் நிலம் படைத்தோரிடமிருந்து

நிலங்களை இனாமாகப் பெற்று உழைக்கக்கூடியவர்களுக்கு ஆற்றலுக்கு ஏற்றவாறும் மற்றச் சூழ்நிலைக்கு ஏற்றவாறும் தேவையான அளவைப் பிரித்துக் கொடுத்துவரும் முறையை வரவேற்கிறோம். ஆதரிக்கிறோம்.

ஆகவே, நிலவுடைமையிலும் விரைவாக ஒரு மாறுதல் ஏற்பட வேண்டியதற்கு உடனடியாக வகை செய்ய வேண்டும். உழைப்பவர்களுக்கு நிலம் கிடைத்தால் ஊக்கம் பிறக்கும். ஆர்வம் அதிகப்படும். விளைச்சலும் உற்பத்தியும் பெருகும். பெருக்கத்தால் விலைவாசியும் குறையும். அதோடு ஆங்காங்கு இருக்கும் குடிசைக் கைத்தொழில்களுக்கு பலவற்றால் ஆக்கம் கொடுத்து ஆதரிக்கவேண்டும். மேலும் நம்மிடையே கிடைக்கக்கூடிய உலோகப் பொருள்களைக் கொண்டு தொழிற்சாலைகள் நிறுவி தொழிலாளிகளுக்கும், குறிப்பாக ஆண்டுதோறும் படித்து வெளியேறும் வாலிபர்களுக்கும் உற்சாகம் குறைந்து விடாமல் வேலை கொடுத்து நாட்டின் செல்வநிலையை உயர்த்த அரசினர் ஆவன செய்ய வேண்டும்.

சுயஆட்சி நிலையங்கள்

இப்பொழுது அமுலில் இருக்கும் நகராட்சிமன்றங்கள் பெயரளவில் சுய ஆட்சி பெற்றவையாக இருக்கின்றனவேயன்றி உண்மையில் அல்ல. அநேக துறைகளில் அவைகள்மேல் சென்னையிலிருக்கும் அதிகாரிகள் செலுத்தும் அதிகாரங்களைச் சுருக்கிவிட வேண்டுமென்று யோசனை கூறுகிறோம். இது சம்பந்தமாக யோசனை கூறுவதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டியின் தீர்மானங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்று விரும்புகிறோம்.

இப்பொழுது அமுலிலிருக்கும் ஜில்லா போர்டுகளுக்கு அதிகப்படியான அதிகாரங்களைக் கொடுப்பது பற்றி ஒரு விசாரணைக்குழு வேலை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு மாவட்டத்திலுள்ள ஊர்கள் அநேகமாக ஆங்காங்குள்ள கிராமப்பஞ்சாயத்துக்களின் அமுலுக்குள் வந்தபின் மாவட்டக்கழகத்தின் நிர்வாக வரம்புக்கு உட்பட்ட பிரதேசமில்லாத நிலைமை ஏற்படும். ஆகவே 1—11—1951-ல் வெளியேறிய "தென்றல்" இதழில்

"ஜில்லாப்போர்டுகளைக் கலைத்துவிட்டுப் புதிய கழகம் ஒன்று ஏற்படுத்த வேண்டும். இது மாவட்டச் சட்டசபைகள் !போல் விளங்க வேண்டும். இச்சபைக்கு யோசனை கூறும் உரிமையைத்தவிர எவ்வித நிர்வாகப்பொறுப்பும் கொடுக்கப்படவேண்டியதில்லை."

புத்தகங்கள், பத்திரிகைகள்
விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை

— தமிழ்த்தென்றல்

என்று எழுதியிருக்கிறோம். மேலும்,

"இம்மன்றத்தில் அவ்வட்டத்திலுள்ள எல்லாத் தலைமையதிகாரிகளும் உறுப்பினர்கள். (போலீசும் நீதியும் நீங்கலாக) ஆனால் அவர்களுக்கு ஓட்டுஉரிமை கிடையாது. மொத்தம் உறுப்பினரின் எண்ணிக்கை அறுபதுக்கு மேற்போகாமல் இருக்கலாம். அதிகாரிகளைத் தவிர மற்றவர்கள், முனிசிபாலிட்டி, கிராமப்பஞ்சாயத்து, கூட்டுறவு நிலையங்கள் போன்ற பொறுப்புள்ள தாபனங்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அத்துடன் மாவட்டத்திலுள்ள எல்லாச் சட்டசபைப் பிரதிநிதிகளும் தில்லிப் பார்லிமெண்ட் மெம்பர்களும் தங்கள் பதவியின் காரணமாக இம்மன்றத்தில் அங்கம் வகிப்பார்கள்"

என்றும் எழுதியிருக்கிறோம்.

மேலேசொல்லிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஜில்லாப்போர்டு முழுவதுமே திருத்தியமைக்க வேண்டுமென்று யோசனை கூறுகிறோம்.

பொதுவாக மேலே சொல்லிய மூன்று வகைப்பட்ட சுயஆட்சிநிலையங்களுக்குப் போதிய நிதி வசதி செய்து கொடுக்கப்படாவிட்டால் அந்தந்தக் கட்சியின் செல்வாக்கை ஏற்றக்கூடிய நிலையங்களாக ஆகுமே தவிர மக்களுக்கு உண்மையாகவும் நிரந்தரமாகவும் உள்ள நலன் எதுவுஞ் செய்ய முடியாதென்று எச்சரிக்கிறோம்.

பொது

புதிய வரிகளைப் போட்டு மக்களைச் சோதிப்பதைக் காட்டிலும் அரசாங்கச் செலவீனத்தைக் குறைக்க வழி தேடுவதே அறிவுடைமையாகும். அனாவசியமாகவும் தவிர்க்கக்கூடியதாகவும் பல பிரிவுகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஆட்களோ அதிகம். நடக்கும் மொத்த வேலையோ குறைச்சல். இவைகளை ஆராய்ந்து அறிய ஒரு குழு ஏற்படுத்தி அமுல் நடத்தினால் நல்ல பயனளிக்கும் என்று நம்புகிறோம்.

— தமிழ்த்தென்றல்

தில்லியின் திமிர்

காலத்தின் கோலம்



தில்லியிலுள்ள நடு இட அரசாங்கத்தில் வேலையில்லாத அநேக அமைச்சர்கள் இருக்கின்றார்கள். தங்களிடம் ஒரு இலாக்கா இருப்பதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று முற்பட்டுவிடுகிறார்கள். குறிப்பாகக் கல்வி இலாக்காவும் சுகாதார இலாக்காவும் தனித்தனியாக இருக்கவேண்டிய அவசியமே இல்லை. நாடு பூராவுக்கும் ஒரே கல்வி முறை, ஒரே சுகாதார ஏற்பாடு என்ற கோட்பாட்டிலும், தேசிய மொழி என்ற அகங்காரத்திலும் அவர்களால் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் நம் மாகாணத்தின் உரிமையை மிகுதியாகப் பாதித்துவிடுமென்றே அஞ்சுகிறோம். போதாக் குறைக்கு "என் பேச்சைக் கேட்டால் கேளுங்கள். கேளாவிட்டால் எனக்குக் கவலையில்லை" என்ற தோரணையில் இந்தியிலே பேச ஆரம்பித்து விட்டார் இரயில் மந்திரி. இந்தியைக் கட்டாயமாகத் திணிக்க முயலக்கூடாது என்று எச்சரிக்கும் நேருவே இந்திச் சங்கத்தை ஆரம்பித்து வைக்கிறார். இதற்குச் சப்பைக்கட்டுக் கட்டுகிறார் பேரறிஞர் டாக்டர் இராதாகிருஷ்ணன். அமைச்சர்கள் இந்தியில் பேசுவதை மறுக்கும் முகத்தான் தம் கண்டனத்தைத் தெரிவிப்பதற்குச் சபையை விட்டு வெளியேறிய டாக்டர் ஏ. கிருஷ்ணசாமியை மிகவும் பாராட்டுகிறோம். புகழ்பெற்ற உலகமேதை தந்தை ராமசாமி முதலியாரின் தோன்றல் அல்லவா? இதுபோன்ற இன்னும் பல தலையீடுகளால் தில்லி அரசாங்கம் தொல்லை கொடுக்கலாம். மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

— தமிழ்த்தென்றல்

சிறு பான்மையினரின் கொக்கரிப்பு

ஆச்சாரியாரைத் தலைமையாகக் கொண்ட மந்திரி சபை வந்துவிட்டபடியால், மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதிலும், தக்கவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பதிலும், பிராமணரல்லாதாரின் நலங்கள் கெட்டுவிடுமென்றும், இப்பொழுது கேந்திரமான இடங்களில் வேலையிலிருக்கின்ற பிராமணரல்லாத அதிகாரிகளுக்கு இடைஞ்சல் ஏற்படலாம் என்றும் அவநம்பிக்கையும், சஞ்சலமும் உண்மையாகவே ஏற்பட்டிருக்கின்றது என்று சொல்ல வருந்துகிறோம். இதற்குமுன் அமைந்திருந்த காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி செய்த காலத்தில் பிராமணர்கள் எவ்வித அச்சங்கொள்ளவும் இடமில்லாமல் இருந்தது. ஆனால் இப்பொழுது சாதாரண வேலையிலிருந்து மாகாணத்தில் தலைமை அதிகாரத்து வரைக்கும் உள்ள எல்லாத் துறைப் பிராமணர்களுக்கும் தைரியம் பிறப்பானேன்? மற்றவர்களுக்குப் பீதி உண்டாவதேன்? சட்டசபையில் பின்பலம் இருக்கிறதென்றும், பிரச்சாரத்துக்குப் பக்கபலமாகப் பத்திரிகைகள் இருக்கிறதென்றும் வகுப்பு நீதிக்கும் உரிமைக்கும் மாறாக அரசாட்சி நடைபெற முற்படுமாயின் பழிக்குப் பதில் சொல்லும் காலம் தொலைவில் இருக்காது என்று எச்சரிக்கின்றோம்.

உயர்ந்த ரகம்! குறைந்த விலை!
ராஜன் பார் சோப்
எங்களிடம் மஞ்சள், நீலம் சலவை பார் சோப்புகளும், கேக் சோப்பு தினுசுகளும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.
விவரங்களுக்கு: ராஜன் சோப் ஒர்க்ஸ்,
சோப் தயாரிப்பாளர்கள், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

ஆல் இந்தியா நேஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபிஸ்:

விருதுநகர்.

போர்டு-ஆப்-டைரக்டர்ஸ்

Thiru. V. V. இராமசாமி M. L. A.
,, M. S. பெரியசாமி நாடார்
,, K. M. A. C. வெயில்முத்துசாமி நாடார்
,, S. A. முத்து நாடார்
,, P. SV. P. ஏஜிநாதன்
,, K. S. சண்முகவேல் நாடார்
,, R. பொன்னையா ஆச்சாரி
,, V. A. P. சிவசாமி
,, P. P. சபாபதி நாடார்

ரூ. 250. ரூ. 400. ரூ. 500. ரூ. 750. ரூ. 1000-க்கு

நவீன இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள். தினம் ஓர் அணா சேமிக்க சாத்தியமுடையவர்களும் இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம். ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

P. SV. P. ஏஜிநாதன், ஜெனரல் டைரக்டர்.

V. V. இராமசாமி M. L. A. மேனேஜிங் டைரக்டர்.

209354

— தமிழ்த்தென்றல்

செந்தமிழ் நாட்டுச் செல்வச் சிறுவர்களுக்கு
[illegible]

சிறந்த உணவு எங்கள்

ராஜா பார்லி பிஸ்கட்

ஸ்தாபிதம்: 1926

தென்குமரி எல்லைமுதல் திருவேங்கடப் பதியதாம்
செந்தமிழ் நாடெங்கிலுமே சிறுவர் முதல் முதியோர் வரை
தென் உணவுக்கும் ராஜா பார்லியோடு பிஸ்கட் கேட்கும்
தேவை அமுதமென உட்கொண்டு மகிழுகிறார்.

ராஜா பிஸ்கட் கம்பெனி,

115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

கிளை:-2, பாலேஜ் ஹவுஸ், டவுன் ஹால் ரோடு

திரு. L. V. ... பிள்ளை

அச்சிட்டவர், வெளியிட்டவர்: V. V. இராமசாமி M. L. A., விருதுநகர் ... P. SV. P. ..., தமிழ்த்தென்றல் ... மதுரை